ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1888/46 - 2014 නොවැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2014.11.14

*1888/46 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (எதிர்நேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனம் (உடன்பாடு காணப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபை (எதிர்நேர்விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (உடன்பாடு காணப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயப்பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டுள்ள இங்கு கீழே காட்டப்பட்டுள்ள நகல் பிரதி துணைவிதி அப்பிரிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய இங்கு வெளியிடப்பட்டுள்ளது.*

அவ் நகல் பிரதி துணைவிதியில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் அடங்கிய துணைவிதியை தயாரிப்பதற்கு 255 ஆம் அத்தியாயத்தின் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 157 ஆவது பிரிவில் நகர சபைகளுக்கு அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அவ் நகல் பிரதி துணைவிதி மேலே சொல்லப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (எதிர்நேர்விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் (உடன்பாடு காணப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆவது பிரிவில் 3 ஆவது உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய மேல் மாகாண மாகாண சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு மேலும் அவ் ஒப்புதல் தொடர்பாகவுள்ள அறிவித்தல் ஒன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள மேல் மாகாணத்திற்குள் நகர சபைகளினால் ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன்.

பிரசன்ன ரணதுங்க,
மேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும்
திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி,
உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம் ,
மனிதவலு மற்றும் தொழில் வாய்ப்பு,
பொறியியல் சேவைகள் மற்றும் ஊடகச் செய்தி தொடர்பான
அமைச்சர்.

மேல் மாகாண சபையின் முதலமைச்சு,
சிராவஸ்த்தி கட்டிடத் தொகுதி,
ஸ்ரீமத் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை,
கொழும்பு 07.
2014, நவெம்பர் 03.

**அலங்கரிப்பு பணிகளை ஒழுங்குபடுத்துவதற்கான துணைவிதி**

1. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்தில் அலங்கரிப்பு பணிகளை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் அதற்கான கட்டணம் அறவிடுவதற்குமாக, நிறைவேற்றப்படுவதாகுக.

2. இத்துணைவிதி நகர சபையின் அதிகார பிரதேசத்தில் அலங்கரிப்பு பணிகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான துணைவிதியாக எடுத்துக்காட்டப்படலாம்.

3. பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள வீதிகளில் பொதுமக்களினால் மேற்கொள்ளப்படும் அலங்கரிப்பு பணிகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் இத்துணைவிதியின் குறிக்கோளாகும்.

4. இங்கு இதனகத்துப்பின்னர் நகர சபையின் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் பணிக்கப்பட்டுள்ள அதிகாரியினால் வழங்கப்படும் உத்தரவுப்பத்திரமின்றி எவராவது ஒருவரினால் நகர சபை அதிகார பிரதேசத்திலுள்ள வீதி மற்றும் பிரசித்திபெற்ற பொது இடமொன்றில் அலங்கார பணிகளை மேற்கொள்ளப்படலாகாது.

5. எவராவது அல்லது அலங்கரிப்பு பணிகளுக்காக உத்தரவு பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் போது, இத்துணைவிதியின் 1 ஆவது அட்டவணைக்கு அமைய விண்ணப்பத்தை அலங்கரிப்பு பணிகளை மேற்கொள்பவர்கள் 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் சபையின் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

6. விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் அலங்கரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக இத்துணைவிதியின் ஏற்பாடுகளுக்கு அமைய உத்தரவுப்பத்திரம் ஒன்று தலைவரினால் வழங்கப்படும்.

7. உத்தரவுப்பத்திரத்தின் கீழ் உள்ள எவராவது அல்லது அலங்கரிப்பதற்காக எவராவது அல்லது எச்சந்தர்ப்பத்திலும் பொலிதீன் பாவனைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

8. இத்துணைவிதியின் கீழ் வரும் அனைத்து உத்தரவு பத்திரத்திற்குமான அறவிடப்பட வேண்டியுள்ள கட்டணங்கள் சபையினால் காலத்திற்கு காலம் எடுக்கப்படும் தீர்மானத்தின் உடன்பாட்டின் ஊடாக தீர்மானிக்கப்படும் கட்டணமாக கருதப்படும்.

   (1) இத்துணைவிதியின் கீழ் சகல அலங்கரிப்பு பணிகளுக்காகவும் விண்ணப்பிக்கும் சகலரும் அதற்காக சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளபடி வைப்புத் தொகையொன்று சபையில் வைப்பிடல் வேண்டும்.

   (2) உத்தரவு பத்திரம் பெற்ற எவராவது ஒருவரினால் செய்யப்படும் ஏதாவது அலங்கரிப்பு பணியை உத்தரவுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட அலங்கரிப்பை அகற்றப்படல் வேண்டுமென்று குறிக்கப்பட்டுள்ள திகதியின் 24 மணி நேரத்திற்குள் அவ் அலங்கரிப்பு அகற்றப்படாவிட்டால், சபையினால் அந்த அலங்கரிப்பு பணிகள் அகற்றப்பட்டு அதற்கான செலவை, சபையில் இதற்காக வைப்பீடு செய்யப்பட்டுள்ள வைப்புத் தொகையிலிருந்து அறவிடப்பட்டு ஏதாவது மிகுதி தொகை இருப்பின், அவற்றை வைப்புச் செய்தவருக்கு மீள வழங்குவது சட்ட ரீதியானதாகும்.

9. 8 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மரணச்சடங்குகளுக்கான அலங்கரிப்பு பணிகளுக்கு ஏற்புடையதாகாது.

10. இத்துணைவிதியின் கீழ் செய்யப்படும் அலங்கரிப்பு பணிகள் பிரதேசத்தின் வீதி சமிக்ஞை பலகை, பிரதேசத்தின் படங்கள், மற்றும் பெயர்ப்பலகைகள் போன்றவற்றை மறைக்கக்கூடிய வகையில் அல்லது இடைஞ்சல் ஏற்படக்கூடிய விதத்தில் செய்யப்படலாகாது.

11. இத்துணைவிதியை எவராவது அல்லது ஏற்பாடுகளை கட்டுமீறுதல் அல்லது முரணாக மீறுதல் என்பன குற்றமாவதுடன், இக்குற்றம் சம்பந்தமாக குறித்த அதிகாரம் கொண்டுள்ள நீதிமன்றத்தில் ஊடாக அக்குற்றத்திற்கு குற்றவாளியாக காணப்படும் போது பணிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டனை மற்றும் அதனைக் கட்டு மீறுதல் அல்லது முரணாக தொடர்ந்து மேலும் செயற்படும் போது அது தொடர்பாக குற்றவாளியாக கொள்ளப்பட்ட பின்னர் அல்லது அத்தகைய முரணான செயற்பாட்டில் கவனம் செலுத்தப்பட்டு தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்றுள்ள வேறு உத்தியோகத்திரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒப்படைக்கப்பட்ட பின்னர் கட்டுமீறுதல் அல்லது முரணாக மேலும் தொடர்ந்து செய்து வரும் அனைத்து ஒவ்வொரு நாளுக்குமாக பணிக்கப்பட்டுள்ள மேலதிக தண்டனையின் ஆகக்கூடியது முறையே 255 ஆவது அதிகாரமான நகரசபை கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவில் பணிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டனை ஆகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

12. வசனங்கள் சம்பந்தமாக பொருள்கோடல் தேவைப்பட்டால் மாத்திரமின்றி இத்துணை விதியில் –

"சபை" என்பது, நகர சபை.

"தலைவர்" என்பது, நகர சபையின் தலைவராகவும் கருதப்படும்.

"அலங்கரித்தல்" என்பது, ஏதாவது நிகழ்ச்சி அல்லது ஏதாவது பணியை நோக்கமாகக் கொண்டு செயற்கை அல்லது இயற்கை பொருட்களைக் கொண்டு அந்த நிகழ்ச்சி அல்லது பணிகளில் பங்கு பற்றுவதற்காக தற்காலிகமாக மேற்கொள்ளப்படும் தயாரிப்புக்கள் என கருதப்படும்.

## I ஆவது அட்டவணை

விண்ணப்பப்படிவம்

1. அலங்கரிப்பு செய்யப்படும் வீதி அல்லது பொது இடத்தின் பெயர் :..........................................................
.............................................................................................................................................
2. அலங்கரிப்பு பணிகளின் தன்மை :.............................................................................................
.............................................................................................................................................
3. அலங்கரிப்பு பணிகளுக்கான கால எல்லை :.................................................................................
.............................................................................................................................................
4. அலங்கரிப்பு பணிகளின் நோக்கம் :..........................................................................................
.............................................................................................................................................
5. அலங்கரிப்பு பணிகள் அகற்றப்படும் திகதி :..................................................................................
.............................................................................................................................................
6. அப்புறப்படுத்தப்படுபவை எவ்வாறு அகற்றப்படும்? என்பது :...............................................................
.............................................................................................................................................

நகர சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பணிப்புகளுக்கு அமைவானதாக அலங்கரிப்பு பணிகளை காட்சிப்படுத்துதற்கு இணங்குவதுடன் அது தொடர்பான துணைவிதி அல்லது அங்கு ஏதாவது பிரிவை மீறுவது தண்டனை கிடைக்கக்கூடிய குற்றமென்பதை நான் நன்கு அறிவேன்.

..........................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :.....................

## வெதுப்பகம் தொடர்பான துணைவிதி

1. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்தினுள் கொண்டு நடாத்தப்படும் வெதுப்பகங்களை, ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்றவற்றை நிறைவேற்றப்படுவதாகும்.

2. இத்துணைவிதி நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் உள்ள வெதுப்பகங்கள் தொடர்பான துணைவிதியாக எடுத்துக் காட்டப்படலாம்.

3. இத்துணைவிதியின் கீழ் தலைவரினால் தனக்குரிய பணிகளுக்காக வழங்கப்படும் செல்லுபடியாகும் உத்தரவுப் பத்திரமொன்று இருந்தால் மட்டுமேயன்றி எவராவது அல்லது ஒருவரினால் நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் வெதுப்பகமொன்றை கொண்டு நடாத்த முடியாது.

4. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் சகல உத்தரவுப் பத்திரங்களும் முன்பு இரத்துச் செய்யப்பட்டால் மட்டுமேயன்றி அந்த உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதாவது வருடத்திற்காகவும் அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவுபெறும்.

5. இத்துணைவிதியின் கீழ் காட்டப்பட்டுள்ள பணிப்புகள் அம்முறைகளில் பூர்த்தி செய்யப்பட்டால் மாத்திரமேயன்றி தலைவரினால் எவருக்காவது அல்லது வெதுப்பகமொன்றுக்கு உத்தரவுப் பத்திரமொன்று வழங்கப்படலாகாது.

(1) வெதுப்பத்தில் உற்பத்தி செய்யப்படும் உணவு வகைகளுக்கான சூடாக்கும் வெப்பம் பெறப்படும் வழிகள் எவ்வாறானது என்பதனை இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகள் அதற்காக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(i) வெதுப்பகம் போதிய புதுப்பித்தல் நிலையில் புதுப்பிக்கப்பட்டிருத்தல் ;

(ii) வெதுப்பகத்தில் சகல அறைகளிலும் வெளியில் திறக்கக்கூடிய வகையில் ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் அத்துடன் திறக்கப்படும் போது ஜன்னல் கதவுகளின் இடைவெளி அளவு அறைகளின் நிலப்பரப்பில் பதினைந்தில் ஒன்றுக்கு குறையாத வகையில் அமைத்திருத்தல் ;

(iii) சகல அறைகளிலும் சீலிங் கூரைகள் பொருத்தப்பட்டிருப்பதுடன் வெள்ளை நிறத்தில் வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iv) சகல அறைகளிலும் உள்ள நிலப்பகுதி சீமெந்து மூலம் போடப்பட்டிருப்பதுடன் அல்லது தரை ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(v) வெதுப்பகத்தின் அடுப்பு அமைக்கப்பட்டுள்ள அறை நிலமட்டத்திலிருந்து சீலிங் மட்டம் வரை ஆகக்குறைந்தது 3 மீற்றர் உயரத்தைக் கொண்டிருப்பதுடன் கற்கள் அல்லது சீமெந்து கல் அல்லது கபூக்கல் போன்றவற்றினால் நிர்மாணிக்கப்பட்டு பூச்சுவேலைகள் செய்யப்பட்டு வர்ணம் பூசப்படுதல் வேண்டும் ;

(vi) வெதுப்பகத்தின் அடுப்பு அமைக்கப்பட்டுள்ள அறையைத் தவிர ஏனைய சகல அறைகளினதும் அடித்தளம் நிலமட்டத்திலிருந்து சீலிங் கூரை மட்டம் வரை குறைந்த மட்டம் 2.75 மீற்றர் உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் செங்கற்கள், அல்லது சீமெந்து கற்கள் அல்லது கபூக்கல் அல்லது அலுமினியம் மற்றும் மரத்தினால் கட்டப்பட்டு இரண்டு பக்கங்களையும் பூச்சு வேலைகள் செய்யப்பட்டிருத்தல் அதுமட்டுமன்றி வர்ணங்கள் பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(vii) வெதுப்பகத்தினுள் மரத்தினால் செய்யப்பட்டு சகல பொருத்தப்பட்டிருக்கும் பகுதிகளும் மையினால் வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும். கூரை ஏதாவது நிரந்தர பொருளினால் அமைக்கப்பட்டிருப்பதுடன் கூரையின் மூலைகள் நிலமட்டத்திலிருந்து குறைந்தது 1. 8 மீற்றர் உயரத்தில் அமைந்திருத்தல் வேண்டும். அதனுடைய கூரை இடைவெளி குறைந்தது 1 மீற்றர் கொண்டுள்ளதாக அமைக்கப்படல் வேண்டும் ;

(viii) உற்பத்திப் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் நீர் சிறந்த நிலையில் இருப்பதற்கான ஏற்பாடுகளை செய்திருத்தல் வேண்டும் ;

(ix) உற்பத்தி பணிகளுக்காக நீரைப் பயன்படுத்தும் சகல அறைகளிலும் பாதுகாப்பான நீர்க் குழாய்கள் ஊடாக நீர் வழங்கப்படுவதுடன், அகற்றப்படும் அசுத்தமான நீரை அகற்றுவதற்கான வடிகால் முறைகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

(x) அகற்றப்படும் அசுத்த நீரை உறிஞ்சக்கூடிய குழிகள் அமைக்கப்பட்டு அதனூடாக வடிந்து செல்லக்கூடிய வடிகால்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(xi) இத்துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள முறைகளுக்கு அமைய கழிவுப் பொருட்கள் அகற்றுவதற்கான வழிமுறைகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) உத்தரவுப்பத்திரம் விண்ணப்பிக்கும் வெதுப்பகத்தில் விறகு பாவிக்கப்படும் வெதுப்பகமாக இருப்பின் :-

(i) வெதுப்பக அடுப்பின் புகை கூட்டினது அதிஉயர மட்டம் நிலமட்டத்திலிருந்து 7.5 மீற்றர் உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ii) மாவைப் பிசைதல்களுக்கான சகல மேசைகளினதும் மேல் பக்கம் பழுதில்லாதவாறு மட்டமாகவும் மிருதுவாகவும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பலகைகள் இடைவெளியில்லாமல் மிருதுவான பலகைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இல்லையேல் துருப்பிடிக்காத உலோக தகடுகளினால் அம்மேசையின் மேற்பகுதிகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) வெதுப்பகத்தின் அடுப்புகளிலிருந்து அகற்றப்படும் மரச் சாம்பல்கள், எஞ்சியிருக்கும் விறகுத் துண்டுகள் என்பவற்றை அகற்றுவதற்காக போதுமான அங்குமிங்கும் கொண்டு செல்லப்படும் பாத்திரங்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iv) வெதுப்பகத்தின் அடுப்பின் வெளிப்பகுதியில் மைவர்ணம் அல்லது சுண்ணாம்பு கலவை பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(v) பொதுவாக தீயணைப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் அத்துடன் வெதுப்பகத்திற்கு மின்சாரம் பெறப்பட்டிருந்தால் மேலதிகமாக மின் அணைப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(3) உத்தரவுப்பத்திரம் விண்ணப்பிக்கும் வெதுப்பகத்தில் மின்சக்தி பாவிக்கப்படும் வெதுப்பகமாக இருப்பின் :-

(i) வெதுப்பக உபகரணங்களுக்கு மின்இணைப்பை ஏற்படுத்தும் மின்சார மின் ஆப்புகள் பாதுகாப்பான நிலையில் பேணப்படுவதுடன் அதிக மின் அழுத்தம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அல்லது மின்சார ஒழுக்குகள் ஏற்படும் சந்தர்ப்பத்திலும் தன்னியக்க மின்துண்டிப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ii) வெதுப்பக சூழலில் பொருத்தப்பட்டுள்ள மின்சார சுற்றுப்பாதையின் மின்சார கம்பிகளில் வெளியே மின்சார ஒழுக்குகள் இன்றி குழாய் அல்லது பெட்டியினுள் அமைக்கப்படுவதுடன், வெளியே பாதுகாப்பற்ற மின்கம்பிகளின் விளிம்புகளில் திறக்கப்பட்டிருத்தலாகாது ;

(iii) பொதுவாக தீ அணைக்கும் உபகரணங்கள் மற்றும் மின் சுற்றுப் பாதையில் மின் கம்பிகளில் வெளியே மின்சார ஒழுக்குகள் ஏற்படாத வகையில் குழாய்கள் அல்லது பெட்டிகளுக்குள் இழுக்கப்பட்டிருப்பதுடன் வெளியே பாதுகாப்பற்ற மின்சார இணைப்புக் கம்பிகள் விளிம்புகளில் வைக்கப்பட்டிருத்தலாகாது.

6. மை வர்ணம் பூசப்பட்டிருப்பதுடன் 5 ஆவது துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள சகல பகுதிகளுக்கும் குறைந்த அளவு ஒவ்வொரு வருடத்திலும் ஒரு முறை வீதம் மை வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

7. மாவைப் பிசைதலுக்காக பயன்படுத்தப்படும் சகல அறைகளிலும் உள்ள அடித்தளங்கள் ஒவ்வொரு நாளும் ஒரு முறை கழுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

8. வெதுப்பகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளின் கால்வாய்கள், மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன மிக சுத்தமாகவும் மற்றும் போதிய புதுப்பித்தல் தன்மையுடனும் வைத்திருத்தல் வேண்டும்.

9. வெதுப்பகத்தின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் மாவு மற்றும் ஏனைய பொருட்கள் காலாவதியாகும் திகதி போதுமான காலம் முன் இருப்பதுடன் மட்டுமன்றி ஏதாவது சந்தர்ப்பத்தில் அத்தகைய காலாவதியான பொருட்களை வெதுப்பக உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தலாகாது.

10. (1) ஏதாவது தொற்றுநோய், தொடுநோய் அல்லது சர்மநோய்களினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது மிக அண்மையில் அத்தகைய நோய்களினால் பீடிக்கப்பட்டிருக்கும் எவராவது அல்லது ஒருவர் அல்லது அத்தகைய ஏதாவது நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் ஒருவருக்கு அண்மையில் பரிகாரம் செய்யப்பட்டு வரும் ஒருவருக்கு அந்நோயின் கிருமிகள் அழிவடையும் கால எல்லைக்குள் உட்பட்டிருத்தல் மட்டுமேயன்றி எவராவது அல்லது உத்தரவுப்பத்திரம் பெறப்பட்டுள்ள நிலையத்தில் எவராவது அல்லது முறைகளில் அல்லது பணிகளில் ஈடுபட்டுள்ள எவராவது ஒருவருக்கு அல்லது அவரின் உதவியாளருக்கு அல்லது பணியில் ஈடுபடுத்துவதற்கு அல்லது ஈடுபடச் செய்தல் அல்லது ஏதாவது பணிகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்படலாகாது.

(2) நன்றாக துவைக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ள உடைகளை அணிந்துள்ளவர்களைத் தவிர எவராவது அல்லது ஒருவரினால் உத்தரவுப் பத்திரம் பெறப்பட்ட நிலையத்தில் ஏதாவது அல்லது முறைகளில் பணிகளில் ஈடுபடுத்தல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் அல்லது மேற்கொள்ளப்படகாலாது.

(3) உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல பணியாட்களையும் வருடத்திற்கு ஒரு முறையாவது வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துவது உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

11. வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல பணியாட்களுக்கும் பாதுகாப்பு கவசம், கையுறை மற்றும் தேவையான ஏனைய பாதுகாப்பு மேலாடைகள் வழங்கப்படுவதுடன், அச் சேவையில் வெதுப்பகத்தில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவ் உடைகளை அணிந்துள்ளனர் எனவும் வெதுப்பக பணிகளில் ஈடுபடுவதற்கு முன்பு நன்றாக கைகள் கழுவப்பட்டு சுத்தமாகவும் இருந்து செயல்படுகின்றனர் என்பதை வெதுப்பக உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள பயளானியினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

12. (1) உத்தரவுப்பத்திரம் பெறப்பட்டுள்ள நிலையத்தினுள் உருவாகும் சகல கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்பட்டால் மாத்திரமேயன்றி ஏனைய கழிவுப் பொருட்கள் :-

(i) உக்கல்கள் கழிவுப்பொருள் ;

(ii) கண்ணாடி ;

(iii) கடதாசி அல்லது கடதாசியிலான பொருட்கள் ;

(iv) பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் மற்றும் இரும்பு மற்றும் ஏனைய உலோகங்களின் பகுதிகள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது ஏனைய உலோகப் பகுதி;

(vi) உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் ஏனைய மூலப்பொருட்களின் எஞ்சிய பகுதிகள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கும் மற்றும் துணை உற்பத்தி பொருட்களின் பகுதிகள் ;

(vii) தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள்.

போன்ற வகைகளின் கீழ் வகைப்படுத்துவதற்கு திட்டமிடப்படுவதுடன் ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களையும் சேர்த்து வைப்பதற்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள வெவ்வேறான பாத்திரங்கள் அல்லது தொட்டிகளில் போடுவதற்கும் திட்டமிடப்படுவது உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

13. வெதுப்பகங்களின் உற்பத்திக்காக மனிதர்களின் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற நீரை பயன்படுத்துவது தவிர்க்கப்படல் வேண்டும்.

14. வெதுப்பகங்களின் பாவனைக்காக வைக்கப்பட்டுள்ள மா மற்றும் ஏனைய பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக வெவ்வேறான அறைகள் பாவிக்கப்படுவதுடன் அவ் அறைகளுக்கு போதிய காற்றோட்ட வசதிகளுடனும் ஈ அல்லது ஏனைய ஊரும் விலங்குகள் மற்றும் எலி என்பன நுழையாதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

15. 14 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள களஞ்சிய அறைகளில் மாவை களஞ்சியப்படுத்தப்படும் போது குறைந்த அளவு நில மட்டத்திலிருந்து சென்ரி மீற்றர் 20ஐ கொண்ட உயரத்தையுடைய கால்களைக் கொண்டு செய்யப்பட்ட மரத்தட்டுகள் உபயோகிக்கப்படுவதுடன், மரத்தட்டுகளிலான அவற்றை அங்குமிங்கும் கொண்டு செல்லக்கூடிய வகையில் தயார் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அது போன்று அம் மரத்தட்டுகளின் கீழ் எலி மற்றும் ஏனைய கிருமிகள் தங்கி இருக்க முடியாத வகையில் மறைக்கப்படல் வேண்டும். குறைந்தது சுவரிலிருந்து 23 சென்ரி மீற்றர் தூரத்தில் அவை வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

16. 15 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள மரத்தட்டுகள் குறைந்த அளவு மாதத்திற்கு இரண்டு முறை வீதம் அறையிலிருந்து வெளியில் எடுக்கப்பட்டு சுத்தப்படுத்துவதற்கு திட்டமிடப்படுவது உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

17. இத்துணை விதியின் கீழ் உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள ஏதாவது அல்லது நிலையத்தில் எவராவது அல்லது ஒருவர் நித்திரை கொள்வது தவிர்க்கப்படுவதுடன், வெதுப்பகத்தின் பணிகளுக்காக பாவிக்கப்படும் உபகரணங்கள் அல்லது பொருட்கள் அல்லது அல்லாத ஏதாவது பொருட்களை வைப்பது அல்லது களஞ்சியப்படுத்துவது அல்லது தவிர்க்கப்படல் வேண்டும். அப்படியாயினும் வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவருக்காக தனியாக ஒதுக்கப்பட்டுள்ள ஓய்வு அறை அல்லது உணவு உண்ணப்படும அறை என்பன இதற்கு உட்படுத்தலாகாது.

18. வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள சேவையாளர்களுக்காக சகல பத்து பேர் கொண்ட ஒரு குழுவுக்கு ஒரு மலசலகூடம் வீதம் அமைக்கப்படுவதுடன் அது தவிர பெண்கள் மற்றும் ஆண்களுக்காக வெவ்வேறான மலசல கூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

19. வெதுப்பகத்தின் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் நீர் நிலத்தில் பதிக்கப்பட்டுள்ள தொட்டியொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தால் அத்தொட்டியிலிருந்து குறைந்தது 18 மீற்றருக்கு குறையாத தூரத்தில், மலசலகூட குழி, கழிவுப்பொருள் குழி, அல்லது பசளைக்குழி அல்லது சாம்பல் போடப்படுவதற்கான குழி என்பன அமைக்கப்படலாகாது.

20. வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள சகல பணியாட்களுக்குமாக சுத்தமான குடிநீர், சுத்தமான துவாய்கள், நகங்களை துப்பரவு செய்வதற்காகவுள்ள தூரிகைகள் சோப் அல்லது கலவை நீர் என்பன வழங்கப்படல் வேண்டும்.

21. எவராவது அல்லது ஒருவரினால் வெதுப்பகத்தின் உட்பகுதியில் நிரந்தரமாக அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தை தவிர்ந்த ஏனைய இடங்களில் புகைப்பிடித்தல் அல்லது வெற்றிலை உண்ணுதல் அல்லது வேறு தடை செய்யப்பட்ட பொருட்களை விநியோகித்தல் அல்லது உணவு உண்ணுதல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

22. இத்துணைவிதியின் கீழ் உத்தரவுப் பத்திரம் சகல இடங்களிலும் நன்றாக தெரியக்கூடிய இடத்தில் வைக்கப்பட்டுள்ள சம தராசுடனான படி அல்லது ஏனைய ஏதாவது வகை சமமான தராசுகளை வைத்திருப்பதற்கு திட்டமிடல் செய்யப்படுவதுடன், மற்றும் எவராவது வாடிக்கையாளரினால் வேண்டப்படும் போது விற்பனை அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஏதாவது வெதுப்பகத்தின் உற்பத்தியின் நிறையை நிறுத்துப் பார்ப்பதற்கு அல்லது நிறையை நிறுத்து காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுவது உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

23. ஏதாவது வெதுப்பகமொன்றில் உற்பத்தி செய்யும் வெதுப்பக உற்பத்தி உத்தரவு பத்திரம் பெற்றுள்ள பயனாளியினாலேயே விற்பனைக்கு கொண்டு செல்லப்படுவதாயின் தூசு அல்லது ஏனைய கழிவுப்பொருட்கள் அல்லது நீர் உட்புக முடியாத வகையில் அவை பாதுகாப்பான பெட்டிகளினுள் வைக்கப்பட்டு கொண்டு செல்லப்படுவது உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

24. இத்துணைவிதியின் பணிப்புரைகளை பரிசீலனை செய்வதற்கு தலைவருக்கு அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு பரிசீலனை செய்வதற்கு அதிகாரம் கிடைத்த உரிய காலம் செல்வதற்குள் நிலையத்தில் உற்பத்தி அலுவல்கள் செய்யப்படும் எத்தகைய சந்தர்ப்பத்திலும் அவை மேற்கொள்ளப்படும்.

25. தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தரினால் ஏதாவது வெதுப்பகமொன்றில் உற்பத்தி செய்யப்படும் அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது உணவு வகைகளின் மாதிரியை அங்கு அதற்கான பணம் செலுத்தி பெற்றுக்கொள்வது சட்ட ரீதியானதாகும். அப்படி இருந்தும் அதனைத் தவிர்த்து எவராவது அல்லது உத்தரவுபத்திரம் பெற்றுள்ள பயனாளியினால் அவ்வாறு கொள்வனவு செய்வதை நிராகரிப்பது அல்லது தடைகளை ஏற்படுத்துவது என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

26. இத்துணை பிரிவின் கீழ் உத்தரவுப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதாவது வெதுப்பகமொன்றை கொண்டு நடாத்தப்படும் நிலையம் 5 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள யாராவது அல்லது பணிப்புரைகளுக்கு அமைவாக நடாத்தப்பட்டு அவை முடிவுற்றால், அல்லது இத்துணைவிதியின் வேறு ஏதாவது துணைவிதியின் பணிப்புரைகளுக்கு முரணாக செயல்படும் சந்தர்ப்பத்தில் நிலையாக குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்பு அந்நிலையம் அப்பணிப்புரைகளுக்கு இசைவான நிலையில் கொண்டுவரப்பட்டு தேவையான சகலதையும் நிலை நாட்டுமாறு உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ளவருக்கு பணிக்கப்படும் அறிவித்தல் ஒன்று தலைவரினால் அந்த உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ளவருக்கு ஒப்படைப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

27. 26 ஆவது துணைப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கமைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எவராவது அல்லது உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ளவரினால் அவ்வறிவித்தல் நிலையாக குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்பு அவ்வறிவித்தல் பணிக்கப்பட்டுள்ள முறைக்கு அமைவாக செயல்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் விடயங்கள் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சில சந்தர்ப்பங்களில் அவ்வறிவித்தலில் நிலையாக குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கு சபைத் தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். அப்படி இருந்தும் அம்முறைக்கு அமைவாக நீடிக்கப்பட வேண்டிய காலம் பதினான்கு நாட்களுக்கு மேற்படலாகாது.

28. 27 ஆவது துணைப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எவராவது அல்லது உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ளவரினால் அவ் அறிவித்தலில் நிலையாக பணிக்கப்பட்டுள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன்பு அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ள முறைக்கு அமைவாக செயற்படுவதை தட்டிக் கழிக்கும் சந்தர்ப்பத்தில் அந் நிலையத்திற்காக வழங்கப்பட்டுள்ள உத்தரவு பத்திரத்தை சபைத் தலைவரினால் இரத்துச் செய்யப்படுவது சட்டரீதியானதாகும்.

29. இத்துணைவிதியின் எவராவது அல்லது ஏற்பாடுகளை கட்டுமீறுதல் அல்லது முரணாக செயற்படுதல் என்பன குற்றமாவதுடன், குற்றம் சம்பந்தமாக குறித்த அதிகாரம் பெற்றுள்ள நீதிமன்றத்தின் ஊடாக அக்குற்றத்திற்கு குற்றவாளியாக ஆக்கப்படும் சந்தர்ப்பத்தில் விதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய தண்டம் மற்றும் அந்த கட்டுமீறுதல் அல்லது முரணாக செயற்படுதல் என்பவற்றை தொடச்சியாக மேலும் செய்யப்படும் போது அது தொடர்பாக குற்றவாளியாக ஆக்கப்பட்ட பின்னர் அல்லது அக்கட்டு மீறுதல் பற்றி கவனம் செலுத்தப்பட்டு தலைவரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் எழுத்துமூலமான அறிவித்தல் ஒன்று ஒப்படைக்கப்பட்ட பின்னர் கட்டுமீறுதல், அல்லது முரணாக செயற்படுதல் என்பற்றை மேலும் தொடர்ச்சியாக செய்யப்படும் அனைத்து ஒவ்வொரு நாட்களுக்கும் விதிக்கப்பட முடியுமான மேலதிக தண்டனையின் ஆகக்கூடியது முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவில் (2) ஆவது உட்பிரிவில் குறித்தொதுக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டப்பணம் ஆகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

30. இத்துணைவிதியில் வசனங்கள் சம்பந்தமாக பொருள் கோடல் தேவைப்பட்டால் மாத்திரமன்றி :-

"சபை" என்பது, நகர சபை எனக் கருதப்படும் ;

"தலைவர்" என்பது, நகர சபையின் சபைத் தலைவர் எனக் கருதப்படும் ;

"நகரசபை அதிகாரப் பிரதேசம்" என்பது, நகர சபை அமைக்கப்பட்டுள்ள அதிகார பிரதேசத்தை உள்ளடக்கப்பட்ட பிரதேசமாகும் ;

"அதிகாரப் பெற்றுள்ள உத்தியோகத்தர்" என்பது, நகர சபையின் தலைவரினால் நிலையாக, பணிகளுக்காக அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் எனக் கருதப்படும்.

**அழுத்தங்களை ஏற்படுத்தும் வியாபாரம், தீங்கு விளைவிக்கும் வியாபாரம், அழுத்தம் மற்றும் தீங்கு விளைவிக்கும் வியாபாரம் தொடர்பான துணைவிதி**

1. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்தினுள் அழுத்தங்களை ஏற்படுத்தும் வியாபாரம், தீங்கு விளைவிக்கும் வியாபாரம் மற்றும் அழுத்தங்களை ஏற்படுத்தல் மற்றும் தீங்கு விளைவித்தல் வியாபாரங்களை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணம் அறவிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு நிறைவேற்றப்படுவதாகுக.

2. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்திலுள்ள அழுத்தங்களை ஏற்படுத்தும் வியாபாரம் மற்றும் தீங்கு விளைவிக்கும் வியாபாரம் தொடர்பான துணைவிதியாக எடுத்துக்காட்டப்படலாம்.

3. நகர சபையின் தலைவரினால் தனக்குரித்தான பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ள உத்தரவுப்பத்திரத்தின் அடிப்படையைத் தவிர எவராவது ஒருவரினால் நகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் இத்துணைவிதியின் அட்டவணையின் கீழ் காட்டப்பட்டுள்ள அழுத்தங்களை ஏற்படுத்தும் வியாபாரம் , தீங்கு விளைவிக்கும் வியாபாரம் அல்லது அழுத்தங்களை ஏற்படுத்தும் வியாபாரங்களை கொண்டு நடாத்துவது தவிர்க்கப்படல் வேண்டும்.

4. முன்பு இரத்துச் செய்யப்பட்டிருந்தால் மாத்திரமேயன்றி, அத்தகைய சகல உத்தரவுப்பத்திரங்களும் அவை வழங்கப்பட்டுள்ள ஏதாவது வருடம் ஒன்றுக்காக அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை அமுலில் இருக்கும்.

5. வியாபாரம் சுற்றாடல் மற்றும் அப்பணிகளுக்காக உபயோகிக்கப்படும் ஏதாவது நிரந்தர கட்டிடமாயின் அது தலைவரினால் அனுமதிக்கப்பட்டுள்ள திட்டத்திற்கு அமைய நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடமொன்றாக இருத்தல் வேண்டும். அத்துடன் அக்கட்டிடம் கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக இருந்தால் மாத்திரமேயன்றி எவராவது ஒருவர் அழுத்தங்களை ஏற்படுத்தும் வியாபாரம் , தீங்குவிளைவிக்கும் வியாபாரமொன்றை அல்லது அழுத்தம் மற்றும் தீங்குவிளைவிக்கும் வியாபாரத்தை கொண்டு நடாத்துவதற்காக உத்தரவுப்பத்திரம் ஒன்றை பெறுவதற்கான உரிமை கிடைக்கமாட்டாது.

   (1) சுற்றாடல் சிறந்த மீள் அமைப்பு நிலையிலும் மற்றும் போதிய அளவு காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் கிடைக்கக்கூடிய வகையிலும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் சகல அறைகளும் திறக்கப்படும் போது வீட்டு நிலப்பரப்பின் அளவில் பதினைந்தில் ஒரு பங்கிற்கு குறையாத அளவில் ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

   (2) சகல அறைகளிலும் சுவர்களின் எல்லாப் பகுதிகளிலும் 2. 14 மீற்றருக்கு குறையாத உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் செங்கற்கள், கருங்கல், கபூக்கல் அல்லது சீமெந்து கற்களைப் பயன்படுத்தி சுவர்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சுவர்களின் உட்பகுதி குறைந்த அளவு நிலமட்டத்திலிருந்து 2 மீற்றர் உயரத்திற்கு சீமெந்துக் கலவையினால் பூச்சு வேலைகள் செய்யப்பட்டிருப்பதுடன் மிகுதியான பகுதி சுண்ணாம்புக் கலவை கொண்டு உபயோகிகப்பட்டு பூச்சு வேலைகள் மேற்கொள்ளப்படுவதுடன் வர்ணங்கள் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

   (3) சகல கூரைகளின் முடிவிடங்கள் நிலமட்டத்திலிருந்து 2 மீற்றருக்கு கூடுதலான உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   (4) கூரைகள் ஏதாவது நிரந்தர பொருட்களினால் வேயப்பட்டிருத்தல் வேண்டும்.

   (5) மரத்தினால் அமைக்கப்பட்டுள்ள சகலவற்றிற்கும் எண்ணெய் சாயம் மற்றும் அல்லது சுண்ணாம்பு அடிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

   (6) முழுமையாக கட்டிடத்தின் நிலப்பகுதி சீமெந்தினால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

   (7) சுற்றாடலின் போதிய அளவு வடிகால்கள் வடிந்து செல்லக்கூடிய விதத்தில் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

   (8) சுற்றாடலில் சுகாதார பராமரிப்பு மற்றும் கழிவுப் பொருட்கள் அகற்றுதல் போதிய மலசல கூடவசதிகள் என்பன ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

6. சகல உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள பயனாளிகளும் வியாபாரங்களை கொண்டு செல்வதற்காக தேவையான சகல பொருட்களும் துர்நாற்றம் வீசுதல் அல்லது ஏனைய தீங்குகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு அவற்றை களஞ்சியப்படுத்தப்படுதல் வேண்டும்.

7. உத்தரவுப்பத்திரம் பெற்ற பயனாளியினால் அழுத்தங்கள் ஏற்படுவதற்கு அல்லது துர்நாற்றம் வீசுவதற்காக உள்ள பொருட்களை பொது இடங்கள் அல்லது தெருக்களின் ஊடாக கொண்டு செல்லப்படும் போது ஏதாவது அழுத்தங்கள் ஏற்படாத வகையில் அணவல்படுத்தப்பட்டு, உறிஞ்சக்கூடிய பாத்திரங்களில் போடப்பட்டு கொண்டு செல்லப்படல் வேண்டும்.

8. உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள சகலரும் ஏதாவது உற்பத்திகளின் செயற்பாட்டின் போது அதிரவைக்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் சப்தம், காற்று வாயுக்கள் அல்லது வீசும் போது ஏற்படும் பாதிப்புகள் அல்லது அழுத்தங்களை ஏற்படுத்தாத வகையில் மற்றும் உயரமான குழாய்களின் மூலம் காற்றுடன் அவை கலந்து விடுவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்வதுடன் அல்லது நெருப்பு புகைகளுடன் வெளியேறுவதற்கு ஏற்பாடுகள் செய்யபட்டிருத்தல் வேண்டும்.

9. உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள சகலரும் தமது வியாபாரங்களை மேற்கொள்ளப்படும் சுற்றாடலை போதுமான வகையில் வடிகால்களை அமைத்து பராமரிப்பதுடன் அவற்றை தினமும் கழுவி சுத்தப்படுத்தல் வேண்டும்.

10. உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள சகலரும் தமது வியாபாரங்களை மேற்கொள்ளப்படும் சுற்றாடலின் நிலப்பரப்புகளை ஏதாவது வெளியில் தெரியக்கூடாத பொருட்களினால் நிர்மாணிப்பதுடன், சிறந்த புனர்நிர்மாண நிலையில் அவற்றை பராமரிப்பதுடன் நாள்தோறும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

11. உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள சகலரும் வியாபாரங்களை மேற்கொள்ளப்படும் காலத்தில் வருடந்தோறும் அதன் சுற்றாடலை வர்ணம் பூசப்பட்டு பராமரிக்கப்படுதல் வேண்டும்.

12. உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள சகலரும் வியாபார நடவடிக்கைகளின் போது உபயோகிக்கப்படும் உபகரணங்களை மற்றும் பாத்திரங்கள் உட்பட சகல கருவிகளையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள சகலரும் வியாபாரங்களை மேற்கொள்ளப்படும் சுற்றாடலிலுள்ள குப்பைகள், கூட்டி சேர்க்கப்படும் பதருகள், தூசுகளுடன் வெளிச் சென்ற பொருட்கள் மற்றும் துணை உற்பத்திகள், அவற்றை மேலும் வியாபார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாவிடின் அணவல்படுத்தப்பட்டுள்ள பாத்திரங்களில் இட்டு மூடிவைத்து பின்னர் தினமும் நகர சபையின் பணிப்புரையின்படி அகற்றப்படுதல் வேண்டும்.

14. உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள சகலரும் தோல் அல்லது ஏனைய பொருட்களை கழுவுதல் அல்லது ஊறப்போடுதல் என்பவற்றிற்காக பாவிக்கப்படும் தொட்டிகளில் துர்நாற்றம் வீசுவதைத் தடுப்பதற்காக தேவையான படி உடனுக்குடன் நீர் அகற்றப்பட்டு சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

15. உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள சகலரும் ஏதாவது கங்கைகள் ஆறுகள், நீரோடைகள், வாய்க்கால்கள், அணைக்கட்டுகள், கிணறுகள், குளம் அல்லது கால்வாய்களில் ஏதாவது அசுத்தங்கள் துர்நாற்றம் வீசும் தோல் அல்லது அழுத்தங்களை ஏற்படுத்தும் துர்நாற்றம் வீசும் தோல் அல்லது அழுத்தங்களை ஏற்படுத்தும் துர்நாற்ற நீர் அல்லது ஏனைய திரவங்களை அனுப்புதல் அல்லது அதற்குள் அடித்துச் செல்வதற்காகப் போடுதல் அல்லது அழுத்தங்களை ஏற்படுத்தும் பொருட்களை கழுவுதல் அல்லது ஏனைய முறைகளில் அல்லது அத்தகைய கங்கைகள் ஆறுகள், நீரோடைகள், வாய்க்கால்கள், அணைக்கட்டுகள், கிணறு, குளம் அல்லது திறந்த நீர் நிலைகள் போன்றவற்றை அசுத்தப்படுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

16. தலைவரினால் அல்லது தனது பணிகளுக்காக அவரினால் பொதுவாகவும் அல்லது விசேடமாகவும் அதிகாரத்தை குறித்தொதுக்கப்பட்டுள்ள சபையின் எவராவது உத்தியோகத்தரினால் கடமை நேரங்களில் அழுத்தங்களை ஏற்படுத்தும் வியாபாரம் அல்லது தீங்கு விளைவிக்கக்கூடிய வியாபாரங்கள் அல்லது அழுத்தம் மற்றும் தீங்கு விளைவிக்கக்கூடிய வியாபாரங்களை மேற்கொள்ளப்படும் சுற்றாடலுக்குள் உட்பிரவேசித்து பரிசீலனை செய்து பார்ப்பது சட்டரீதியானதாகும். மேலும் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள பயனாளி அல்லது அதன் கட்டுப்பாடுக்கு பொறுப்பானவர் என்போர் அத்தகைய பரிசீலனைகளை மேற்கொள்வதற்கு இடமளிக்கப்படல் வேண்டும்.

17. உத்தரவு பத்திரம் பெற்றுள்ள சுற்றாடல் ஒன்று இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய இல்லாமல் காணப்படுகின்றது என்பதை பரிசீலனையின் போது உறுதிப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் மேலுள்ள சுற்றாடல் இத்துணைவிதியின் ஏற்பாடுகளுக்கு அமைவானதாக இருப்பதற்கு ஆற்றவேண்டிய பணிகள் குறித்த காலப்பகுதிக்குள் நிலைநாட்டும் படியும், உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ளவருக்கு எழுத்து மூலம் அறிவிப்பதற்கு தலைவருக்கு அதிகாரம் இருக்கின்றது. மேலும் மேற்காட்டிய அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ளவரினால் செயற்படல் வேண்டும். அவ்வாறு செயற்படாவிட்டால், அத்தகைய சந்தர்ப்பங்களில் உத்தரவுப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு தலைவருக்கு அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

18. இத்துணைவிதியின் கீழ் ஏதாவது வியாபாரமொன்றை கொண்டு நடாத்துவதற்காக உத்தரவுப்பத்தரம் ஒன்றைப் பெறும் பொருட்டு எவராவது ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்பத்திரம் தம்மிடம் கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் அச்சுற்றாடல் இத்துணைவிதிகளுக்கு அமைவாக இருக்குமாயின், உத்தரவுப் பத்திரம் வழங்குதல் அல்லது வேண்டுகோளை நிராகரிக்கப்படுமாயின், அதற்கான காரணங்களை விண்ணப்பதாரிக்கு அறிவித்து அனுப்புவது தலைவரின் பணியாகும்.

19. எவராவது உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ளவரினால் உத்தரவுப் பத்திரம் மற்றும் உத்தரவுப் பத்திரத்திற்குரிய கைத்தொழில் அல்லது வியாபார சேவையில் ஈடுபட்டுள்ளவரின் பெயர் மற்றும் முகவரி சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் காட்டப்படும் பட்டியல் ஒன்று உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள பயளாளியின் நிலையத்தில் வெளியில் தெரியக்கூடிய வகையில் தொங்கவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

20. இத்துணைவிதியின் கீழ் செய்யப்படும் சகல அறிவித்தல்களும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி உரிமையாளர் அல்லது அந்நிலையத்தின் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அத்தகைய ஒருவர் இல்லாதவிடத்தில் உத்தரவு பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் வெளியில் தெரியக் கூடியவாறு தொங்கவிடப்படுதல் வேண்டும் அத்தகைய அறிவித்தலில் உரிமையாளர் அல்லது அதனை கையாளுபவரின் பெயர் குறிப்பிடப்படுவது அவசியமற்றதாகும்.

21. இத்துணைவிதியில் ஏதாவது அல்லது ஏற்பாடுகளை கட்டுமீறுதல் அல்லது முரணாக செயற்படுதல் எல்லை மீறுதல் என்பன குற்றமாவதுடன் குற்றம் சம்பந்தமாக உரிய நீதிமன்றத்தினால் அக்குற்றத்திற்கு குற்றவாளியாக குற்றம் சுமத்தப்படும் போது பணிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய தண்டனை மற்றும் அத்தகைய கட்டு மீறுதல் அல்லது முரணாக செயற்படுதல் என்பவற்றை தொடர்ந்து மேலும் செய்யும் போது அது தொடர்பாக குற்றவாளியாக ஆக்கப்பட்ட பின்பு அல்லது அத்தகைய முரணான செயற்பாட்டின் மீது கவனம் செலுத்தப்பட்டு தலைவரினால் அல்லது அதிகாரம் வழங்கப்பட்டுள்ள வேறு உத்தியோகத்தரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒப்படைக்கப்பட்ட பின்னர் கட்டுமீறுதல் அல்லது முரணாக செயற்படுதல் என்பவற்றை மேலும் தொடர்ந்து செய்யும் ஒவ்வொரு நாளுக்குமாக பணிக்கப்படக்கூடிய மேலதிக தண்டனையின் ஆகக்கூடிய முறையே நகர சபை கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவில் (2) ஆவது உட்பிரிவில் பணிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டப்பணத்திற்கும் ஆகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

வசனங்கள் தொடர்பான பொருள்கோடல் தேவைப்பட்டால் மாத்திரமன்றி –

"சபை" என்பது, நகர சபை எனக் கருதப்படும் ;

"தலைவர்" என்பது, நகர சபையின் தலைவர் எனக் கருதப்படும் ;

"நகரசபை அதிகாரப் பிரதேசம்" என்பது, நகர சபை அமைக்கப்பட்டுள்ள அதிகார பிரதேசத்தை உள்ளடக்கப்பட்ட பிரதேசமாகும் ;

"அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள நகர சபையின் எவராவது உத்தியோகத்தர்" என்பது, தலைவரினால் இத்துணைவிதியை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர்கள் எனக் கருதப்படும்.

"உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ளார்" என்பது, இத்துணைவிதியின் கீழ் வியாபாரமொன்றை கொண்டு நடாத்துவதற்காக உத்தரவுப் பத்திரமொன்றை வழங்கப்பட்டுள்ள எவராவது ஒருவர் என கருதப்படும்.

"ஒருவர்" என்பது, யாக்க நிறுவனத்தின் ஒருவர் அல்லது மேற்கொள்ளப்படாத தனிப்பட்ட குழு என உட்படுத்தப்படும்.

"கட்டுப்பாட்டு பொறுப்பாளர்" என்பது, பொறுப்பாளர் பாதுகாப்பாளர் சொத்து பாதுகாப்பாளர், முகாமையாளர் அல்லது எவராவது ஒருவர் வெவ்வேறு வியாபார ஏற்பாட்டாளர் கட்டுப்பாட்டாளர் அல்லது முகாமைத்துவத்திற்காக குறித்தொதுக்கப்பட்டுள்ள வேறு ஒருவரும் அதற்குள் உட்படுவர்.

## முதலாவது அட்டவணை

அமுத்தங்களை ஏற்படுத்தும் வியாபாரம் :-

1. பசளை அல்லது இரசாயன பசளைகளை உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்
2. தோல் பதப்படுத்தல்
3. தோல் விற்பனை செய்தல்
4. விலங்கு பராமரிப்பு (இறைச்சி, பால், அல்லது முட்டை ஆகியன)
5. புகைப்பட மண்டபத்தை நடாத்தல்
6. மிருக வைத்திய நிலையங்களை நடாத்தல்
7. விற்பனைக்காக பழுதடையும் சிறிய உணவுவகைகள் அல்லது உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
8. கருவாடு, உப்பு மீன் வகைகள் அல்லது ஜாடின் கிலோகிராம் 150 க்கு கூடுதலாக அளவுகளை வைத்திருத்தல்

**முதலாவது அட்டவணை** *(தொடர்ச்சி)*

9. சிரட்டைக்கரி அல்லது மரக்கறி உற்பத்தி, அல்லது கரிகளைக் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
10. புகையிலை தயாரித்தல் அல்லது களஞ்சியப்படுத்தல் நிலையத்தைக் கொண்டு நடாத்தல்
11. விலங்கு உணவுகளை உற்பத்தி செய்தல் அல்லது விலங்கு உணவுகளின் களஞ்சியசாலையை நடாத்தல்
12. புண்ணாக்கு உற்பத்தி அல்லது 200 கிலோகிராமுக்கு கூடுதலான அளவு புண்ணாக்குகளை களஞ்சியப்படுத்தல்
13. சோப் உற்பத்தி செய்தல்
14. விலங்குகளின் எலும்புகளை அறைத்தல் அல்லது வைத்திருத்தல்
15. புதிய அல்லது பழைய உலோகங்களை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
16. உலோகங்களின் துண்டுகளையும் பொருட்களையும் களஞ்சியப்படுத்தல் நிலையத்தைக் கொண்டு நடாத்தல்
17. வீட்டுத் தளபாடங்கள் உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
18. தச்சுக் கைத்தொழிற்சாலையொன்றை நடாத்துதல்
19. பிரம்பிலான பொருட்களை உற்பத்தி செய்தல்
20. பாணி அல்லது பலவகைகளின் சாறுகளைக் கொண்டு உற்பத்தி செய்யும் பானங்களை தயாரித்தல்
21. சுவையான இனிப்பு உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தல்
22. தென்னை மட்டைகளை ஊறவைத்தல் அவற்றை வகைப்படுத்தல்
23. தூரிகை வகைகளை உற்பத்தி செய்தல்
24. பற்தூரிகைகளை உற்பத்தி செய்தல்
25. கள் சேகரித்தல்
26. விநாகிரி உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்தல்
27. இயந்திரங்களைக் கொண்டும் அல்லது கைகளினால் மரங்களை அறுக்கும் நிலையங்களை நடாத்துதல்
28. மை வகைகள். வார்னிஸ் அல்லது டிஸ்டம்பர் சாயம் அல்லது அவைகளை 100 லீற்றருக்கு கூடுதலான அளவுகளை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
29. சோடா உற்பத்தி
30. தோல் பொருட்களை உற்பத்தி செய்தல்
31. பழவகைகள், மீன் அல்லது ஏனைய உணவு வகைகளை டின்களில் அடைத்தல்
32. மிளகாய், கோப்பி, தானியவகைகள் மாஸ்போக், முச்சரக்குத் தூள் அல்லது பால், மா அறைத்தலுக்கான ஆலையை கொண்டு நடாத்தல்
33. மெழுகுதிரி உற்பத்தி
34. கற்பூர உற்பத்தி
35. எழுத்து மை, சுவர்களுக்கான மை, ஸ்டென்சில் மை என்பவற்றை உற்பத்தி செய்தல்
36. உடை துவைக்கும் நீலச் சாயம் உற்பத்தி செய்தல்
37. அரக்கு உற்பத்தி
38. நறுமணங்கள் வீசும் திரவங்கள் உற்பத்தி செய்தல்
39. பாடசாலை வெண்கட்டிகள் உற்பத்தி
40. ரயர் அல்லது டியூப் என்பன 50க்கு மேலான தொகையை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
41. டயர்களை மீள் நிரப்புதல்
42. சீமெந்து 1000 கிலோ கிராமுக்கு கூடுதலான தொகையை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
43. டயர், டியூப் போன்றவற்றை காற்று நிரப்புதல், பெச்போடுதல், போன்ற நிலையத்தை நடாத்துதல்
44. சீமெந்து, பாண்டங்கள், அல்லது அஸ்பெஸ்டோஸ் சீமெந்து பொருட்களை உற்பத்தி செய்தல்
45. பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி
46. இயந்திரங்களைக் கொண்டு துணிகளை நெய்தல்
47. பசளை சுண்ணாம்புமா அல்லது ஏனைய பொருட்களைப் போடும் சாக்குகள் துப்பரவு செய்து விற்பனை செய்தல்
48. இயந்திரங்களின் உதவியைக் கொண்டு சீமெந்துக்கற்களை உற்பத்தி செய்தல்
49. தானியங்கள் அல்லது மாற்றுப் பயிர்ச் செய்கைகள் 250 கிலோ கிராமுக்குக் கூடுதலான அளவினை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்

**இரண்டாவது அட்டவணை**

தீங்கு விளைவிக்கும் வியாபாரங்கள் :-

1. மொத்தமாக விற்பனைக்காக மா, உப்பு அல்லது சீனி 750 கிலோ கிராமுக்கு கூடுதலான அளவில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
2. தைத்த ஆடைகளை உற்பத்தி செய்தல்
3. அச்சு இயந்திர சாலைகளை கொண்டு நடாத்தல்

**இரண்டாவது அட்டவணை** *(தொடர்ச்சி)*

4. 100க்கு மேற்பட்ட அளவில் கோழிகளைக் கொண்ட பண்ணைகள் அல்லது கோழிக் கூடுகள் என்பவற்றை கொண்டு நடாத்துதல்
5. 10க்கும் மேற்பட்ட ஆடுகள், பன்றிகள் என்பவற்றைக் கொண்ட சிறிய பண்ணைகள் அல்லது மண்டபங்களை கொண்டு நடாத்துதல்
6. செங்கற்கள் அல்லது ஓடுகளை களஞ்சியப்படுத்தல்
7. விறகு களஞ்சியங்களை கொண்டு நடாத்துதல்
8. கருங்கற்கள் உடைத்தலுக்காக இயந்திரங்கள் அல்லது கைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தல்
9. குளிர்பானங்களின் உற்பத்தி அல்லது 100 போத்தலுக்கு கூடுதலான அளவில் களஞ்சியப்படுத்தல்
10. ஐஸ் கிரீம் உற்பத்தி
11. தேங்காய் எண்ணெய் உற்பத்தி அல்லது 300 லீற்றருக்கு கூடுதலான அளவில் களஞ்சியப்படுத்தல்
12. தீப்பெட்டி உற்பத்தி அல்லது 100 டசினுக்கு கூடுதலான அளவில் களஞ்சியப்படுத்தல்
13. தும்பு அல்லது கயிறு வகைகளினால் பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தல்
14. பாவிக்கப்பட்ட ஆடைகளை களஞ்சியப்படுத்தல்
15. ஆபரணங்கள் உற்பத்தி அல்லது புதுப்பித்தல் செய்தல்
16. இயந்திரங்களின் மூலம் மரங்களை அறுத்தல்
17. இயந்திர உபகரணங்களை பாவிக்கும் தொழிற்சாலைகளை நடாத்துதல்
18. வெற்றுச்சாக்கு அல்லது வெற்று போத்தல்களை சேகரித்து களஞ்சியப்படுத்தல்
19. துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்களை புதுப்பிக்கும் வேலைத்தளங்களை கொண்டு நடாத்துதல்
20. பாவிக்கப்பட்ட கடதாசிகள் அல்லது பத்திரிகைத்தாள்களை களஞ்சியப்படுத்தல்
21. வர்ணம் பூசும் நிலையங்களை கொண்டு நடாத்துதல்
22. வானவேடிக்கை பட்டாசு பொருட்களை களஞ்சியப்படுத்தல் அல்லது உற்பத்தி செய்தல்
23. தேங்காய் எண்ணெய்யைத் தவிர்ந்த ஏனைய மரக்கறி வகைகளினாலான எண்ணெய்யை 50 லீற்றருக்கு கூடுதலான அளவில் களஞ்சியப்படுத்தல்
24. குளிரூட்டப்பட்ட இறைச்சி அல்லது மீன்களை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
25. மரம், மரப்பலகைகளை களஞ்சியப்படுத்தல்

**மூன்றாவது அட்டவணை**

அழுத்தம் மற்றும் தீங்கு விளைவிக்கக்கூடிய வியாபாரங்கள் :-

1. இரசாயன திரவியங்களைப் பாவித்து கறுவா, கராம்பு, ஏலம் போன்றவற்றைப் பொதி செய்தல்
2. ட்ரைகிளீன் செய்தல் அல்லது சாயமிடுதல்
3. ஆடைகளை அச்சிடுதல் அல்லது சாயமிடுதல்
4. இலத்திரனியல் உலோக களிம்பு பூசும் நிலையங்களை கொண்டு நடாத்துதல்
5. சுண்ணாம்புக்கல் அல்லது கிரிகல் போன்றவற்றை சுத்தம் செய்தல் தயாரித்தல் அல்லது சுண்ணாம்புகளை களஞ்சியப்படுத்தல்
6. பற்றரிகளை இயந்திரங்களின் மூலம் மின்வலுவூட்டல் மற்றும் புதுப்பித்தல் நிலையங்களை நடாத்துதல்
7. மோட்டார் வாகனங்களை புதுப்பிக்கும் நிலையங்களை கொண்டு நடாத்துதல்
8. மோட்டார் வாகனங்களை சேர்விஸ் பண்ணும் நிலையங்களை கொண்டு நடாத்துதல்
9. மோட்டார் வாகன உலோக வார்ப்பு நிலையங்களை கொண்டு நடாத்துதல்
10. மோட்டார் வாகன கொல்லர் வேலைத்தளங்களை கொண்டு நடாத்துதல்
11. கேஸ் சிலிண்டர்களை களஞ்சியப்படுத்தும் நிலையங்களை கொண்டு நடாத்துதல்
12. ஆயுர்வேத மருந்து வகைகள், உள்நாட்டு மருந்து வகைகளின் உற்பத்தி அல்லது கலவை செய்தல்
13. கண்ணாடி பொருட்கள் அல்லது கண்ணாடி சட்டங்களை களஞ்சியப்படுத்தல்
14. பிளாஸ்டிக் அல்லது பைபரிலான உற்பத்தி கைத்தொழில்சாலைகளை கொண்டு நடாத்துதல்
15. 150 கிலோ கிறாமுக்கு கூடுதலான தேயிலைத் தூள்களை களஞ்சியப்படுத்தல்
16. இரும்பு ஒட்டு வேலைகள் நிலையமொன்றை நடாத்துதல்
17. கடைசல் பட்டறைகளைக் கொண்ட நிலையங்களை நடாத்தல்
18. பெற்றோல், டீசல், உராய்வு எண்ணெய் போன்ற ஏனைய கனிய வள வகைகளை களஞ்சியப்படுத்தும் நிலையங்களை கொண்டு நடாத்துதல்
19. விவசாய இரசான உற்பத்திகள் மற்றும் களஞ்சியப்படுத்தல்

**மூன்றாவது அட்டவணை** *(தொடர்ச்சி)*

20. குளிரூட்டி இயந்திரங்கள் குளிரூட்டி அல்லது அதிகூடிய குளிரூட்டி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் அல்லது புதுப்பித்தல்

21. மின்சார கைத்தொழில் வேலைத்தளம் அல்லது மின்சார உபகரணங்களை உற்பத்தி செய்தல் அல்லது புதுப்பிக்கும் வேலைத்தளங்களை கொண்டு நடாத்துதல்

22. பால் வகைகளை குளிரூட்டும் நிலையமொன்றை கொண்டு நடாத்துதல்.

**உணவகம் மற்றும் விடுதி தொடர்பான துணைவிதி**

1. இத்துணைவிதி பிரதேச சபை அதிகார பிரதேசத்திலுள்ள உணவகம் மற்றும் விடுதி என்பவற்றை ஒழுங்கமைத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்றவற்றிக்காக நிறைவேற்றப்படுவதாகும்.

2. இத்துணைவிதி பிரதேச சபை அதிகார பிரதேசத்திலுள்ள உணவகம் மற்றும் விடுதி தொடர்பான துணைவிதியாக எடுத்துக்காட்டப்படலாம்.

3. தலைவரினால் குறித்தொதுக்கப்பட்டுள்ள பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ள செல்லுபடியான அனுமதிப்பத்திரம் இருந்தால் மட்டுமேயன்றி, எவராவது அல்லது ஒருவரினால் பிரதேச சபை பிரதேசத்திற்குள் உணவகம் ஒன்றை அல்லது விடுதி ஒன்றையோ (இங்கு இதனகத்து “இடம்” என எடுத்துக்காட்டப்படும்) கொண்டு நடாத்தப்படலாகாது.

4. இந்த துணைவிதியின் கீழ் வழங்கப்படும் சகல அனுமதிப்பத்திரங்களும் முன்பு இரத்துச் செய்யப்பட்டாலன்றி மாத்திரமே, அவ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளமை எந்த வருடத்திற்கானது என்பதுடன் அவ்வருடத்தின் மார்கழி மாதம் 31 ஆந் திகதியன்றுடன் அது முடிவடையும்.

5. அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணணப்பிக்கும் நிலையத்திற்கு பிரதேச சபையின் தலைவரினால் குறிப்பிடப்பட்ட நிலையம் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கு அமைவாக நிர்மாணிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

6. இத்துணைவிதியில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகளின் அந்த முறைகளுக்கு அமைய பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் மட்டுமேயன்றி இல்லையேல் தலைவரினால் யாருக்காவது அல்லது உணவகம் அல்லது விடுதியொன்றுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படலாகாது.

(1) நிலையம் சிறந்த புதுப்பித்தல் நிலைக்கு அமைய கொண்டு நடாத்தப்படல் வேண்டும்.

(2) அந்நிலையத்தின் சகல அறைச் சுவர்களும் 2. 5 மீற்றர் உயரத்திற்கு குறையாமல் உயரத்தைக் கொண்டிருப்பதுடன், அச்சுவர்கள் செங்கற்கள், சீமெந்துக், கற்கள், அல்லது கபூக் கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருப்பதுடன் இரண்டு பக்கங்களும் சீமெந்து கலவையினால் பூச்சு வேலைகள் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இருப்பினும் சபையால் அறையைத் தவிர்ந்த ஏனைய அறைகள் மரப்பலகை அல்லது ஏதாவது உலோக தகடுகளினால் அமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருப்பது மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகளுக்கு அமைவானது எனக் கருதப்படும்.

(3) நிலையத்திள் சகல அறைகளுக்கும் உட்கூரை பொருத்தப்பட்டிருப்பதுடன் அவ் உட் கூரையின் உயரம் நில மட்டத்திலிருந்து ஆக்குறைந்தது 2.5 மீற்றர் உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சகல அறைகளுக்கும் திறக்கக்கூடிய வகையில் ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருப்பதுடன் அத்தகைய ஒவ்வொரு அறைகளின் ஜன்னல்கள் திறக்கப்படும் போது அவ் ஜன்னல் கதவுகளின் சதுர பரப்பு அறைகளின் நிலப் பரப்பில் பதினைத்தில் ஒன்றுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் ஏதாவது அறைக்கு குளிரூட்டி பொருத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மேற்கூறப்பட்ட குறித்தொதுக்கல்கள் ஏற்புடையதாகாது.

(5) நிலையத்தின் மேற்கூரை நிரந்தரமான பொருளொன்றினால் வேயப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) விறாந்தையின் முடிவிடங்கள் நிலமட்டத்திலிருந்து குறைந்த அளவு 2 மீற்றருக்கு மேலானதான அளவு உயரத்தில் அமைந்திருப்பதுடன், அதன் சாய்வுத்ன்னமை குறைந்த அளவு 1. 5 மீற்றரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(7) சகல அறைகளினதும் நிலப்பகுதி சீமெந்து இடப்பட்டு பூசப்பட்டிருப்பதுடன் அல்லது பளிங்கு தரை ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(8) நிலையத்தினுள் திரளும் கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்கான குப்பைத்தொட்டிகளை வைத்திருப்பதுடன் சகல கழிவுத் தொட்டிகளிலும் ஈ அல்லது ஏனைய கிருமிகள் உட்செல்ல முடியாத வகையில் மூடி வைப்பதற்குரிய மூடிகள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(9) நிலையத்தினுள் திரளும் கழிவுகளை கையாள்வதற்காக இத் துணை விதியில் குறித்தொதுக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய செயற்படக்கூடிய வகையில் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) நிலையத்தினுள் பாவனைக்காக எடுக்கப்படும் சகல மேசைகளும் –

(i) மரத்தினால் செய்யபட்டிருந்தால் அதன் அடித்தளத்தில் பளபளப்பு அளிக்கக்கூடிய வர்ணம் பூசப்பட்டிருப்பதுடன் அம்மேசையின் மேற்பரப்பில் பளபளக்கக்கூடிய வெளிப்படையாக தெரியாத பொருளினால் அல்லது துருப்பிடிக்காத மற்றும் பழுதடையாத உலோக தகட்டினால் அணவல் படுத்தப்படவேண்டும்.

(ii) இரும்பு அல்லது உருக்கு அல்லது ஏனைய உலோகங்களினால் செய்யப்பட்டிருந்தால் அதன் அடிப்பகுதியில் வர்ணம் பூசப்பட்டிப்பதுடன் மேற்பரப்பில் பளபளக்கக்கூடிய வெளிப்படையாக தெரியாத வகையுடைய பொருளினால் அல்லது துருப்பிடிக்காத மற்றும் பழுதடையாத உலோக தகட்டினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. அந்நிலையத்தில் பாவனைக்காக எடுக்கப்படும் நீர் மனித பாவனைக்கு உகந்ததா அல்லது பொருத்தமானதா என்பதை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையினால் வழங்கப்பட்டுள்ள தரச் சான்றிதழ் பெற்றிருப்பதுடன், மட்டுமன்றி, குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வீதம் இவ்வாறான தரச்சான்றிதழ்கள் பெற்றிருத்தல் வேண்டும். தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையினால் விநியோகிக்கப்படும். நீர் அந்நிலையத்தின் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமாயின் அவை தராதரச் சான்றிதழ் பெற்றுக் கொண்டுள்ளதாகவே கருதப்படும்.

12. நிலையத்தின் பணிகளுக்காக உபயோகிக்கப்படும் நீர் களஞ்சியப்படுத்தப்படுமாயின், அவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நீரை அசுத்தம் அடையாத வகையில் போதிய பராமரிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

13. வாடிக்கையாளர்களினால் பாவனைக்கு எடுக்கப்படும் பாத்திரங்களை கழுவுவதற்காக வேறொரு பகுதி அந்நிலையத்தில் கொண்டு நடாத்தப்படல் வேண்டும்.

14. வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களின் பாவனைக்காக ஆகக் குறைந்தது ஒவ்வொருவருக்கும் ஒன்று என்ற வீதத்தில் ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் தனித்தனியான வெவ்வேறான மலசல கூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

15. அனைத்து மலசல கூடங்களும் அவற்றின் சுவர்கள் சீமெந்து கற்களினால் அல்லது செங்கற்களினால் அல்லது துருப்பிடிக்காத உலோக தகடுகளினால் அமைக்கப்பட்டு அதன் நிலப்பகுதி சீமெந்து கலவையினால் பூச்சு வேலைகள் செய்யப்பட்டிருப்பதுடன் பளிங்கு தரை ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அது போன்று மேலும் கற்களினால் அல்லது சீமெந்து கற்களினால் அல்லது செங்கற்களினால் அமைக்கப்பட்டுள்ள சுவர்கள் சீமெந்து கலவை கொண்டு மட்டுப்படுத்தப்பட்டு பூச்சு வேலைகள் அனைத்தும் சீமெந்து, கலவையினால் பூசப்பட்டிருத்தல் அல்லது தரை ஓடுகள் மற்றும் சுவர் ஓடுகள் பளிங்கு கற்களினால் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் துருப்பிடிக்காத உலோக தகடுகளினால் அமைக்கப்பட்டுள்ள சுவர்கள் அதன் மேற்பகுதி வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

16. அந்நிலையத்தில் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் பாவனைக்காக குளியல் அறை போதுமான எண்ணிக்கையில் அமைக்கப்பட்டிருப்பதுடன், மேலுள்ள (15) ஆவது உட்பிரிவு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவறைக்களுக்குரிய நியதிகள் அக் குளியல் அறை நிலப்பகுதி மற்றும் சுவர்களுக்கும் ஏற்புடையதாகும்.

17. நிலையத்தின் வாடிக்கையாளர்களினது பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியினுள் வாடிக்கையாளர்களின் கைகளை கழுவுவதற்காக துருப்பிடிக்காத உலோக தகடுகளினாலான அல்லது மட்பாண்டத்தினால் செய்யப்பட்டு முலாம்பூசப்பட்டுள்ள கற்களினால் அல்லது சீமெந்து கற்களினால் கட்டப்பட்டு மட்பாண்ட பளிங்கு ஓடுகள் பதிக்கப்பட்ட தொட்டிகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*18. நிலையத்தின் எப்பகுதியில் அல்லது எங்காவது ஒரு இடப்பகுதியில் பாவனைக்குப் பின் அகற்றப்படும் அசுத்தமான நீர் தங்கு தடையின்றி வழிந்தோடுவதற்குப் பொருத்தமான வகையில் வடிகால் அமைப்பொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*19. பிரதேச சபையினால் முறையான வடிகால் அமைப்பொன்று செய்யப்பட்டிருப்பின், அந்நிலையத்திலிருந்து அகற்றப்படும் அசுத்த நீர், பிரதேச சபையினால் குறித்தொதுக்கப்பட்டுள்ள முறைகளுக்கு அமைய அவ்வடிகால் அமைப்புக்குள் வழிந்தோடக் கூடிய வகையில் அமைக்கப்பட்டிருப்பதுடன், அவ்வாறு அமைக்கப்படாதிருக்கும் சந்தர்ப்பத்தில் அந்நிலையத்திலிருந்து அகற்றப்படும் கழிவு நீரை உறிஞ்சியெடுக்கக்கூடிய வகையில் ஆழமான குழியொன்றை அமைத்து அதனுள் கழிவு நீர் வழிந்தோடும் விதத்தில் வடிகால் அமைப்பொன்று செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.*

*20. நிலையத்தில் தீயணைக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருப்பதுடன் நிலையத்திற்குரிய தீ பாதுகாப்பு சான்றிதழ் ஒன்றும் பெற்றிருத்தல் வேண்டும்.*

*21. நிலையத்தின் வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் உறங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள உறங்கல் அறை ஒருவர் உறங்குவதற்கு ஒதுக்கப்படவேண்டிய ஆகக்குறைந்த இடப்பரப்பு நான்கு மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.*

*7. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையங்களை குறைந்த அளவு ஒரு நாளைக்கு இருமுறை கூட்டி துப்பரவு செய்வதுடன், அசுத்த நீர் வழிந்தோடும் வடிகால்களை ஒரு நாளைக்கு இரு முறை சுத்தம் செய்து நீரைக் கொண்டு கழுவுதல் வேண்டும்.*

*8. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையங்களில் உறங்குவதற்காக குறித்தொதுக்கப்பட்டுள்ள அறைகளைத் தவிர்ந்த ஏனைய எந்த அறைகளிலும் எவராவது அல்லது ஒருவருக்கு உறங்குவதற்கு இடமளிக்கப்படலாகாது.*

*9. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையங்களில் தங்கும் அறை வசதிகளைப் பெறும் ஒவ்வொருவரினதும், பெயர், முகவரி மற்றும் அவர்களை உறுதிப்படுத்தக்கூடிய ஆள் அடையாள அட்டைகளின் விபரம் என்பவற்றை உள்ளடக்கக்கூடிய அட்டவணைகள் பதியப்பட்டு சகல அனுமதிப்பத்திர நிலையங்களிலும் பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டும். இவ்விபரங்களை தலைவர், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது எவராவது பொலிஸ் உத்தியோகத்தரினால் விசாரணை செய்வதற்கு கேட்கும் சந்தர்ப்பத்தில் அவ்வட்டவணையை பரிசீலிப்பதற்கு இடமளிப்பது அனுமதிப்பத்திர பயனாளியின் பணியாகும்.*

*10. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையங்களின் சகல உறங்கும் அறைகளிலும் ஒவ்வொரு வாடிக்கையாளரினால் அவ் அறை பாவிக்கப்பட்ட பின்னர் மேலும் ஒரு வாடிக்கையாளர் பாவிப்பதற்கு இடமளிப்பதற்கு முன்னர் அந்த உறங்கல் அறைகளின் கட்டில்களின் படுக்கை விரிப்பு சீலைகள், தலையணைகள், போர்வைகள், துவாய்கள், உறைகள் மற்றும் வேறு பொருட்கள் அகற்றப்பட்டு அவைகளை கழுவி சுத்தம் செய்வதுடன் மட்டுமன்றி அதுவரை ஏனைய வாடிக்கையாளருக்கு அவ்வறையை பாவிப்பதற்கு இடமளிக்கப்படாதிருப்பதுடன், அதன் பின்னர் சமுகம் தரும் வாடிக்கயைாளருக்கு அவ் அறையை பாவிப்பதற்கு இடமளிப்பதற்கு முன்பு அவ்வறையின் ஜன்னல்களை ஆகக்குறைந்த அளவு நான்கு மணித்தியாலங்கள் முழுமையாக திறந்து வைத்திருப்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.*

*11. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையங்களில் ஏதாவது உறங்கல் அறை, உணவு பரிமாறும் இடம் அல்லது உணவு உண்பதற்கான ஒதுக்கப்பட்டுள்ள ஏதாவது பகுதியில் எவையாவது அல்லது விலங்குகளை வைத்திருப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.*

*12. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையங்களிலுள்ள மலசல கூடங்கள் ஆகக்குறைந்த அளவில் ஒரு நாளைக்கு இரண்டு முறை வீதம் சுத்திகரிக்கப்படல் வேண்டும். அத்துடன் கிருமிநாசினிகளை உபயோகிப்பதுடன், துர்நாற்றம் ஏற்படாத வகையில் பராமரித்தல் வேண்டும் எவ்வாறாயினும் வாடிக்கையாளர்கள் தங்கும் எந்த அறைகளின் மலசலகூடங்களும் ஒரு நாளைக்கு ஒரு முறை சுத்தம் செய்யப்படுதல் போதுமானதாகக் கருதப்படும்.*

*13. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் உணவு மற்றும் பானங்களை தயாரித்தல், விற்பனைக்காக காட்சிப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர்களின் பாவனைக்காக எடுக்கப்படும் பொருட்கள் பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்தையும் பாவிப்பதற்கு முன்பு சுத்தமான நீரினால் கழுவப்படுவதுடன், பாவிக்கப்பட்ட பின்னரும் அவற்றை கழுவி சுத்தம் செய்வது அனுமதிப்பத்திரம் கொண்டுள்ள பயனாளியின் பணியாகும்.*

*14. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் அந்தந்த பகுதிகளில் சேர்க்கப்படும் சகல குப்பை கூழங்களும் கழிவுகளும் இத்துணைவிதியின் 16 ஆம் பிரிவில் குறித்தொதுக்கப்பட்டுள்ள முறைகளுக்கு அமைய வகைப்படுத்தப்பட்டு வெளிப்படையாக தெரியாத பொருளினால் செய்யப்பட்ட தொட்டிகளில் உடனடியாக போடப்படுவதுடன் அக்கழிவுகளை*

ஒருமுறையிலோ அல்லது தேவையாயின் அதற்கு கூடுதலான முறைகளிலும் அவ்விடத்திலிருந்து அகற்றப்படுவதற்கான திட்டங்களை தயாரிப்பதுடன் இந்த குப்பை தொட்டிகளிலுள்ள கழிவுகளை பல முறைகளில் அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுவதுடன், அத்தொட்டிகளில் கழிவுகள் நிறையும் சந்தர்ப்பத்தில் மற்றும் அகற்றுவதைத் தவிர ஏனைய நேரங்களில் அந்த குப்பை தொட்டி பாத்திரங்களை நன்றாக மூடி வைத்திருத்தல் வேண்டும்.

15. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையங்களிலிருந்து அகற்றப்படும் கழிவுகள் எத்தகைய சந்தர்ப்பங்களில் நிலையத்தின் நிலப்பகுதி அல்லது ஒவ்வொரு இடங்களிலும் கையுதிர்தல் தடுக்கப்பட்டுள்ளது.

16. (1) அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையங்களினுள் உருவாகும் சகல கழிவுப் பொருட்களும் மீண்டும் உபயோகப்படுத்தப்பட வேண்டுமாயின் அத்தகைய கழிவுப் பொருட்கள் :-

(i) உக்கல் அடையும் கழிவுகள் ;

(ii) கண்ணாடி கழிவு பொருட்கள்

(iii) கடதாசி மற்றும் கடதாசியிலான கழிவுப் பொருள்

(iv) பொலிதீன் மட்டும் பிளாஸ்டிக் அல்லது பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த கழிவுப் பொருட்கள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோக பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகங்களின் பகுதிகள் ;

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப்பொருள்களிலிருந்து எஞ்சிய பகுதிகள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கக்கூடிய மற்றும் துணை உற்பத்தி பொருட்கள் அல்லது அதன் பகுதிகள் ;

(vii) தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருள் என்ற வகைப்படுத்தலின் கீழ் வகைப்படுத்தலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதுடன் ஒவ்வொரு வகையான கழிவுப்பொருட்களை சேகரித்து வைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வெவ்வேறான பாத்திரங்கள் அல்லது தொட்டிகளில் போடுவதற்குரிய ஏற்பாடுகளை அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள பயனாளி மேற்கொள்வது அவரது பணியாகும்.

(2) மேலுள்ள (1) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு வகைப்படுத்தி பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலை ஒழுங்குகளின் கீழ், அகற்றுவதாயின் மட்டுமே தலைவரினால் குறித்தொதுக்கப்பட்டுள்ள முறைக்கு அமைய இறுதியாக கையளித்தல் வேண்டும்.

17. சகல அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையங்களிலும் எலிகள், ஈக்கள் அல்லது ஏனைய கிருமிகள் என்பனவற்றின் ஊடுருவல் இன்றி பாதுகாப்பதுடன், அந்நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள உணவு வகைகள், பானங்கள் என்பவற்றை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் பொருட்களை உரிய முறையில் பராமரிப்பதுடன் அவற்றில் விலங்கினங்களினால் ஏற்படும் தீமைகளை தவிர்த்துக்கொள்வதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளையும் செய்வது அனுமதிப்பத்திர பயனாளியின் பணியாகும்.

18. வாடிக்கையாளருக்கு உணவுகளை பரிமாறும் போது அவற்றை கையினால் தொடாத வகையில் பரிமாறுவதுடன் அவ் உணவுகளை பரிமாறுவதற்காக கரண்டிகள் அல்லது அகப்பைகள் அல்லது வேறு முறைகளில் உபகரணங்களை பயன்படுத்தல் வேண்டும்.

19. (1) ஏதாவது தொற்று நோய், தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது அண்மையில் அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த எவராவது அல்லது ஒருவர் அல்லது அத்தகைய ஏதாவது நோயொன்றினால் பீடிக்கப்பட்டிருக்கும் ஒருவருக்கு அண்மையில் வைத்தியம் செய்யப்பட்டு வரும் போது எவராவது அல்லது ஒருவருக்கு அத்தொற்று நோயின் மற்றும் விஷக்கிருமிகளின் போசணைக்கால எல்லை முடிவடைந்திருந்தாலும் இதனகத்துப் பின்னர் அல்லது அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் எவராவது அல்லது ஏதாவது முறையினால் பணியில் அல்லது அவ்வாறான பணியில் ஈடுபட்டிருக்கும் ஒருவரின் உதவியாளர் ஆகவும் அல்லது ஈடுபட்டிருத்தல் அல்லது ஈடுபடச் செய்தல் அல்லது ஏதாவது பணியில் ஈடுபடுவதற்கு இடமளிப்பது தவிர்க்கப்பட வேண்டியதொன்றாகும்.

(2) நன்றாக கழுவி சுத்தம் செய்யப்பட்டிருக்கும் உடைகளை அணிந்திருந்தால் மட்டுமே தவிர யாராவது அல்லது ஒருவரினால் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் பணிகளில் ஈடுபடுவது அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் கூடாது.

(3) அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல சேவையாளர்களும் குறைந்தது வருடத்தில் ஒருமுறை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துவது அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

20. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் உணவு அல்லது பானங்கள் போன்றவற்றை பரிமாறும் சகல பணியாட்களுக்கும் தனித்தனியான மேலாடை வழங்கப்பட்டிருப்பதுடன் அப்பணியாளர்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் அம்மேலாடை அணிந்துள்ளார்களென உறுதிப்படுத்துவது அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

21. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள சேவையாளர்களுக்கும் சுத்தமான குடிநீர், சுத்தமான துவாய்கள், நகங்களை துப்பரவு செய்வதற்கான தூரிகைகள் மற்றும் சோப் அல்லது சோப் கரைக்கப்பட்ட கலவை என்பன வழங்கப்படல் வேண்டும்.

22. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையம் துணைவிதியில் குறித்தொதுக்கப்பட்டுள்ள நியதிகளுக்கு அமைய கொண்டு நடாத்தப்படுகின்றதா என்பதை பரிசீலனை செய்வதற்கு தலைவருக்கு அல்லது தலைவரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு அங்கு உட்புகுந்து பரிசீலனை செய்வது சட்டரீதியானதாகும்.

23. தலைவர் அல்லது அதிகாரம் கொண்டுள்ள உத்தியோகத்தரினால் ஏதாவது அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள எவையாவது உணவு வகைகளின் மாதிரியை அங்கு கொள்வனவு செய்யப்படுவது சட்ட ரீதியானதாவதுடன் அதைத் தவிர அல்லது அனுமதிப்பத்திரம் கொண்ட பயனாளியினால் அவ்வாறு கொள்வனவு செய்வதை நிராகரிப்பது அல்லது அதற்கு இடைஞ்சலைக் கொடுப்பது என்பன மேற்கொள்ளப்படலாகாது.

24. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதாவது உணவகமொன்று கொண்டு நடாத்தப்படும் இடம் இந்த துணைவிதியில் 6 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது அல்லது நியதிகளுக்கு அமைவாக நடைபெற்று முடிந்தால் அல்லது இப்பகுதியின் துணை நியதிச் சட்டத்தில் வேறு ஏதாவது துணை நியதிச் சட்டத்தின் நியதிகளுக்கு முரணானவகையில் வரும் சந்தர்ப்பத்தில் நிலையாக குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்பு அவ் இடத்தில் அந்த நியதிகளுக்கு இசைவான நிலைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான சகலதும் நிலைநாட்டப்பட வேண்டுமென அதிகாரிக்கு கட்டளையிடும் அறிவித்தல் ஒன்றை தலைவரினால் அந்த அதிகாரியிடம் ஒப்படைப்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

25. இத்துணைவிதியில் ஏதாவது அல்லது ஏற்பாடுகளை கட்டு மீறுதல் அல்லது முரணாக செயற்படுதல் என்பன குற்றமாவதுடன் குற்றம் சம்பந்தமாக குறித்த அதிகாரம் பெற்றுள்ள நீதிமன்றத்தின் ஊடாக அக்குற்றத்திற்கு குற்றவாளியாக ஆக்ககப்படும் சந்தர்ப்பத்தில் விதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய தண்டம் மற்றும் அந்த கட்டுமீறுதல் அல்லது முரணாக செயற்படுதல் என்பவற்றை தொடர்ச்சியாக மேலும் செய்யப்படும் போது அது தொடர்பாக குற்றவாளியாக ஆக்கப்பட்ட பின்னர் அல்லது அக்கட்டு மீறுதல் பற்றி கவனம் செலுத்தப்பட்டு தலைவரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்று ஒப்படைக்கப்பட்ட பின்னர் கட்டுமீறுதல், அல்லது முரணாக செயற்படுதல் என்பவற்றை மேலும் தொடர்ச்சியாக செய்யப்படும் அனைத்து ஒவ்வொரு நாட்களுக்கும் விதிக்கப்பட முடியுமான மேலதிக தண்டனையின் ஆகக்கூடியது முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவில் (2) ஆவது உட்பிரிவில் குறித்தொதுக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டப்பணம் ஆகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

26. இத்துணை விதியில் வசனங்கள் தொடர்பாக கருத்து வேறுபாடுகள் தேவைப்பட்டாலன்றி :-

“சபை” என்பது, பிரதேச சபை எனக் கருதப்படும் ;

“தலைவர்” என்பது பிரதேச சபையின் தலைவர் எனக் கருதப்படும்.

“பிரதேச சபை அதிகாரப் பிரதேசம்” என்பது, பிரதேச சபையை உள்ளடக்கக்கூடிய அதிகாரப் பிரதேசம் என கருதப்படும்.

## பிண எரிப்பகங்கள் தொடர்பான துணைவிதி

1. நகர சபைக்கு உரித்தான சகல பிண எரிப்பங்களிலும் சடலங்களை எரித்தல் அதற்கான கட்டணங்களை அறவிடுதல், மற்றும் பிண எரிப்பகங்களின் நிர்வாகங்களை ஒழுங்கமைத்தல் என்பவற்றிற்காக இத்துணை விதி நிறைவேற்றப்படுவதாகுக.

2. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்திலுள்ள பிண எரிப்பகங்கள் தொடர்பான துணைவிதியென்று எடுத்துக்காட்டப்படலாம்.

3. தவிசாளரினால் அல்லது அவரினால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் (இங்கு இதனத்து "அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என குறிப்பிடப்படும்) அவர்களினால் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமின்றி சபைக்குரித்தான பிண எரிப்பகம் ஒன்றில் எந்தவொரு சடலமும் எரிக்கப்படக்கூடாது.

4. மூன்றாவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் (இங்கு இதனகத்து "விண்ணப்பத்தாரி" என குறிப்பிடப்படும்) ஆள் ஒருவரினால் "அ" அட்டவணைக்கமைய தயார் செய்து கொண்ட விண்ணப்பப்படிவத்தை கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் தவிசாளர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

   (1) உயிரிழந்தவர் மற்றும் விண்ணப்பத்தாரர்களுக்கிடையில் உள்ள தொடர்புகளை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள், விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழ் அல்லது உயிரிழந்தவரின் பிறப்புச் சான்றிதழ் அல்லது விண்ணப்பதாரியின் விவாகச் சான்றிதழ் அல்லது உயிரிழந்தவர் வாழ்ந்து வந்த கிராம அலுவலர் பிரிவு கிராம அலுவலரினால் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ் என்பன இதற்கு போதுமானதாகும்.

   (2) உயிரிழந்தவரின் மரணம் தொடர்பில் குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் விசாரணை நடாத்தப்பட்டிருப்பின், விசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரி அல்லது நீதவானினால் பிறப்பு மற்றும் இறப்புகளை பதிவு செய்யும் சட்டத்தின் 39 மற்றும் 41 (உ) ஆம் பிரிவின் கீழ் சடலத்தை எரிப்பதற்கு அனுமதி வழங்கி வெளியிடப்படும் சான்றிதழ் அல்லது உயிரிழந்து பிறந்த குழந்தை ஒன்றின் சடலமாயின் பிறப்பு, இறப்பை பதிவு செய்யும் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் ;

5. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்திரத்தை பூர்த்தி செய்து தவிசாளரிடம் அல்லது அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அவை கிடைத்த ஒழுங்கு முறைக்கு அமைய அட்டவணைப்படுத்தல் வேண்டும்.

6. சடலத்தை எரிக்க பொறுப்பேற்பதாயின் அதற்குரிய கட்டணத்தை அறவிடப்பட்டு அனுமதிப்பத்திரத்தை விண்ணப்பத்தாரியிடம் வழங்கப்படல் வேண்டும். எரிப்பக பொறுப்பாளரிடம் சடலத்தை கையளிக்க வேண்டிய நேரத்தை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

7. சடலத்தை எரிப்பதற்கு பொறுப்பேற்பதில்லையாயின் அதுபற்றி அதற்கு காரணமான விடயங்களுடன் தவிசாளரின் அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தர் உடனடியாக விண்ணப்பதாரருக்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும்.

8. சகல தினங்களிலும் மு. ப. 7.00 மணி தொடக்கம் பி. ப. 8.00 மணி வரையுள்ள காலை நேரத்தினுள் சடலங்கள் எரிப்பதற்காக பொறுப்பேற்கப்படும்.

9. விண்ணப்பதாரருக்கு வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னர் அண்மித்த முப்பது நிமிடங்களுக்குள் சடலத்தை பிண எரிப்பக பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். தாமதித்து கையளிப்பதனால் ஏற்படக்கூடிய அசௌகரியங்கள் தொடர்பாக பிரதேச சபை பொறுப்புக்கூற கட்டுப்படுவதில்லை.

10. ஒவ்வொரு பிண எரிப்பகத்திலும் எரிக்கப்பட்ட ஒவ்வொரு சடலங்கள் தொடர்பாகவும் விண்ணப்பதாரியின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், உயிரிழந்தவரின் பெயர், அவர் உயிரிழப்பதற்கு முன்னர் வசித்து வந்த முகவரி விண்ணப்பதாரருக்கும் உயிரிழந்தவருக்கும் இடையிலான உறவு எரிக்கப்பட்ட நேரம், திகதியும் மற்றும் அனுமதிப்பத்திர இலக்கமும் திகதியும் பற்றிய விபரங்களை பிண எரிப்பக பொறுப்பாளரினால் அட்டவணைப்படுத்தப்படல் வேண்டும்.

11. சடலம் எரிக்கப்பட்டு 72 மணித்தியாலங்கள் பூர்த்தியடைய முன்னர் சடலத்தின் சாம்பலை வேண்டி நிற்கும் விண்ணப்பதாரர் அல்லது அவரின் பிரதிநிதி அந்த சாம்பலைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறாயின் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தருக்கு விண்ணப்பதாரரின் எழுத்துமூல வேண்டுகோளுக்கு அமைய சாம்பலை பிண எரிப்பக பொறுப்பாளரின் பொறுப்பில் வைதிருக்ககூடிய கால எல்லை நீடிக்கப்படும். உரிய நேர காலப்பகுதிக்குள் பொறுப்பேற்காத சாம்பலை அகற்றுவதற்கு தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

12. பிண எரிப்பக பொறுப்பாளரின் அல்லது தவிசாளரின் அங்கீகாரமின்றி பிண எரிப்பக வளவிற்குள் பிரவேசிப்பது குற்றமாகும். அவ்வாறாயின் சடலம் ஒன்றை எரிப்பதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள ஒருவருடன் வரும் ஆள் ஒருவருக்கு அல்லது ஆட்களுக்கு அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக கருதப்பட வேண்டும்.

13. பிண எரிப்பக வளவிற்குள் ஒழுங்கை, மீறும் வகையில் நடந்து கொள்வது அல்லது பிண எரிப்பக வளவிற்குள் அமைந்துள்ள சபைக்குரித்தான ஆதனங்களுக்கு சேதம் ஏற்படுத்துவது அல்லது பிண எரிப்பக வளவிற்குள் அமைந்துள்ள சபைக்குரித்தான ஆதனங்களுக்கு சேதம் ஏற்படுத்துவது அல்லது பிண எரிப்பக பொறுப்பாளரின் அல்லது அவரின் உதவியாளர்களது கடமைகளுக்கு தடை ஏற்படுத்துவது மற்றும் பிண எரிப்பக வளவிற்குள் அலங்கார நடவடிக்கைகளை செய்வது குற்றமாகும்.

14. இத்துணைவிதியில் எவராவது அல்லது ஏற்பாடுகளை கட்டுமீறுதல் அல்லது அதற்கு முரணான வகையில் செயற்படுதல் குற்றமாவதுடன், குற்றம் தொடர்பாக உரிய அதிகாரம் கொண்டுள்ள நீதிமன்றத்தின் ஊடாக அந்த குற்றத்திற்கு குற்றவாளியாக ஆக்கப்படும் பட்சத்தில் குறித்தொதுக்கப்படக்கூடிய ஆகக்கூடிய தண்டனை மற்றும் அதனை கட்டுமீறுதல் அல்லது முரணான வகையில் தொடர்ந்து மேலும் செயற்படும் போது, அது தொடர்பாக குற்றவாளியாக காணப்பட்ட பின்னர் அல்லது அவ் அத்துமீறல்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு தவிசாளரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள வேறு அதிகாரியினால் எழுத்துமூலமான அறிவித்தல் அளிக்கப்பட்ட பின்னர் கட்டுமீறுதல் அல்லது முரணான வகையில் செயல்படுதல் போன்றவற்றை மேலும் தொடர்ந்து விடாமல் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நாளுக்காக குறித்தொதுக்கப்படக்கூடிய மேலதிக தண்டனையில் ஆகக்கூடிய முறையே நகரசபை கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்தொதுக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டனையின் தண்டப்பணம் ஆகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

15. (1) சடலத்தை எரிப்பதற்கு தகுந்த நிலையில் பிண எரிப்பகத்தை பராமரிப்பது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(2) பிண எரிப்பகம் ஒன்றை பராமரித்தல் அல்லது புனரமைப்பதாக குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்குள் மூடி வைப்பதாயின் அது பற்றிய அறிவித்தலை பிண எரிப்பகத்தில் மற்றும் பிண எரிப்பகத்தின் அனுமதிப்பத்திரம் வழங்கும் அலுவலகத்தின் முன்பாக தெரியக்கூடிய வகையில் சாட்சிப்படுத்துவது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

16. (1) சடலங்களை எரிப்பதற்காக அறவிடப்படும் கட்டணங்கள் பிரதேச சபையின் பிரேரணையின் உடன்பாட்டுக்கு அமைய காலத்துக்குக் காலம் நிறைவேற்ற முடியும். அவ்வாறு நிறைவேற்றப்பட்டுள்ள கட்டணங்கள் நகர சபை அவசியமென கருதப்படும் சந்தர்ப்பங்களில் கடடணங்களை திருத்தி அமைக்க முடியும்.

(2) மேலுள்ள (1) ஆவது பந்தியின் கீழ் வெளியிடப்படும் அல்லது திருத்தங்கள் செய்யப்படும் கட்டணங்கள் பற்றி அரசாங்க வர்த்தமானியில் வெளியிட வேண்டும்.

17. எரிப்பகம் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் எதிர்பார்க்க முடியாத வகையில் ஏற்படும் இயந்திர கோளாறு காரணமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை தவிசாளரே தீர்மானிப்பார். அத்துடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் எந்த முறைகளிலாவது அல்லது விண்ணப்பத்தாரி சபைக்கு அல்லது தவிசாளருக்கு எதிராகவோ எவ்வித நடவடிக்கைகளையும் எடுப்பது ஒரு காரணமாக கொள்ளப்படமாட்டாது.

18. பதங்கள் தொடர்பில் வேறு வரைவிலக்கணங்கள் அவசியப்பட்டாலன்றி –

"சபை" என்பது, நகர சபை எனக் கருதப்படும் ;

"தவிசாளர் என்பது" நகர சபையின் தவிசாளர் எனக் கருதப்படும் ;

"பிண எரிப்பக பொறுப்பாளர்" என்பது சபைக்கு சொந்தமான பிண எரிப்பகம் ஒன்றின் பொறுப்பாளராக இருந்து செயற்படுவதற்காக நியமிக்கப்படும் ஒருவர் எனக் கருதப்படும் ;

"சடலம்" என்பது, மனிதர் ஒருவரின் பூதவுடல் அல்லது சடலம் ஒன்றின் பகுதி அல்லது உயிரிழந்த பிறந்த குழந்தையொன்றின் சடலம் ஒன்றும் இதில் அடங்கும்.

**"அ" அட்டவணை**

*4 ஆவது துணை விதி*

........................................ பிண எரிப்பகத்தில் சடலம் ஒன்றை எரிப்பதற்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :..........................................................................................
முகவரி :..........................................................................................
தேசிய அடையாள அட்டை இலக்கம் :..........................................................................................
கிராம அலுவலர் பிரிவு :..........................................................................................

2. உயிரிழந்தவரின் பெயர் :..........................................................................................
வசித்து வந்த முகவரி :..........................................................................................
கிராம அலுவலர் பிரிவு :..........................................................................................
தேசிய அடையாள அட்டை இலக்கம் :..........................................................................................

3. உயிரிழந்தவருக்கும், விண்ணப்பதாரருக்கும் இடையிலான உறவு :..........................................................................................
4. மரணச் சான்றிதழ்களின் இலக்கம் மற்றும் பெயர் :..........................................................................................
5. மரணத்தை பதிவு செய்த பதிவாளரின் பெயர் மற்றும் முகவரி :..........................................................................................
..........................................................................................
6. மரணத்திற்கான காரணம் :..........................................................................................
7. மரண விசாரணை நடாத்தப்பட்டிருப்பின் திகதியும், நேரமும் :..........................................................................................
8. மரண விசாரணை அதிகாரியின் பெயரும், பதவியும் :..........................................................................................
9. மரண விசாரணை அதிகாரியின் தீர்ப்பு :..........................................................................................
10. சடலத்தை எரிக்க அங்கீகாரம் வழங்கப்படுகின்றதா என்பது :..........................................................................................
11. எரிப்பதற்கு தேவையான திகதியும், நேரமும், (விருப்ப தொடர்முறைக்கு அமைய)
(i) ..........................................................................................
(ii) ..........................................................................................
(iii) ..........................................................................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானதும், உண்மையானதும் என்று உறுதி செய்கின்றேன். உரிய சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளன.

....................................
விண்ணப்பத்தாரியின் கையொப்பமும், திகதியும்.

**அலுவலக உபயோகத்திற்கு மட்டும்**

அனுமதிப்பத்திரம் வழங்குவதை அங்கீகரிக்கின்றேன் பின்வரும் காரணங்களின் அடிப்படையில் அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரிக்கின்றேன்.

..........................................................................................
..........................................................................................
..........................................................................................

..................................
கையொப்பம்,
தவிசாளர்/அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.
திகதி :....................................................

தவிசாளர்/அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது.

.......................................................... ஆம் திகதி .................................................... ஆம் இலக்க பற்றுச்சீட்டின் மூலம் ரூபா......................
அறவிடப்பட்டது.
அனுமதிப்பத்திரத்தில் கையொப்பமிடுவதற்காக சமர்ப்பிக்கின்றேன்.
கோரிக்கை நிராகரிக்கப்பட்டமைக்கு காரணமான விடயங்களை உள்ளடக்கிய கடிதத்தில் கையொப்பம் இடுவதற்காக சமர்ப்பிக்கின்றேன்.

...........................
விடயப்பொறுப்பு உத்தியோகத்தரின் கையொப்பம்.
திகதி :....................................................

## போசணைச்சாலைத் தொடர்பான துணைவிதி

1. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்திலுள்ள போசணைச்சாலை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் போன்றவற்றை நிறைவேற்றப்படுவதாக.

2. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்திலுள்ள போசணைச்சாலை தொடர்பான துணைவிதியாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

3. தலைவரினால் இத்துணைவிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் உத்தரவுப்பத்திரம் ஒன்று இருந்தால் மட்டுமன்றி, இல்லையேல் எவராவது அல்லது ஒருவரினால் நகர சபை பிரதேச அதிகார பிரதேசத்தினுள் போசணைச்சாலையொன்றை கொண்டு நடாத்துவது மேற்கொள்ளப்படலாகாது.

4. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் சகல உத்தரவுப்பத்திரங்களும் முன்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தால் மாத்திரமேயன்றி, அந்த உத்தரவுப்பத்திரம் ஏதாவது வருடம் ஒன்றிற்காகவும், அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் முப்பத்தோரம் திகதியுடன் அது முடிவடைதல் வேண்டும்.

5. இத்துணைவிதியில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அதே முறையாக பூர்த்தி செய்யப்பட்டால் மாத்திரமேயன்றி தலைவரினால் எவராவது அல்லது போசணைச்சாலையொன்றுக்கு உத்தரவுப்பத்திரம் வழங்குவது மேற்கொள்ளப்படலாகாது.

(1) போசணைச்சாலை ஒன்றுக்கான சகல நிரந்தர நிர்மாணப் பணிகளும் தலைவரினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு இசைவாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) அந்நிலையம் சிறந்த புதுப்பிக்கப்பட்ட நிலையில் கொண்டு நடாத்தப்படல் வேண்டும் .

(3) அந்நிலையத்தின் சகல அறைகளினதும் சுவர்கள் 2.5 மீற்றருக்கு குறையாத உயரத்தில் அமைந்திருப்பதுடன், அச்சுவர்கள் நிரந்தரமாக அமைக்கப்பட்டிருப்பதுடன் அச்சுவர்களின் இருபக்கங்களும் பூச்சுவேலைகள் செய்யப்பட்டு மை வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) போசணைச் சாலையின் உட்பகுதி சூழலிலுள்ள சகல அறைகளுக்கும் உட்கூரைகள் (சீலிங்) பொறுத்தப்பட்டிருப்பதுடன் அவ் உட்கூரைகள் (சிவிலிங்) நிலமட்டத்திலிருந்து ஆகக்குறைந்து 2.5 மீற்றருக்கு குறையாத உயரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

(5) சகல அறைகளும் திறக்கக்கூடிய வகையில் ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருப்பதுடன் ஒவ்வொரு ஜன்னல்களும் திறக்கப்படும் போது அந்த ஜன்னல்களின் இடைவெளிகளின் சதுரபரப்பு அறைகளின் நிலப்பரப்பின் பதினைந்தில் ஒன்றுக்கு குறையாத வகையில் அமைந்திருத்தல் வேண்டும். அப்படி இருந்தும் ஏதாவது அறையொன்றுக்கு குளிரூட்டி ஒன்று பொருத்தப்படும் சந்தர்ப்பத்தில் இந்த ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது.

(6) கூரை ஏதாவது நிரந்தர பொருளினால் வேயப்பட்டிருத்தல் வேண்டும்.

(7) போசணைச் சாலையின் நிலப்பகுதி சீமெந்து இடப்பட்டு பூச்சு வேலைகளுடன் மட்டப்படுத்தப்பட்டு அல்லது தரை ஓடுகள் நிலப்பகுதிக்கு பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(8) போசணைச்சாலையின் உட்புறசூழலில் உருவாகும் கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்காக கழிவுத்தொட்டிகள் வைத்திருப்பதுடன் அத்தகைய கழிவு தொட்டிகளில் ஈ மற்றும் ஏனைய கிருமிகள் ஊர்வன பிராணிகள் உட்புக முடியாத வகையில் மூடி வைக்கக்கூடிய கதவுகள், மூடிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(9) போசணைச்சாலையின் சுற்றாடலில் உருவாகும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக இத்துணைவிதியின் கீழ் காட்டப்பட்டுள்ள பணிப்புரைகளுக்கு அமைய நடைமுறைப்படுத்த வேண்டிய முறைகளுக்குத் தேவையான ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) போசணைச்சாலையின் உள்ளகப் பகுதிகளில் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் சிறந்த முறையில் இருப்பதுடன், மேசை, நாற்காலி, என்பன மரத்தினாலும் அல்லது உலோகங்களினால் செய்யப்பட்டு முலாம் பூசப்பட்டிருப்பதுடன் அல்லது கண்ணாடி தகடுகளை பயன்படுத்தல் வேண்டும்.

(11) நுகர்வோர்களினால் பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் பாத்திரங்களை கழுவி துப்பரவு செய்வதற்காக தனியாக ஒரு பகுதி நிலையத்தில் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

(12) வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களின் பாவனைக்காக போதுமான அளவில் பெண் மற்றும் ஆண்களுக்காகவும் தனித்தனியான மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(13) நுகர்வோருக்கான பாவனைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிக்குள் வாடிக்கையாளர்களின் கைகளை கழுவுவதற்காக துருப்பிடிக்காத உலோக தகடுகளிலான அல்லது மட்பாண்ட பொருளினால் செய்யப்பட்டு பளிங்கு சுவர் ஓடுகளினாலான தொட்டிகள் பொருத்தப்பட்டு தண்ணீர் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(14) நிலையத்தின் ஏதாவது அல்லது ஒரு பகுதியில் பாவனைக்குப் பின் அகற்றப்படும் கழிவு நீர் தடை ஏதும் இன்றி வடிந்து செல்வதற்கான பொருத்தமான வடிகால் முறையொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். எந்நேரத்திலாவது பொது இடங்களில் அக்கழிவு நீரை விடுவிப்பதற்கு முற்படலாகாது.

(15) அந்நிலையத்தில் தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(16) நிலையத்தில் தேனீர், கோப்பி அல்லது பால் என்பன தயாரிக்கப்படும் பகுதியில் சுத்தமான துருப்பிடிக்காத உலோகத்தகட்டிலான அல்லது மட்பாண்ட தரை ஓடுகள் பதிக்கப்பட்ட அல்லது வேறு வெளிப்படையாக தெரியாத வகையிலான பொருட்களைக் கொண்ட பொருளினால் அவை அணவல்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

6. போசணைச் சாலைக்கு உரிய சகல பகுதிகளும் மைவர்ணம் பூசப்பட்டு சிறந்த நிலையில் அவற்றைக் கொண்டு நடாத்துவது உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

7. உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தினை குறைந்தது நாளொன்றுக்கு இருமுறை வீதம் கழுவி சுத்தப்படுத்தல் வேண்டும். அத்துடன் கழிவுநீர் செல்லும் வடிகால் ஒரு நாளைக்கு இருமுறை நீரினால் கழுவி சுத்தப்படுத்தல் வேண்டும்.

8. போசணைச்சாலையின் சூழலில் செல்லப்பிராணிகளாகிய நாய், பூனை என்பவற்றை வளர்ப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.

9. போசணைச்சாலையிலுள்ள மலசல, கூடங்களை குறைந்த அளவு ஒரு நாளைக்கு இருமுறை கழுவி சுத்தம் செய்வதுடன் கிருமிநாசினி திரவங்களைப் பாவித்து துர்நாற்றங்கள் ஏற்படாதவாறு பாதுகாக்க வேண்டும்.

10. போசணைச்சாலையில் உணவுவகைகள் தனித்தனியாக வைத்திருத்தல், உணவுகளை பாத்திரங்களிலிருந்து எடுப்பதற்கான உரிய உபகரணங்களை பாவிப்பதுடன் அவை அனைத்தையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

11. (அ) போசணைச்சாலையினுள் உருவாகும் சகல கழிவுப் பொருட்களையும் –

(i) உக்கல் கழிவுப் பொருட்கள் ;
(ii) கண்ணாடி ;
(iii) கடதாசி மற்றும் கடதாசியிலான கழிவுப் பொருட்கள் ;
(iv) பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் மற்றும் பிளாஸ்டிக்கிலான பொருட்கள் ;
(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருடகள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக பாகங்கள் என்பவற்றை வெவ்வேறாக சேகரிக்கப்படல் வேண்டும் .

12. (அ) ஏதாவது தொற்றுநோய், தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது அண்மையில் அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த எவராவது அல்லது ஒருவர் அல்லது அத்தகைய ஏதாவது நோயொன்றினால் பீடிக்கப்பட்டிருக்கும் ஒருவருக்கு அண்மையில் வைத்தியம் செய்யப்பட்டு வரும் போது எவராவது அல்லது ஒருவருக்கு அத்தொற்று நோயின் மற்றும் விஷக் கிருமிகளின் போசணை கால எல்லை முடிவடைந்திருந்தாலும் இதனகத்துப் பின்னர் அல்லது அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் எவராவது அல்லது ஏதாவது முறையினால் பணியில் அல்லது அவ்வாறான பணியில் ஈடுபட்டிருக்கும் ஒருவரின் உதவியாளர் ஆகவும் அல்லது ஈடுபட்டிருத்தல் அல்லது ஈடுபடச் செய்தல் அல்லது ஏதாவது பணியில் ஈடுபடுவதற்கு இடமளிப்பது தவிர்க்கப்பட வேண்டியதொன்றாகும் ;

(ஆ) நன்றாக கழுவி சுத்தம் செய்யப்பட்டிருக்கும் உடைகளை அணிந்திருந்தால் மட்டுமே தவிர எவராவது அல்லது ஒருவரினால் போசணைச்சாலையின் எத்தகைய அல்லது முறைகளிலும் பணிகளில் ஈடுபடுவது அல்லது ஈடுபடுவதற்கு இடமளிப்பது தவிர்க்கப்படல் வேண்டும் ;

(இ) உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள சகலரும் குறைந்தது ஒரு வருடத்தில் ஒரு முறையாவது வைத்திய பரிசோதனை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இது உத்தரவுப் பத்திரம் பெற்ற பயனாளியின் கடமையாகும்.

13. உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள நிலையத்தின், உணவு, பானம் என்பவற்றை தயாரித்து ஒழுங்குபடுத்தும் கடமையில் ஈடுபட்டுள்ள சகல பணியாளர்களுக்கும் தனித்தனியான சீர் உடைகள், வழங்கப்படுவதுடன், அப்பணியாளர்கள் கடமையில் ஈடுபடும் எல்லா சந்தர்ப்பங்களிலும் அவற்றை அணிந்துள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துவது உத்தரவு பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

14. தலைவர் அல்லது தலைவரினால் அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள உணவுவகைகளின் மாதிரிகளை அதற்குரிய விலை கொடுத்து வாங்குவது சட்டரீதியானதாகும்.

அதைத் தவிர எவராவது அல்லது உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள உரிமையாளரினால் அவ்வாறு கொள்வனவு செய்வதை மறுப்பதோ அல்லது அதற்கு தடையாயிருப்பது என்பவற்றை மேற்கொள்ளப்படலாகாது.

15. தலைவர் அல்லது தலைவரினால் தனது பணியை மேற்கொள்வதற்காக அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் போசணைச்சாலைக்குள் புகுந்து உணவுகளை பரிசீலனை செய்வது சட்ட ரீதியானதாகும். அத்துடன் அந்நிலையத்தில் நுளைந்து பரிசீலனை செய்வதற்கு உத்தரவுப் பத்திரம் பெற்றவர் அல்லது அந்நிலையத்துக்கு பொறுப்பாக இருப்பவர் ஒருவர் அல்லது இடமளிப்பதுடன் தன்னால் ஆன சகல உதவிகளையும் வழங்க வேண்டும்.

16. இத்துணைவிதியின் கீழ் வரும் ஏற்பாடுகளை மீறும் வகையில் போசணைச்சாலையை கொண்டு நடாத்தும் போது மற்றும் மீறுதல் தொடர்பாக தலைவரினால் அறிவித்தல் கொடுக்கப்படுவதன் மூலம் அவ்வறிவித்தலின் கீழ் அக்குறைகளை சரி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் அவற்றை நிவர்த்தி செய்யாத சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்டுள்ள உத்தரவுப்பத்திரம் சபைத் தலைவரினால் இரத்துச் செய்யப்படுவது சட்ட ரீதியானதாகும்.

17. இத்துணை விதியின் கீழ் உத்தரவுப்பத்திரமின்றி போசணைச் சாலையொன்றை கொண்டு நடாத்துவது குற்றமாவதுடன், அக்குற்றம் சம்பந்தமாக நீதிமன்றத்தின் ஊடாக குற்றவாளியாக ஆக்கப்படுவது மட்டுமன்றி நகர சபை கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ் தண்டனை ஒன்றுக்கு கீழ்படிதல் வேண்டும்.

18. வசனங்கள் தொடர்பாக பொருள்கோடல் தேவைப்பட்டாலன்றி இத்துணைவிதியில் –

"தலைவர்" என்பது, நகர சபையின் தலைவர் ;

"அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்" என்பது தலைவரினால் நிச்சயிக்கப்பட்ட அல்லது பொதுவாக ஏதாவது பணியொன்றுக்காக அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் எனக் கருதப்படும்.

**மீன் விற்பனை நிலையங்கள் தொடர்பான துணைவிதி**

1. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்திலுள்ள மீன் விற்பனை நிலையங்களை ஒழுங்குபடுத்தல் மேற்பார்வை செய்தல், மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பாகவும், அதற்கான கட்டணங்களை அறவிடுதல் என்பதற்காக நிறைவேற்றப்படுவதாகுக.

2. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்திலுள்ள மீன் விற்பனை செய்தல் தொடர்பான துணைவிதியாக எடுத்துக்காட்டப்படலாம்.

3. நகர சபை அதிகார பிரதேசத்தினுள் எவராவது அல்லது ஒருவரினால் நகர சபை தலைவரினால் இத்துணைவிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் உத்தரவுப்பத்திரமின்றி மீன் விற்பனை செய்தல் பணிகளுக்காக எந்த ஒரு இடத்தையும் பாவிக்கலாகாது.

4. இத்துணைவிதியின் கீழ் உத்தரவுப்பத்திரமொன்றை பெறுவதற்காக விண்ணப்பிக்கும் வியாபார நிலையம் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக இருந்தால் மட்டுமேயன்றி தலைவரினால் எவராவது அல்லது ஒருவருக்கு மீன் விற்பனை வியாபார நிலையமொன்றை கொண்டு நடாத்துவதற்குரிய உத்தரவுப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

(1) மீன் விற்பனைக்காக காட்சிப்படும் பகுதி தரை ஓடுகள் பதிக்கப்பட்டு பூச்சு வேலைகள் சீமெந்து கலவை அல்லது துருப்பிடிக்காத உலோகத்தகடுகள் அல்லது பயன்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) மீன் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படும் நிலையத்தின் நிலம் மற்றும் களஞ்சிப்படுத்தப்படும் நிலையத்தின் நிலம் என்பன சீமெந்து கலவையினால் மட்டுப்படுத்தப்பட்டு அல்லது தரை ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) கழிவு நீர் வடிந்து செல்லும் வசதிக்காக தேவையான சரிவான தன்மைகளுடன் சீமெந்து கலவையினால் பூச்சுவேலைகள் மேற்கொள்ளப்பட்டு தரை ஓடுகள் பதிக்கப்பட்ட வடிகால்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) (3) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வடிகால்களில் வடிந்து செல்லும் கழிவு நீர் மார்க்கங்களுக்குள் வடிந்து செல்வதை தவிர்த்துக்கொள்வதற்கு போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதுடன் அங்கு கழிவு நீரை உறிஞ்சிக் கொள்வதற்கு ஏற்றவகையில் குழிகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) கழிவு நீர் வடிந்து செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள உறிஞ்சக்கூடிய குழி, காற்றுடன் துர்நாற்றம் கலக்கப்படாதவகையில் நன்றாக மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) மீன் விற்பனை நிலையத்தில் அகற்றப்படும் உக்கல் கழிவுகளை மூடிவைப்பதற்கான போதுமான அளவில் தொட்டிகள் அமைக்கப்பட்டிருப்பதுடன் நாளாந்த வியாபார நடவடிக்கைகளின் இறுதியில் அங்குள்ள கழிவுப் பொருட்களை நிலமட்டத்திலிருந்து குறைந்த அளவு 0.5 மீற்றர் ஆழத்தில் குழியொன்றை அமைத்து அதில் இடுதல் அல்லது பிரதேச சபையினால் அடிக்கடி தீர்மானிக்கப்படும் செயற்பாட்டு முறைகளுக்கு அமைய அவை அகற்றப்படல் வேண்டும்.

5. உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள எவராவது அல்லது மீன் விற்பனை நிலையத்தின் நாளாந்த கருமங்களின் இறுதியில் அந்நிலையத்தின் நிலப்பகுதி சுவர்கள் தரை ஓட்டினால் பதிக்கப்பட்டுள்ள இடங்கள் அல்லது சீமெந்து பூச்சு வேலைகள் செய்யப்பட்ட பகுதிகள் மற்றும் மீன்களை வெட்டுவதற்காக பயன்படுத்தப்படும் இடங்கள் உபகரணங்கள் மீன்விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படும் இடங்கள் என்பவற்றை கிருமிகளை அழிக்கும் கிருமிநாசினி திரவங்களை உபயோகித்து கழுவுதவற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

6. உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள எவராவது அல்லது மீன் விற்பனை நிலையத்தின் மற்றும் அதனைச்சூழவுள்ள வடிகால்களையும் மீன்களை களஞ்சியப்படுத்தும் பகுதிகளை தயாரித்தல் அல்லது விற்பனை மற்றும் சம்பந்தமாக உபயோகிக்கப்படும் சகல பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் சிறந்த புதுப்பித்தலுடன் மற்றும் துர்நாற்றம் இன்றி பேணப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7. உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தின் நாளாந்த அலுவல்கள் முடிவுற்றதுடன் விற்பனை செய்யப்படாத எஞ்சிய மீன்கள் அதிககூடிய சக்தி கொண்டுள்ள குளிரூட்டிகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தால் மற்றும் அவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலிருந்து அடுத்த நாள் மீன் விற்பனை நிலையம் திறக்கப்படும் வரை அக்குளிரூட்டி உரிய முறையில் செயல்பட்டிருந்தால் மட்டுமேயன்றி இல்லையேல் எஞ்சிய மீன்வகைகள் அல்லது அடுத்த நாளில் விற்பனைக்காக காட்சிப்படுத்தல் அல்லது குளிரூட்டியினை அல்லது உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் வைத்திருத்தல் அல்லது வைக்கலாகாது.

8. உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள எவராவது, மீன் விற்பனை நிலையமொன்றில் நாய்கள், பூனைகள், எலிகள், கிருமிகள் அத்துடன் ஏனைய விலங்குகள் வராதவாறு தடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் மீன்களைப் போட்டு வைத்திருப்பதற்கும் தயாரிப்பதற்கும் அல்லது விற்பனைக்கு பாவிக்கப்படும் உபகரணங்கள் அல்லது பாத்திரங்கள் தவிர்ந்த ஏதாவது பொருட்கள் அல்லது உடைகள் அல்லது நித்திரை கொள்ளும் பாய்கள் அல்லது ஏனைய எந்த அல்லது பொருட்களையும் வைத்திருப்பதை தவிர்த்தல் வேண்டும்.

10. (1) ஏதாவது தொற்று நோய், தொடும் நோய் அல்லது சர்ம நோய் என்பவற்றினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது மிக அண்மையில் அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டுள்ள எவராவது அல்லது ஒருவர் அல்லது அவ்வாறான ஏதாவது நோயினால் பீடிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒருவருக்கு அண்மையில் பரிகாரம் செய்யப்பட்டு வரும் எவருக்காவது அல்லது ஒருவருக்கு தொற்றுநோய் வலுவிலக்கும் கால எல்லை முடிவுற்று இருந்தால் மட்டுமேயன்றி இல்லையெனின் எவருக்காவது அல்லது மீன் விற்பனை நிலையத்தில் எவராவது அல்லது ஒருவருக்கு மீன் விற்பனை பணிகளில் ஈடுபடுவதை தவிர்ப்பதுடன் அவருக்கு எவ்விதத்திலும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கலாகாது.

(2) நன்றாக கழுவப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ள உடைகளை அணிந்தவர்கள் இருந்தால் மட்டுமேயன்றி, இல்லையேல் எவராவது அல்லது ஒருவரினால் மீன் வியாபார நிலையமொன்றில் ஏதாவது அல்லது முறையொன்றில் ஈடுபடுவது அல்லது ஈடுபடுவதற்கு இடமளிப்பது அல்லது தவிர்க்கப்படல் வேண்டும்.

(3) மீன் வியாபார நிலையமொன்றில் சேவையில் ஈடுபட்டுள்ள சகல பணியாளர்களும் குறைந்தது வருடமொன்றிற்கு ஒரு முறையாவது வைத்திய பரிசோதனை ஒன்றுக்கு உட்படுத்தப்படச் செய்வது உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

11. மீன் வியாபார நிலையங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள சகல சேவையாளர்களிடமும் பாதுகாப்பு மேலாடைகள், கையுறைகள் மற்றும் தேவைப்படும் ஏனைய பாதுகாப்பு உடைகள் வழங்கப்பட்டிருப்பதுடன், அச்சேவையாளர்கள் மீன் வியாபார நிலையத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள சகல சந்தரப்பங்களிலும் அத்தகைய பாதுகாப்பு ஆடைகளை அணிந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்துவது உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

12. உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைவரினாலும் தமது பயன்பாட்டிற்காக சோப் அல்லது சோப் நீர் கலவைகள் என்பன வைத்திருப்பது உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் கடமையாகும்.

13. தலைவர் அல்லது அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் ஏதாவது மீன் விற்பனை நிலையமொன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள அல்லது உள்ளே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஏதாவது மீன் வகைகளின் மாதிரி ஒன்றை கொள்வனவு செய்வது சட்ட ரீதியானதாக இருந்தாலும் அதனைத் தவிர எவராவது உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள பயனாளியினால் அங்கு மீன் கொள்வனவு செய்வதை நிராகரிப்பது அல்லது இடைஞ்சலை ஏற்படுத்துவது தவிர்க்கப்படல் வேண்டும்.

14. (1) உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தினுள் உருவாகும் சகல கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்பட்டால் மாத்திரமே இல்லையேல் ஏனைய கழிவுப் பொருட்கள் :-

(i) உக்கல் கழிவுப் பொருட்கள் ;
(ii) கண்ணாடி ;
(iii) கடதாசி மற்றும் கடதாசியிலான கழிவுப் பொருட்கள் ;
(iv) பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றினால் கழிவுப் பொருட்கள் ;
(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருடகள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக பாகங்கள் ;
(vi) உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் வேறு மூலப்பொருட்களின் எஞ்சிய பகுதிகள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கும் துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பகுதிகள்.
(vii) தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள்

போன்ற வகைகளின் கீழ் வகைப்படுத்துவதற்கு திடடமிடப்படுவதுடன் ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களையும் சேர்த்து வைப்பதற்கான ஒழுங்குகள் வெவ்வேறு பாத்திரங்கள் அல்லது தொட்டிகளில் போடுவதற்கான திட்டமிடுதலை செய்வது உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகவுள்ளது.

(2) மேலுள்ள (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ள பாத்திரங்கள் அல்லது தொட்டிகளில் போடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை பிரதேச சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றப்பட்டால் மட்டுமேயன்றி தலைவரினால் அதற்காக பணிக்கப்பட்டுள்ள முறைகளில் இறுதி அகற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

15. இத்துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ளவற்றை பரிசீலனை செய்வதற்கு தலைவருக்கு அல்லது அவரால் அதிகாரம் பணிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்கு பரிசீலனை செய்வதற்கு அதிகாரம் கிடைத்துள்ள குறிப்பிட்ட காலமாவது மீன் விற்பனை வியாபார நிலையத்தில் மீன் வியாபாரம் செய்யப்படும் எச்சந்தர்ப்பத்தையும் கொண்டதாக கருதப்படும்.

16. இத்துணைவிதியின் கீழ் உத்தரவுப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதாவது மீன் விற்பனை செய்யும் நிலையத்தைக் கொண்டு நடாத்தப்படும் நிலையம் இத்துணைவிதியின் 4 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏதாவது அல்லது பணிப்புகளுக்கு அமைவாக கொண்டு நடாத்தப்பட்டு முடிவுற்றால், அல்லது இத்துணைவிதியில் அல்லது வேறு ஏதாவது துணைவிதியின் பணிப்புகளுக்கு முரணாகும் சந்தர்ப்பத்தில் நிலையாக குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்பு அந்நிலையத்தின் அந்த பணிப்புகளுக்கு அமைவான நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான சகலதையும் நிலைநாட்டுமாறு உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ளவருக்கு பணிப்புகளை வழங்கும் அறிவித்தல் ஒன்று தலைவரினால் அந்த உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ளவரிடம் ஒப்படைக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

17. 16 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் அறவித்தல் கிடைக்கப்பெற்ற எவராவது அல்லது உத்தரவுப்பத்திரம் பெற்றிருப்பவரினால் அவ் அறிவித்தலில் நிரையாக குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்பு அவ் அறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ள முறைக்கு அமைவாக செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விடயங்கள் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சில சந்தர்ப்பங்களில் அவ் அறிவித்தலில் நிலையாக குறிப்பிடப்பட்டுள்ள நியதியை நீடிப்பதற்கு தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இருப்பினும் அத்தகைய முறையில் நீடிக்கப்படும் காலம் பதினான்கு தினங்களுக்கு மேற்படலாகாது.

18. 19 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் அறிவித்தலைப் பெற்றுள்ள எவராவது அல்லது உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ளவரினால் அவ் அறிவித்தலில் நிலையாக பணிக்கப்பட்டுள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன்பு அவ் அறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ள முறைகளுக்கு அமைவாக செயற்படாத சந்தர்ப்பத்தில் அந்நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ள உத்தரவுப் பத்திரத்தை சபைத் தலைவரினால் இரத்துச் செய்யப்படுவது சட்டரீதியானதாகும்.

19. இத்துணைவிதியை எவராவது அல்லது ஏற்பாடுகளை கட்டுமீறுதல் அல்லது முரணான வகையில் செயற்படுத்தல் என்பன குற்றமாவதுடன் குற்றம் சம்பந்தமாக குறித்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத்தின் ஊடாக அக்குற்றத்திற்கு குற்றவாளியாக குற்றம் சுமத்தப்படும் போது பணிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய தண்டனை மற்றும் அத்தகைய கட்டுமீறுதல் அல்லது முரணாக செயற்படுதல் என்பவற்றை தொடர்ந்து மேலும் செய்யும் போது அது தொடர்பாக குற்றவாளியாக ஆக்கப்பட்ட பின்பு அல்லது அத்தகைய முரணான செயற்பாட்டின் மீது கவனம் செலுத்தப்பட்டு தலைவரினால் அல்லது அதிகாரம் வழங்கப்பட்டுள்ள வேறு உத்தியோகத்தரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒப்படைக்கப்பட்ட பின்னர் கட்டுமீறுதல் அல்லது முரணாக செயற்படுதல் என்பவற்றை மேலும் தொடர்ந்து செய்யும் ஒவ்வொரு நாளுக்குமாக பணிக்கப்படக்கூடிய மேலதிக தண்டனையின் ஆகக்கூடிய முறையே 255 ஆவது அத்தியாயமான நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவில் பணிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டப்பணத்திற்கும் ஆளாகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

20. வசனங்கள் சம்பந்தமாக பொருள் கோடல் தேவைப்பட்டால் மாத்திரமன்றி,

"சபை" என்பது, நகர சபையாக கருதப்படும் ;

"தலைவர்" என்பது, பிரதேச சபையின் தலைவராக கருதப்படும் ;

"நகர சபை பிரதேசம்" என்பது, பிரதேச சபையை உள்ளடக்கும் அதிகாரப் பிரதேசம் எனக்கருதப்படும்.

**நகர சபை வீதிகளில் பயணிக்கும் நிறைகூடிய வாகனங்கள் மற்றும் அவற்றின் வேக வரையறைகளை கட்டுப்படுத்தல் தொடர்பான துணைவிதி**

1. நகர சபை அதிகார பிரதேசத்தினுள் நகர சபை வீதிகளில் வாகனங்களின் நிறை மற்றும் வேக வரையறையை நிர்ணயித்தல், அதனூடாக வீதிகளில் அல்லது தெருக்களில் ஏற்படக்கூடிய நட்டங்கள் ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை குறைத்தல் மற்றும் போக்குவரத்துகளை கட்டுப்படுத்துவதற்காகவும் இத்துணைவிதி நிறைவேற்றப்படுவதாகுக.

2. இத் துணைவிதி நகர சபை வீதிகளில் நிறை மற்றும் வேக வரையறை தொடர்பான துணைவிதியாக எடுத்துக் காட்டப்படலாம்.

3. நகர சபையினால் நகர சபை அதிகார பிரதேசத்தில் நகர சபைக்குரிய வீதிகள் அல்லது தெருக்கள் போன்றவற்றிக்கிடையில் நகர சபையினால் பொறுத்தமானது என கருதப்படும் ஏதாவது வீதி அல்லது தெருக்கள் தொடர்பாக அவ்வீதிகளில் அல்லது தெருக்களில் பிரயாணம் செய்யக்கூடிய வாகனமொன்றின் நிறை மற்றும் வேகத்தின் வரையறை ஆகக்கூடியது என்பன சபை உடன்பாட்டின் ஊடாக தீர்மானம் எடுக்கப்பட்டு பணிப்புரை வழங்குவது சட்டரீதியானதாகும்.

4. மேலுள்ள 3 ஆவது துணை விதியில் குறிப்பிடப்படும் பணிப்புரைகள் நகர சபை தலைவரினால் அங்குள்ள வீதி அல்லது தெருக்கள் ஆரம்பமாகும் இடத்திலும் முடிவடையும் இடத்திலும் உட்பிரவேசிக்கும் பிரதான இடத்திலும் பொதுமக்கள் பார்வையிடக்கூடிய விதத்தில் அறிவித்தல் பலகை அல்லது பலகையில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

5. இங்கு மேலுள்ள 4 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புரைகளை நிறைவேற்றும் போது தெருக்களின் கட்டளைச் சட்டத்தின் மற்றும் போக்குவரத்து கட்டளைச் சட்டத்தில் வரும் பணிப்புகளுக்கு அமைவாக உரிய அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

6. நகர சபைக்குரிய வீதிகள் அல்லது தெருக்கள் மீள் அமைப்பு சம்பந்தமாக அல்லது நிர்மாணிக்கும் போது நகர சபைத் தலைவரினால் மூன்று நாட்களுக்கு முன்பு மேற்கொள்ளப்படும் முன் அறிவித்தலின் பின்னர் அவ்வீதி அல்லது தெருக்கள் அல்லது அங்குள்ள பாதைகளில் அல்லது தெருக்களின் பகுதிகள் மூடப்படுதல் அல்லது போக்குவரத்துக்களை மட்டுப்படுத்தல் நகர சபை தலைவரினால் மேற்கொள்ள முடியும்.

7. நகர சபைக்குரிய வீதிகள் அல்லது தெருக்களின் இரு பக்கங்களிலும் வசிப்பவர்களினால் வீதி அல்லது தெருக்களுக்கு கழிவு நீர் எவ்வகையிலும் வடிந்து செல்வதை தவிர்த்தல் வேண்டும்.

8. நகர சபைக்குரிய வீதி அல்லது தெருக்களின் இரு பக்கங்களிலும் வாழும் மக்களினால் வீதிக்கு அல்லது தெருக்களுக்கு எவ்விதத்திலும் இடைஞ்சல் மற்றும் தடைகள் ஏற்படும் வகையில் மரங்களின் கிளைகள், இலைகள், என்பவற்றை போடுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

9. இத் துணைவிதியை எவராவது அல்லது ஏற்பாடுகளை கட்டுமீறுதல் அல்லது முரணாக மீறுதல் என்பன குற்றமாவதுடன், அக்குற்றம் சம்பந்தமாக குறித்த அதிகாரம் கொண்டுள்ள நீதிமன்றத்தின் ஊடாக அக்குற்றத்திற்கு குற்றவாளியாக காணப்படும் போது பணிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டனை மற்றும் அதனைக் கட்டுமீறுதல் அல்லது முரணாக தொடர்ந்து மேலும் செயற்படும் போது அது தொடர்பாக குற்றவாளியாக கொள்ளப்பட்ட பின்னர் அல்லது அத்தகைய முரணான செயல்பாட்டில் கவனம் செலுத்தப்பட்டு தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்றுள்ள வேறு உத்தியோகத்தரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒப்படைக்கப்பட்ட பின்னர் கட்டுமீறுதல் அல்லது முரணாக மேலும் தொடர்ந்து செய்து வரும் அனைத்து ஒவ்வொரு நாளுக்குமாக பணிக்கப்பட்டுள்ள மேலதிக தண்டனையின் ஆகக்கூடியது முறையே, நகர சபை கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவில் (2) ஆவது உட்பிரிவில் பணிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டனை ஆகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

10. வாகனங்கள் தொடர்பாக பொருள்கோடல் தேவைப்பட்டால் மாத்திரமன்றி–

''தெருக்கள் மற்றும் வீதிகள்'' எனப்படுவது, பொதுமக்களுக்கு வீதி உரிமை உள்ளதாயினும் அல்லது பராமரிப்புச் செய்யப்பட்டாலும், புதுப்பிக்கப்பட்டாலும் அல்லது பராமரிக்கப்பட்டாலும் நகர சபை அதிகார பிரதேசத்தினுள் உள்ள வீதி அல்லது தெரு என கருதப்படும்.

''தலைவர்'' என்பது, நகர சபையின் தலைவர் என கருதப்படும்.

''வாகனம்'' என்பது, மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அர்த்தமாக கருதப்படும்.

## சுற்றுலா வியாபாரத் துறை தொடர்பான துணைவிதி

1. நகர சபை அதிகார பிரதேசத்தினுள் சுற்றுலா வியாபாரத் துறையை ஒழுங்கமைத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்றனவற்றிற்காக இத் துணைவிதி நிறைவேற்றப்படுவதாகும்.

2. இத் துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்தினுள் சுற்றுலா வியாபாரத்துறை தொடர்பான துணைவிதி என எடுத்துக்காட்டப்படலாம்.

3. இத்துணைவிதியின் கீழ் நகர சபை தலைவரினால் உரிய பணிகளுக்காக வழங்கப்படும் உத்தரவுப் பத்திரத்தின் கீழ் மட்டுமேயன்றி, எவராவது ஒருவரினால் நகர சபை அதிகார பிரதேசத்திலுள்ள ஏதாவது வீதிகள், தெருக்கள், பொது பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் அல்லது ஏனைய ஏதாவது பொது இடங்களில் எவராவது அல்லது பொருட்கள், பண்டங்கள் அல்லது உணவுகளை கைகளில் எடுத்துக் கொண்டு சென்று அல்லது துவிச்சக்கர வண்டி, முச்சக்கர வண்டி, வண்டில்கள் அல்லது ஏனைய வாகனங்களில் அங்குமிங்கும் கொண்டு சென்று விற்பனை செய்தல் அல்லது விற்றல் அல்லது விற்பனைக்காக வைத்திருப்பது மேற்கொள்ளப்படலாகாது.

4. மேலுள்ள 3 ஆவது பிரிவின் கீழ் வழங்கப்படும் சகல உத்தரவுப்பத்திரங்களும் முன்பு இரத்துச் செய்யப்படாதவரை எனின், வழங்கப்படும் ஏதாவது கால வரையறைகளுக்காகவும் அக்கால வரையறைக்குள் மட்டுமே செல்லுபடியாகும்.

5. சுற்றுலா வியாபாரத் துறைக்குரிய உத்தரவுப் பத்திரத்துடன் வரும் அனைத்து வேண்டுகோளும் இத்துணைவிதியின் ''அ'' அட்டவணைக்கு அமைவாக இருப்பதுடன் அதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைவாக இருப்பதுடன், அவை நகர சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள கட்டணம் செலுத்தப்பட்டு பெறப்படல் வேண்டும்.

6. இத் துணைவிதியின் கீழ் வழங்கப்படும் உத்தரவுப்பத்திரமொன்று இத்துணைவிதியின் "ஆ" அட்டவணைக்கு அமைவாக இருப்பதுடன், அதற்காக அறவிடப்படும் கட்டணம் கால அளவை கருத்தில் கொள்ளப்பட்டு சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்க முடியும்.

7. சகல சுற்றுலா வியாபாரிகளும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் போது தலைவரினால் வழங்கப்பட்டுள்ள உத்தரவுப்பத்திரத்தை வெளியில் தெரியக்கூடிய வகையில் அணிந்திருப்பதுடன், அல்லது காட்சிப்படுத்தக்கூடிய வகையிலும் அவற்றை வைத்திருத்தல் வேண்டும்.

8. தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரினால் தமது அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்கும்படி அறிவிக்கப்படும் போது அக்கடித ஆவணங்களை உடனடியாக சமர்ப்பிப்பது சுற்றுலாத்துறை வியாபாரிகளினது கடமையாகும்.

9. அனுமதிப்பத்திர பயனாளியான சுற்றுலா வியாபார வியாபாரி ஒருவர் மு. ப. 6.00 மணி தொடக்கம் பி. பி. 1.00 மணி வரையுள்ள காலப்பகுதியில் தமது வர்த்தக அலுவல்களில் ஈடுபடுவதற்கு உரிமையுண்டு. இருந்தாலும் தலைவரினால் அக்கால வரையறைக்கு மேலதிகமாகவும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக அனுமதி வழங்கப்படும். அது பற்றி அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் அவ்வாறு குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குள் வியாபாரம் செய்வதற்கு அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு உரிமையுண்டு.

10. அனுமதிப்பத்திர பயனாளி தொற்றுநோய்களினால் பீடிக்கப்பட்டிருப்பின் வியாபார நடவடிக்கைகளில் இருந்து தன்னை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

11. உணவுப்பண்டங்களை விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து மற்றும் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கைகளில் ஈடுபடல் வேண்டும்.

(1) விற்பனைக்காக கொண்டு வரப்படும் உணவுகளில் ஈக்கல் மொய்த்தலை தவிர்ப்பதற்கும் மற்றும் தூசு, கழிவுப்பொருள் துர்நாற்றம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு முடியுமான வகையில் வைப்பதுடன் அவ் உணவுகளை மனிதர்கள் தொட்டுப் பார்ப்பதற்கும் இடமளிக்கப்படலாகாது.

(2) உணவுகளை வைக்கும் வாகனங்கள், துவிச்சக்கர வண்டில்கள், பாத்திரங்கள், தட்டுகள் மற்றும் உணவுகளுடன் ஒட்டியிருக்கும் சகல உபகரணங்கள் என்பவற்றை நாள்தோறும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

(3) உணவுகளை சுற்றுவதற்காகப் பாவிக்கப்படும் கடதாசி அல்லது பொருட்களை சுத்தமாகவும் மற்றும் அதற்கான பொருத்தமான தன்மையை கடைப்பிடித்தல் வேண்டும்.

(4) உணவுகளை தொட்டுப் பரிமாறுவதற்காக சுத்தமான உபகரணங்களை பாவித்தல் வேண்டும்.

(5) உணவுகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகளுக்காக தொற்று நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவரை ஈடுபடுத்தலாகாது.

(6) எவராவது ஒருவருக்கு அல்லது பொது மக்களுக்கு தீங்கு ஏற்படாத வகையிலும் அல்லது இடையூறு ஏற்படாத வகையில் நெருப்பை பாவிப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.

(7) கழிவுப் பொருள் அல்லது அசுத்த நீர் என்பவற்றை பொது இடங்களில் ஊற்றுவதையும், கொட்டுவதையும் தவிர்ப்பதுடன் அவை சுகாதார பராமரிப்பு கருமங்களுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் அகற்றுவதற்காக தலைவர் திருப்தியடையும் விதத்தில் ஏற்பாடுகளை செய்திருத்தல் வேண்டும்.

12. பசு வதை கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலங்குகள் அல்லது விலங்குகளின் இறைச்சி என்பவற்றை சுற்றுலா வியாபார வியாபாரி ஒருவரினால் விற்பனை செய்ய முடியாது.

13. ஏதாவது கொடிய நோய் அல்லது தொற்றுநோய் பரவும் அல்லது பரவியுள்ள பிரதேசமாகவும் அல்லது விசேட சந்தர்ப்பங்களைக் காரணமாகக் கொண்டு தலைவரினால் சுற்றுலா வியாபாரம் மேற்கொள்ளப்படலாகாத பிரதேசமாகவும் வலயம், வீதி, தெருக்கள் என்பன அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் செல்லுபடியாகும்.

உத்தரவுப்பத்திரம் இருந்தாலும் அத்தகைய பிரதேசம், வலயம், வீதி, தெருக்கள் போன்ற இடங்களில் சுற்றுலா வியாபாரம் மேற்கொள்ளப்படலாகாது.

14. சுற்றுலா வியாபாரப் பணிகளின் போது உருவாகும் கழிவுப் பொருள் அதற்காக நகர சபையினால் அதிகாரப் பிரதேசத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும் ஒழுங்குமுறைகளுக்கு இசைவாக இருப்பதுடன் மட்டுமன்றி, வேறு ஏதாவது முறைகளில் அவற்றை வெளி சுற்றாடல்களுக்குள் விடுவிப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.

15. துணைவிதியின் கீழ் உத்தரவுப்பத்திரமொன்று பெறப்பட்டிருந்தாலும், பொதுச் சந்தை சுற்றாடல்களுக்குள் சுற்றுலா வியாபாரம் மேற்கொள்ளப்படலாகாது.

16. ஏதாவது இடமொன்றில் நீண்ட நேரம் தங்கியிருந்து வியாபாரம் செய்வது உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள பயனாளியினால் மேற்கொள்ளப்படலாகாது.

17. இத் துணை விதியில் எவராவது அல்லது ஏற்பாடுகளை கட்டுமீறுதல் அல்லது அதற்கு முரணான வகையில் செயற்படுதல் குற்றமாவதுடன் குற்றம் தொடர்பாக உரிய அதிகாரம் கொண்டுள்ள நீதிமன்றத்தின் ஊடாக அந்தக் குற்றத்திற்கு குற்றவாளியாக ஆக்கப்படும் பட்சத்தில் குறித்தொதுக்கப்படக்கூடிய ஆகக்கூடிய தண்டனை மற்றும் அதனை கட்டுமீறுதல் அல்லது முரணான வகையில் தொடர்ந்து மேலும் செயற்படும் போது, அது தொடர்பாக குற்றவாளியாக காணப்பட்ட பின்னர் அல்லது அவ் அத்துமீறல்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு தவிசாளரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரியினால் எழுத்துமூலமான அறிவித்தல் அளிக்கப்பட்ட பின்னர் கட்டுமீறுதல் அல்லது முரணான வகையில் செயல்படுத்தல் போன்றவற்றை மேலும் தொடர்ந்து விடாமல் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நாளுக்காக குறித்தொதுக்கப்படக்கூடிய மேலதிக தண்டனைகளில் ஆகக்கூடிய முறையே நகரசபை கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் (2 ) ஆம் உட்பிரிவில் குறித்தொதுக்கப்பட்ட ஆகக்கூடிய தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டனையின் தண்டப்பணம் ஆகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

18. இத்துணைவிதியில் சந்தர்ப்பம் வேறு வகையாக தேவைப்பட்டாலொழிய–

"சபை" என்பது, நகர சபை என கருதப்படும் ;

"தலைவர்" நகர சபையின் தலைவர் என கருதப்படும் ;

"நகரசபை அதிகாரப் பிரதேசம்" என்பது, நகர சபையின் எல்லைக்குள் அடங்கும் பிரதேசம் என கருதப்படும் ;

"உணவு" என்பது, மனிதனின் பாவனைக்காக எடுத்துக் கொள்ளப்படும் உணவு மற்றும் பானங்களின் வகைகள் என கருதப்படும்.

"சுற்றுலா வியாபாரம்" என்பது, தன்னால் அல்லது விலங்குகளின் உதவியுடன் அல்லது வாகனங்கள் அல்லது வண்டில்கள், துவிச்சக்கர வண்டி, முச்சக்கரவண்டி போன்றவற்றின் ஊடாக பொருட்களைக் கொண்டு சென்று செய்யப்படும் வியாபாரம் என கருதப்படும்.

**"அ" அட்டவணை**

சுற்றுலா வியாபாரம் சம்பந்தமான உத்தரவுப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் :

1. விண்ணப்பதாரரின் பெயர் :..............................................................
2. விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி :..............................................................
3. தற்காலிக முகவரி :..............................................................
4. தே. ஆ. அ. இலக்கம் :..............................................................
5. தொலைபேசி இலக்கம் :..............................................................
6. சுற்றுலா வியாபாரத்தின் தன்மை :..............................................................
7. சுற்றுலா வியாபாரம் மேற்கொள்ளப்படும் முறை :..............................................................
8. விண்ணப்பிக்கும் அதிகாரப் பிரதேசம் :..............................................................
9. வதிவிட பிரதேசம் :..............................................................

10. உத்தரவுப்பத்திரம் தேவைப்படும் கால எல்லை :.....................................................................................
11. சுற்றுலா வியாபாரம் செய்யப்படும் வாகனத்தின் பதிவு இலக்கம் :........................................................................

..................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

அறிவுறுத்தல் :

1. நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆள்அடையாள அட்டையின் பிரதி.
உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்காக விடய இலிகதரின் அறிக்கை.

...............
விடய இலிகிதரின் கையொப்பம்.

திகதி :..............................................................

உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கு சான்றுபடுத்துகின்றேன்/இல்லை.

...............
செயலாளர்.

திகதி :

உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கு சான்றுபடுத்துவகிறேன்/இல்லை.

......................................
தலைவர்,
நகரசபை.

திகதி :

## "ஆ" அட்டவணை

சுற்றுலா வியாபாரத்திற்காக வழங்கப்படும் உத்தர

1. உத்தரவுப் பத்திர பயனாளியின் முழுப்பெயர் :..............................................................................................
2. உத்தரவுப்பத்திர பயனாளியின் தேச. ஆ. அ. இலக்கம் : :........................................................................
3. வியாபாரத்தின் தன்மை :.......................................................................................
4. உத்தரவு வழங்கப்படும் பிரதேசம் :...................................................................
5. உத்தரவு வழங்கப்படும் கால எல்லை :....................................................................................

......................................
திகதி : தலைவர்,
நகரசபை.

(இப்பகுதி வெளியில் தெரியக்கூடியவகையில் அணிந்திருத்தல் வேண்டும் இல்லையேல் காட்சிப்படுத்தப்படல்).

நகர சபை அதிகார பிரதேசத்தில் சுற்றுலா வியாபாரத்திற்காக வழங்கப்படும் உத்தரவுப்பத்திரம்.

1. முழுப்பெயர் :.......................................................................................................
2. நிரந்தர முகவரி :..................................................................................................
3. தே. அடையாள அட்டை இலக்கம் :.....................................................................
4. உத்தரவுப்பத்திர பயனாளியின் கையொப்பம் :...................................................................
5. உத்தரவு வழங்கப்படும் பிரதேசம் :......................................................................
6. உத்தரவு வழங்கப்படும் கால எல்லை :................................................................
7. வியாபாரத்தின் தன்மை :.......................................................................................
8. உத்தரவுப்பத்திர பயனாளியின் பெயர்: :........................................ ....................................

திகதி :

......................................
தலைவர்,
நகரசபை.

## விளம்பர அறிவித்தல் தொடர்பான துணைவிதி

1. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்தினுள் ஏதாவது சிறிய தெருக்களில் தெரியக்கூடியதாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல்களை ஒழுங்குபடுத்துவதற்காகவும், கட்டுப்படுத்துவதற்காகவும், அவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல்களுக்காக கட்டணம் அறவிடுவதற்காக நிறைவேற்றப்படுவதாகுக.

2. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்தினுள் விளம்பர அறிவித்தல் தொடர்பான துணைவிதியாக எடுத்துக்காட்டப்படலாம்.

3. எவராவது ஒருவரினால் ஏதாவது சிறிய தெருவொன்றில் தெரியக்கூடிய அறிவித்தல் ஒன்றை காட்சிப்படுத்தல் அல்லது காட்சிப்படுத்துவதற்கு திட்டமிடுதல், அதற்காக பிரதேச சபையின் தலைவரினால் வழங்கப்படும் உத்தரவுப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் அன்றி செய்யப்படலாகாது.

4. இத்துணைவிதியின் பணிகளுக்காக விளம்பர அறிவித்தல் என்பது பிரதான வீதி, துணை வீதி, மாகாண சபை, பிரதேச சபை அல்லது பிரத்தியேக பாதைகள், போன்றவற்றிற்குத் தெரியக்கூடிய வகையில் பெயர்ப்பலகைகள், கொடி, பதாதைகள், அலுமினிய தகடு, இரும்பு, பொலிதீன், துணி அல்லது இலை குழைகள் போன்றவற்றைப் பயன்படுத்தல், இல்லையெனின் கல்வெனய்ஸ் தகடுகளைப் பயன்படுத்தி செய்யப்படும் விளம்பர பெயர்ப்பலகைகளும், வீடுகள், கடைகள், ஹோட்டல்கள், சுவர்கள், மதில் சுவர்கள் போன்ற இடங்களில் எழுத்துக்கள் அல்லது உருவங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தும் ஏதாவது வியாபார நிலையங்கள், வியாபார பொருட்கள் வியாபாரத்திற்காக செய்யப்படும் விளம்பர அறிவித்தல்கள் மற்றும் வர்த்தக கண்காட்சிகள், களியாட்ட விழாக்கள் போன்ற சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும் விசேட அறிவித்தல் பலகைகள் என்பனவும் விளம்பர அறிவித்தலாக கருதப்படும்.

5. (1) எவராவது அல்லது அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்கான உத்தரவுப் பத்திரத்திற்கான சகல விண்ணப்பங்களும் இங்கு வெளியிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்படிவங்களுக்கு அமைவாக இருப்பதுடன், இத்துணைவிதியின் ஆறாவது பிரிவுக்கு இசைவாக அவ்விளம்பர அறிவித்தல்களை காட்சிப்படுத்துவதற்கு விரும்பும் தினத்திற்கு மூன்று தினங்களுக்கு முன்பு உரியவர்கள் சபையின் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) நகர சபையினால் வழங்கப்படும் விண்ணப்பப்பத்திரங்களுக்காக அறவிடப்படும் கட்டணங்கள் சபையினால் காலத்திற்குக் காலம் கொண்டு வரப்படும் தீர்மானத்தின் உடன்பாட்டின் மூலம் தீர்மானிக்க முடியும்.

6. ஐந்தாவது துணை விதியின் கீழ் சமர்ப்பிக்கப்படும் சகல விண்ணப்பங்களுடன் கீழே குறிப்பிடப்படும் தேவைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(1) அறிவித்தலை காட்சிப்படுத்துவற்காக விரும்பும் வடிவமைப்பை அமைப்பதற்கான அநுகூவமான பருமனுக்கு குறையாத பருமனுடைய வரையும் நிலவரைபடம் .

(2) 1:1000 பருமனுக்கு குறையாத பருமனுக்கு வரையும் வடிவமைப்பின் உருவக் குறிப்பு.

(3) அத்திட்டம், உருவக்குறிப்பு அல்லது நியம குறியீடு, இத்துணை விதிக்கு அமைவானதாகும் வகையில் திருத்தம் செய்யப்பட்டிருந்தால், அத்திருத்தம் பற்றியது.

(4) காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தலுக்காக பயன்படுத்தப்படும் வர்ணங்கள் அனைத்தும் பயன்படுத்தி சிறிய பரிமாண அளவில் வரையப்பட்ட அவ் அறிவித்தலின் பிரதியொன்று.

(5) இணைக்கப்பட்டுள்ள வீதிகளுக்கும் மற்றும் பிரதான நில அடையாளங்களுக்கும் அநுகூலமாக விளம்பர அறிவித்தல் அமைக்கப்படுகின்றதை காட்டும் படம்.

7. நகர சபையின் தலைவரினால் எழுத்து மூலமான அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கும் உருவக் குறிப்புகள் மற்றும் நியம குறியீடுகளுக்கும் அமைவாக இருந்தால் மட்டுமேயன்றி, எவராவது ஒருவரினால், பிரதேச சபையின் பிரதேசத்திலுள்ள ஏதாவது விளம்பர அறிவித்தல் அல்லது காட்சிப்படுத்தப்படும் பணிகளுக்காக பயன்படுத்தக்கூடிய ஏதாவது பெயர்ப்பலகைகள், விலைப்பட்டியல் பலகை, அறிவித்தல் பலகை அல்லது வேறு ஏதாவது வடிவமைப்புகளை நிர்மாணித்தல் அல்லது நிர்மாணிப்பதற்கு திட்டமிடல் என்பன செய்யப்படலாகாது.

8. 5 ஆவது துணைவிதியின் கீழ் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களும் நகர சபையின் தலைவரினால் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் இங்கு கீழே (2) ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முறைக்கு அமைய நிர்மாணிக்கப்பட்டுள்ள குறித்த கட்டணம் செலுத்தப்படும் வரை விண்ணப்பதாரிக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கப்படமாட்டாது.

9. விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக எவராவது ஒருவருக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அவரினால் காட்சிப்படுத்தப்படும் சகல விளம்பர அறிவித்தலிலும் உத்தரவுப் பத்திரத்தின் தொடர்பு எண் மற்றும் உத்தரவுப்பத்திரம் பெற்றவரின் பெயர் உள்ளடக்கப்பட்ட வேண்டுமென நகர சபையினால் அவருக்கு பணிக்கப்பட்டுள்ளது.

10. இத்துணைவிதியின் கீழே காட்டப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல் அவ் அறிவித்தல் மின்சார வெளிச்சம் கொண்ட விளம்பர அறிவித்தல் அல்லது விமானப் போக்குவரத்து விபரம் எவற்றிற்காவது பற்றிய விளம்பரப் பலகை அவ்வாறு இருப்பின் அவை ஏற்புடையதாகாது.

(1) கிடைக்கக்கூடிய தேறிய வருமான அளவு தரும அலுவல்களுக்காக பயன்படுத்தப்படும் ஏதாவது இசை விழாக்களுக்கான அறிவித்தல் .

(2) ஏதாவது விழாக்கள் நடாத்தப்படும் இடத்தில், அந்த விழாவுக்குரிய காட்சிப்படுத்தும் விளம்பர அறிவித்தல்.

(3) சமயம், அரசியல், பொதுக்கூட்டங்கள் தொடர்பாக செய்யும் விளம்பர அறிவித்தல்.

(4) ''வாடகைக்கு விடப்படும்'' எனும் விளம்பர அறிவித்தல்.

(5) ''விற்பனைக்குண்டு' எனும் விளம்பர அறிவித்தல்.

(6) தளபாட பெயர்ப்பலகை.

(7) தொழில் ரீதியான அலுவல்களுக்காக பயன்படுத்தப்படும் அளவு சதுர மீற்றர் 0.93க்கு மேல் அதிகரிக்காத பெயர்ப்பலகை.

(8) வர்த்தக அலுவல்கள் அல்லது வியாபாரங்களுக்காக பாவிக்கப்படும் வாகனங்களில் அத்தகைய வியாபார நடவடிக்கைகள் அல்லது வியாபாரத்தின் தன்மையை காட்டும் மற்றும் உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி, தொலைபேசி இலக்கம், மின் அஞ்சல் முகவரி ஆகியவற்றை எடுத்துக்காட்டும் விளம்பர அறிவித்தல்.

11. எவராவது ஒருவரினால் :

(1) ஏதாவது வீதியொன்றில், பாதையில் அல்லது ஒற்றையடிப்பாதையொன்றின் வாகன வழிகளுக்கு மேல் அல்லது குறுக்காக அல்லது தொங்கவிடப்பட்டிருக்கக்கூடிய முறையில் அமைந்துள்ள விளம்பர அறிவித்தல்களை காட்சிப்படுத்தல்.

(2) நிலமட்டத்திலிருந்து 15 மீற்றருக்கு மேல் அதிகரிக்காத உயரத்தில் உள்ள ஏதாவது விளம்பர பலகை மூலம் விளம்பர அறவித்தலை காட்சிப்படுத்தல் அல்லது.

(3) ஏதாவது வீதியொன்றின் அல்லது பாதைக்கு முகம் கொடுக்கப்படகூடிய வகையில் அமைந்துள்ள கட்டிடமொன்றின் முன் முகப்பில் அல்லது வியாபார நிலையத்தின் பெயர்ப்பலகை அல்லது அக்கட்டிடத்தின் முகத்தோற்றத்தின் எல்லையை அடையும் நீளத்தைக் கொண்ட வகையில் விளம்பர அறிவித்தலை பொறுத்துவது இல்லையேல் கீழ்நோக்கி தொங்கவிடுதல்.

(4) விமானப் போக்குவரத்து விபர பெயர் பலகைகளின் விபரங்கள் பற்றிய விளம்பர அறிவித்தல் பிரதேச சபையின் முன் அனுமதியைப் பெறப்படாத ஏதாவது முறைகளில் அமைத்தல், நிர்மாணித்தல் என்பன செய்யப்படலாகது.

12. எவராவது ஒருவரினால் தனிப்பட்ட அல்லது பொது கட்டிடமொன்றின், பொதுப் புனித பகுதியொன்றின், பொதுப் பூங்கா அல்லது பாலங்கள், தொலைபேசி அல்லது மின்சார மின்கம்பங்கள் , சுவர்கள், வாய்க்கால்கள், அணைக்கட்டுக்கள் சிறிய, குளங்கள் அல்லது மரங்கள் போன்வற்றில் விளம்பர அறிவித்தல்களை காட்சிப்படுத்துவது தவிர்க்கப்படல் வேண்டும்.

13. சபையின் தீர்மானம் உடன்பாட்டுடன் வரையறுக்கப்பட்டு காட்டப்படும் மற்றும் வர்த்தமானி பத்திரிகையில் உரிய முறைப்படி வெளியிடப்பட்டுள்ள ஏதாவது பிரதேசத்தின் ஏதாவது விளம்பர அறிவித்தல். அவ் அறிவித்தல் நகர சபையின் தலைவரினால் அனுமதிக்கப்பட்டுள்ள முறையில் ஸ்தாபிக்கப்பட்ட அல்லது நிர்மாணிக்கப்பட்டுள்ள விற்பனைச் சாலையின் பெயர்ப்பலகையின் மட்டுமேயன்றி வேறு எதையும் காட்சிப்படுத்தலாகாது.

14. எவராவது ஒருவரினால் நகர சபை பிரதேசத்தினுள் உள்ள வீதியொன்றில் அல்லது பாதையில் –

(1) ஏதாவது விளம்பர அறிவித்தல் ஒன்றை காட்சிப்படுத்துவதற்கு அல்லது அறிமுகப்படுத்தும் பணிக்காக வானொலி இயந்திரங்கள், கிராம்போன் சங்கீத உபகரணங்கள், மணி அல்லது ஏனைய உபகரணங்களை நகர சபையின் தலைவரினது உத்தரவு இன்றி பாவிப்பது சட்ட ரீதியற்றதாகும்.

15. (1) ஏதாவது விளம்பர அறிவித்தல் அவலட்சணமாக அல்லது ஒழுங்குபடுத்தப்படாத மற்றும் பொதுமக்களின் பாரம்பரியங்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் நகர சபையின் தலைவரினால் எழுத்து மூலமான அறிவித்தலின் ஊடாக அவ்வறிவித்தலை வரையறுக்கப்பட்டு காட்டப்படும் ஏதாவது காலப்பகுதிக்குள் அவ் விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதை நிறுத்தும்படி அவ் விளம்பர அறிவித்தலை செய்த நபருக்கு பணிக்க முடியும்.

(2) இத்துணைவிதியின் 1 ஆவது பந்தியின் கீழ் அறிவித்தல் ஒன்றை ஒப்படைக்கப்பட்ட எவராவது அல்லது நபரினால் அது வரையறுக்கப்பட்டு காட்டப்படும் காலத்திற்குள் அவ்வறிவித்தலுக்கு அமைய செயற்படல் வேண்டும்.

16. விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்தும் பொருட்டு பிரயோசனப்படுத்தப்படும் ஏதாவது விளம்பரப்பலகைகள் உரிமையாளர் அல்லது குத்தகைக்காரரினால் –

(1) அவ் விளம்பரப்பலகை உரிய புதுப்பித்தலுடன் மற்றும் அவரினது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் கொண்டு நடாத்தப்படல் வேண்டும்.

(2) அவ் விளம்பரப்பலகையின் முன்பகுதி தெளிவாக தெரியக்கூடிய இடமொன்றில் தெளிவாக வாசிக்கக்கூடிய வகையிலான எழுத்துக்களில் அவரது பெயர் மற்றும் முகவரி என்பன காட்சிப்படுத்த வேண்டும்.

17. ஏதாவது விளம்பர அறிவித்தல் ஒன்றை காட்சிப்படுத்துவதற்காக குறித்த உத்தரவுப்பத்திரத்தின் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதைக் காட்டுவதற்கு ஏதாவது விளம்பர அறிவித்தல் ஒன்று நகர சபையினால் உட்படுத்தப்பட்டுள்ள ஏதாவது இலச்சினை, அடையாளம், குறியீட்டு எழுத்துக்கள், வசனங்கள் அல்லது இலக்கங்கள் என்பன யாராவது ஒருவரினால் மாற்றியமைக்கப்படுவது அல்லது செய்யப்படலாகாது.

18. இத்துணைவிதியில் எவராவது அல்லது ஏற்பாடுகளை கட்டுமீறுதல் அல்லது அதற்கு முரணான வகையில் செயற்படுதல் குற்றமாவதுடன், குற்றம் தொடர்பாக உரிய அதிகாரம் கொண்டுள்ள நீதிமன்றத்தின் ஊடாக அந்த குற்றத்திற்கு குற்றவாளியாக ஆக்கப்படும் பட்சத்தில் குறித்தொதுக்கப்படக்கூடிய ஆகக்கூடிய தண்டனை மற்றும் அதனை கட்டுமீறுதல் அல்லது முரணான வகையில் தொடர்ந்து மேலும் செயற்படும் போது, அது தொடர்பாக குற்றவாளியாக காணப்பட்ட பின்னர் அல்லது அவ் அத்து மீறல்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு தவிசாளரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள வேறு அதிகாரியினால் எழுத்துமூலமான அறிவித்தல் அளிக்கப்பட்ட பின்னர் கட்டுமீறுதல் அல்லது முரணான வகையில் செயற்படுதல் போன்றவற்றை மேலும் தொடர்ந்து விடாமல் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நாளுக்காக குறித்தொதுக்கப்படக்கூடிய மேலதிக தண்டனையில் ஆகக்கூடிய முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் குறித்தொதுக்கப்பட்ட ஆகக்கூடிய தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டனையின் தண்டப்பணம் ஆகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

19. இத்துணைவிதியின் கீழ் உத்தரவுப்பத்திரமின்றி பிரதேச சபையின் பிரதேசத்தினுள் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல்கள் எத்தகைய முன் அறிவித்தலுமின்றி சபையினால் நீக்கப்படுவது சட்ட ரீதியானதாகும்.

20. அவ்வாறு நபரொருவர் அல்லது நிறுவனமொன்று தொடர்ந்தும் உத்தரவுப்பத்திரமொன்று பெறப்படாமல் விளம்பர அறிவித்தலை பிரசுரித்தல் என்பவற்றை காரணமாகக் கொண்டு அல்லது இத்துணைவிதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை கட்டு மீறுதலைக் காரணமாகக் கொண்டும் குற்றத்திற்கு குற்றவாளியாக காணப்படும் சந்தர்ப்பத்தில் அந்நபர் அல்லது அந்நிறுவனம் அந்த நகர சபையின் அதிகார பிரதேசத்திற்குள் விளம்பர பணிகளுக்காக பிழையான அட்டவணைப்படுத்தலைக் கொண்டுள்ளது என்பது தொடர்பாக பிரதேச சபை தீர்மானிப்பது சட்ட ரீதியானதாகும்.

21. விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்கு உத்தரவு பெற்ற பின்பு உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் இன்னும் எஞ்சியிருக்கும் போதும் ஏதாவது வகையில் பொறுத்தப்பட்டிருக்கும் சுவரில் அல்லது வீட்டு மதிலில் கட்டப்பட்டுள்ள கொடி, பதாகையொன்றின் விளம்பர அறிவித்தல் பலகையொன்று ஏதாவது வகையில் அல்லது காற்றுக்கு சரிந்து நிற்றல், கலன்று நிலத்தில் விழுதல் அல்லது பலவீனமடைந்து உடைந்து விழுதல் அல்லது மாற்றமடைந்து நகரத்தின் அழகிற்கு ஏதாவது ஒரு முறையில் அவ்விளம்பர அவிறித்தல் பாதகமாக காணப்பட்டால் அது தொடர்பாக உரிய உரிமையாளருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டு 07 நாட்களுக்குள் அவை முன்னர் காணப்பட்டவாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கோரப்படுவதுடன், அவ்வாறு நடவடிக்கை எடுக்காதிருக்கும் பட்சத்தில் சபையினால் அவ்விளம்பரப்பலகை அகற்றப்படுவதுடன் சபையினால் அவ் அறிவித்தல் அளிக்கப்பட்டு 14 தினங்கள் கடந்த பின்னர் சபையின் பணியாட்களைக் கொண்டு அவ் அறிவித்தல்களை அகற்றுவது நடைபெறுவதுடன், அவ் அறிவித்தல் தொடர்பாக எதுவித பொறுப்பும் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

22. வசனங்கள் சம்பந்தமாக பொருள்கோடல் தேவைப்பட்டால் மாத்திரமன்றி –

"சபை" என்பது, நகர சபை என கருதப்படும் ;

"தலைவர்" என்பது, நகர சபையின் தலைவராகும்.

**1 ஆவது அட்டவணை**

விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தப்படுவதற்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரியின்முழுப்பெயர் :.......................................................................................................... .....
2. நிரந்தர முகவரி :..........................................................................................................................
3. அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்கு கருதப்படும் வர்த்தக வியாபாரம், விழா, கண்காட்சி, களியாட்டம், கூட்டம் அல்லது வியாபாரப் பொருட்கள் தொடர்பான விபரம் :.......................................................................................................... ..........................................................................................................................
4. அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் நிலையம்/இடம் :.......................................................... ..........................................................................................................................
5. உரிய படிவம் இணைக்கப்பட்டுள்ளதா?..........................................................................................
6. காட்சிப்படுத்துவதற்கு கருதப்படும் அறிவித்தலின் வகை (கொடி, விளம்பரப்பலகை, பதாதைகள், சுவர், மதில் அல்லது தன்மை) :.......................................................................................................... ..........................................................................................................................
7. ஏதாவது ஒரு வகையில் தனது விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்கு உத்தரவு பெற்றபின்பு அவ்வறிவித்தல் பழுதடைதல், ஒட்டிக்கொள்ளுதல், கழருதல், நிலத்தில் உடைந்து விழுதல், போன்ற ஏற்பட்டால் அதனை உரிய முறையில் மீள அமைத்தலுக்கு இணங்குவீரா? என்பது பற்றியது.
   நகர சபையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கி, அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்கு இணங்குவதுடன், அது தொடர்பாக துணைவிதியில் அல்லது அதன் ஏதாவது பிரிவை மீறி செயற்படுதல் தண்டனைக்குரிய குற்றம் என்பதை நான் நன்றாக உணர்வேன்.

திகதி :............................

...................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

கீழே உள்ள கடித ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது.

(i) விளம்பர அறிவித்தல் நிலையானது ஒன்று எனின், அதனைப் பொறுத்தும் இடத்தின் உரிமையாளரிடமிருந்து பெறப்பட்டுள்ள இணக்கக் கடிதம் ;

(ii) அவ் அறிவித்தல் வீடொன்றில், கடையொன்றில், சுவரில், மதிலில் அல்லது அவ்வாறான இடங்களில் வரையப்படுவதென்றால் அம்மதில், சுவர், கடை, ஹோட்டல் போன்றவற்றின் உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட இணக்கக்கடிதமொன்று ;

(iii) விளம்பர அறிவித்தல்களை வரைதல் அல்லது நிலையாக பொறுத்துவதற்கான நிலம் (சந்தர்ப்பம்) பயன்படுத்தப்படும் முறை தொடர்பான விபரம் ;

(iv) விளம்பர அறிவித்தலுக்குரிய படிவம் தெளிவாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்ட பின்னர் படிவத்தை எவ்வகையாளும் மாற்றி அமைப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது).

**2 ஆவது அட்டவணை**

| தொடர் இல. | விளம்பரப்பலகையின் தன்மை | சதுர அடி அளவு | கட்டணம் ரூபா | | |
|---|---|---|---|---|---|
| | | | 03 மாதத்திற்கு குறைவாக | 03 மாதங்கள் அல்லது 6 மாதத்திற்கும் இடையில் | ஒரு ஆண்டு |
| (1) | ஏதாவது சுவர், அல்லது மதிலில் விளம்பரப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல் | 2க்கும் 10க்கும் இடையில் | 25 | 25 | 30 |
| | | 10க்கும் கூடுதலாக | 25 | 30 | 40 |
| (2) | துணி, டிஜிட்டல், கொடிகளுக்காக | 02க்கும் 10க்கும் இடையில் | 30 | 35 | 40 |
| | | 10க்கும் கூடுதலாக | 35 | 40 | 45 |
| (3) | தகடு அல்லது மரம் ஊடாக விளம்பரப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல் | 02க்கும் 10க்கும் இடையில் | 35 | 40 | 45 |
| | | 10க்கும் கூடுதலாக | 40 | 45 | 50 |

**2 ஆவது அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொடர் இல. | விளம்பரப்பலகையின் தன்மை | சதுர அடி அளவு | கட்டணம் ரூபா | | |
|---|---|---|---|---|---|
| | | | 03 மாதத்திற்கு குறைவாக | 03 மாதங்கள் அல்லது 6 மாதத்திற்கும் இடையில் | ஒரு ஆண்டு |
| (4) | மின்சாரத்தை பயன்படுத்தி செயற்படுத்தப்படும் விளம்பர அறிவித்தலுக்கான | 02க்கும் 10க்கும் இடையில் | 45 | 45 | 50 |
| | | 10க்கும் கூடுதலாக | 50 | 55 | 70 |
| (5) | மெழுகு சீலை, அல்லது காட்போட், கடதாசி மூலம் செய்யப்படும் விளம்பர அறிவித்தல் | 02க்கும் 10க்கும் இடையில் | 20 | 25 | 30 |
| | | 10க்கும் கூடுதலாக | 30 | 35 | 40 |
| (6) | பிளாஸ்டிக் விளம்பரப்பலகை பைபர் பலகை ஊடாக செய்யப்படும் விளம்பர அறிவித்தல் | 02க்கும் 10க்கும் இடையில் | 50 | 55 | 60 |
| | | 10க்கும் கூடுதலாக | 55 | 60 | 65 |
| (7) | இலத்திரனியல் உபகரணங்களைக் கொண்டு செய்யப்படும் விளம்பர அறிவித்தல் | 02க்கும் 10க்கும் இடையில் | 40 | 45 | 60 |
| | | 10க்கும் கூடுதலாக | 50 | 55 | 70 |

**முச்சக்கர வண்டி தரிப்பிடங்கள் தொடர்பான துணைவிதி**

1. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்தினுள் (இங்கு இதனகத்து சபை ''அதிகார பிரதேசம்'' என எடுத்துக்காட்டப்படுவது) முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைத்திருத்தல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் தரிப்பிடத்திற்கான கட்டணங்களை அறவிடுதல் என்பவற்றை நிறைவேற்றப்படுவதாகும்.

2. இத்துணைவிதி நகர சபையின் அதிகார பிரதேசத்தினுள் முச்சக்கர வண்டி தரிப்பிடங்கள் தொடர்பான துணைவிதியொன்று எடுதுக்காட்டப்படலாம்.

3. (1) சபையின் அதிகார பிரதேசத்தினுள் முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைத்திருக்கும் தரிப்பிடம் அங்கு ஒவ்வொரு இடங்களிலும் நிறுத்தி வைத்திருக்கக்கூடிய ஆகக்கூடிய முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை சபையின் ஆலோசனை உடன்பாட்டின் மூலம் தீர்மானிப்பதுடன், அத்தீர்மானம் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அல்லது அங்கு குறிப்பிடப்படும் குறித்த திகதி அல்லது அதிலிருந்து அமுலுக்கு வரும்.

(2) மேலுள்ள 3. (1) துணைவிதிக்கு அமைய தீர்மானிக்கப்பட்டுள்ள முச்சக்கரவண்டிகள் நிறுத்தி வைக்கப்படும் இடம் மற்றும் எண்ணிக்கை என்பவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டுமாயின், சபையின் உடன்பாட்டுடன் அவ்வாறு செய்ய முடிவதுடன், அது பற்றி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அல்லது அங்கு குறிப்பிடப்படும் குறித்த திகதி அல்லது அதிலிருந்து அமுலுக்கு வரும்.

(3) துவிச்சக்கர வண்டிகள் தரிப்பிடங்களைத் தீர்மானித்தல் அதன் இடைவெளிக்களைத் தீர்மானித்தல் மற்றும் அங்கு நிறுத்தக்கூடிய ஆகக்கூடிய முச்சக்கரவண்டிகளின் எண்ணிக்கையை தீர்மானிப்பதற்காக அல்லது அத்தீர்மானங்களில் மேலும் திருத்தங்களை செய்வதற்காக முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களைக் கொண்டே முச்சக்கரவண்டி போக்குவரத்துக் குழுவின் விதந்துரைத்தலை சபையினால் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) 3 (1) துணைவிதிக்கமைய முச்சக்கரவண்டிகள் நிறுத்தி வைத்திருக்கும் இடங்களை இனம் காணும் பொருட்டு பெயர்ப் பலகைகள் அனைத்து தரிப்பிடங்களின் முற்பகுதியில் பொறுத்தப்பட்டிருப்பதுடன், அப்பெயர்ப்பலகையில் உரிய தரிப்பிடங்களின் குறியீட்டு இலக்கங்கள் காட்சிப்படுத்தப்படுவதுடன், மேலும் 3 (2) துணைவிதிக்கு அமைய தரிப்பிடங்களில் நிறுத்தி வைத்திருக்கக்கூடிய ஆகக்கூடிய முச்சக்கரவண்டிகளின் எண்ணிக்கை உரிய பெயர்ப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) தரிப்பிடங்களில் முச்சக்கரவண்டிகள் ஒழுங்கு முறையில் நிறுத்தி வைக்கப்படவேண்டிய விதம் பற்றி சபையின் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரி ஒருவரால் 4 அங்குல அகலம் கொண்டுள்ள வெள்ளை அல்லது மஞ்சள் நிறக்கோடொன்றின் மூலம் அடையாளம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

4. நகர சபையினால் முச்சக்கரவண்டிகள் நிறுத்தப்படுவதற்காக இந்த துணைவிதிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை தலைவரினால் வழங்குதல் மற்றும் அதற்கான கட்டணத்தை சபை உடன்பாட்டுடன் மூலம் தீர்மானிக்கப்பட்டு அறவிடுதல் சட்ட ரீதியானதாகும்.

5. முச்சக்கர வண்டி தரிப்பிடமொன்றில் நிறுத்தி வைக்கப்படும் முச்சக்கர வண்டிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் போது தரிப்பிடங்களுக்கு மிக அண்மையில் வசிப்பவர்களுக்கு உரிய முச்சக்கர வண்டிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

6. (1) இத்துணை விதியின் அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் ஊடாக தமது நிரந்தர வசிப்பிடத்திற்கு அண்மையில் முச்சக்கர வண்டிகளின் தரிப்பிடத்தில் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பதற்காக நகர சபையிடமிருந்து அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிப்பதுடன், அதற்கான அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணம் சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிப்பது சட்டரீதியானதாகும்.

(2) முச்சக்கர வண்டியை செலுத்துபவர் உரிமையாளராயின், அவருடையதும், செலுத்துனர் கூலி சாரதியாயின் அவருடையதும் மற்றும் உரிமையாளரினதும் கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணையின் போட்டோ பிரதிகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த விண்ணப்பம் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அமைந்திருக்க வேண்டும்.

(i) முச்சக்கர வண்டி உரிமையாளரினது தேசிய ஆள் அடையாள அட்டை மற்றும் செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் ;

(ii) முச்சக்கர வண்டிகளின் பதிவுச் சான்றிதழ் ;

(iii) கூலிச் சாரதியின் தேசிய ஆள் அடையாள அட்டை மற்றும் செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

(3) சபையின் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட முச்சக்கரவண்டி தொடர்பாக பதிவு அட்டவணையொன்று பேணப்பட்டு வருவதுடன், அனுமதிப்பத்திரம், இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அது பற்றி குறிப்பிடப்படுவதுடன், சிவப்பு மையினால் அடையாளமிடப்படல் வேண்டும்.

(4) சபையினால் மாதாந்தம் அல்லது காலாண்டு அல்லது வருடாந்தம் அல்லது முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைப்பதற்காக அனுமதிப்பத்திரமொன்று வழங்க முடியும்.

(5) செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தின் போட்டோ பிரதியொன்று தெளிவாக வெளியில் தெரியக்கூடியவாறு முச்சக்கரவண்டியின் இடது பக்க முன் கண்ணாடியில் காட்சிப்படுத்தல் வேண்டும்.

(6) முச்சக்கர வண்டியின் வலது பக்கத்தினால் பிரயாணிகள் ஏறவோ அல்லது இறங்கவோ முடியாதவாறு மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(7) அனுமதிப்பத்திரம் முச்சக்கர வண்டியின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரின் பெயருக்கே வழங்கப்படல் வேண்டும்.

(8) அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் கால எல்லை முடிவடைவதற்கு இரண்டு கிழமைக்கு முன்பு அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட வேண்டியது முச்சக்கர வண்டியின் உரிமையாளரின் பொறுப்பாகும்.

(9) மேலுள்ள 6, (4) உபபந்தியில் மாதாந்தம் அல்லது காலாண்டு அல்லது வருடாந்தம் அல்லது கடந்து அறவிடவேண்டிய அனுமதிப்பத்திரத்தின் கட்டணம் சபையினால் தீர்மானிக்கப்படுவதுடன், அத்தீர்மானம் வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அல்லது அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிச்சயிக்கப்பட்ட திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அறவிடப்படல் வேண்டும்.

(10) 4 ஆவது துணைவிதிக்கு அமைவாக சபையினால் வழங்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் ஒன்று பெறப்படாவிட்டால் முச்சக்கரவண்டிகள் நிறுத்தி வைக்கப்படும் தரிப்பிடத்தில் உட்செல்லுவற்கும், அல்லது நிறுத்தி வைத்திருப்பதற்கும் செயற்படலாகாது.

(11) வழங்கப்பட்டுள்ள உத்தரவுப்பத்திரம் ஒன்று இருந்தால் மட்டுமே பொலிஸ் உத்தியோகத்தரினால் அல்லது தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரினால் தற்காலிகமாக முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் முச்சக்கர வண்டியை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்ய முடியும் என்பதுடன் இவ் அனுமதிப்பத்திரம் அதற்கு இடைஞ்சலை ஏற்படுத்தமாட்டாது.

7. தரிப்பிடமொன்றில் வேறு வண்டிகளை உட்படுத்துவது அல்லது நிறுத்துவது மேற்கொள்ளப்படலாகாது.

8. தரிப்பிடத்திற்கு உட்செல்லும் வாகனம் அல்லது வெளிச்செல்லும் வாகனத்திற்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் முச்சக்கர வண்டி அல்லது ஏனைய வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படலாகாது.

9. தரிப்பிடமொன்றில் முச்சக்கர வண்டியை அகற்றப்படும் பணிகளுக்குரிய ஏதாவது புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே தரிப்பிடத்தின் உள்ளே வேறு ஏதாவது காரணத்தினால் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படலாகாது.

10. ஏதாவது முச்சக்கர வண்டியொன்றை நிறுத்தி வைப்பதற்காக அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தால் மாத்திரமே தரிப்பிடமொன்றில் அவ் அனுமதிப்பத்திரத்திற்குரிய தரிப்பிடம் ஒன்றைத் தவிர வேறு ஏதாவது அல்லது நிலையத்தில் கூலிப் பிரயாணம் செய்யும் எதிர்பார்ப்பில் முச்சக்கர வண்டி நிறுத்துவது தவிர்க்கப்படல் வேண்டும்.

11. (1) முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைத்தல் சம்பந்தமாக வரும் இத்துணைவிதி வாரத்தில் எல்லா நாட்களிலும் 6.00 மணி தொடக்கம் 20.00 மணி வரை அமுலில் இருக்கும்.

(2) மேலுள்ள 11 (1) ஆம் துணைவிதியில் காட்டப்பட்டுள்ள நேரங்கள் சபையின் தேவையின் அடிப்படையில் சபை ஆலோசனை உடன்பாட்டின் படி திருத்தங்கள் மேற்கொள்ள முடியும் என்பதுடன் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்ட பின்னர் அது அமுலுக்கு வரும்.

12. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள முச்சக்கரவண்டி உரிமையாளர், தரிப்பிடத்தில் நிறுத்தி வைத்திருக்கும் சந்தர்ப்பத்தில், சேவையில் ஈடுபட்டுள்ள சாரதிகள், வெளி நபர்களை முச்சக்கர வண்டிகளின் தரிப்பிடங்களுக்கு அழைத்து வந்து தேவையின்றி சுற்றித் திரிய இடமளிக்கலாகாது.

13. தரிப்பிடமொன்றில் எவராவது அல்லது ஒருவரினால் போதைப்பொருள் பாவித்தல் அல்லது தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது வேறு ஏதாவது தீங்கு விளைவிக்கும் செயல்கள் போன்றவற்றில் ஈடுபடாமல் இருப்பதுடன், அத்தகைய செயற்பாட்டிற்காக இடமளிக்காமை என்பன தரிப்பிடத்தை பயன்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள ஒவ்வொரு நபரினதும் பொறுப்பாகும்.

14. அனுமதிப்பத்திரம் பெற்ற உரிமையாளர் எவராவது அல்லது ஒருவரினால் தரிப்பிடமொன்றில் தவறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார் என பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் வரும் சந்தர்ப்பத்தில் அது பற்றிய விசாரணையொன்று நடாத்தப்படும் அவை உறுதி செய்யப்பட்டால் அவரது அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்வதற்கான அதிகாரம் சபைக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

15. தலைவர் அல்லது அவரினால் பணிகளுக்காக அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது வேண்டுகோள் விடுக்கப்படும் எச்சந்தர்ப்பத்திலும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தின் மூலப்பிரதியை முச்சக்கர வண்டி சாரதி அல்லது உரிமையாளரினால் சமர்ப்பித்தல் வேண்டும்.

16. (1) இத்துணை விதியை எவராவது அல்லது ஏற்பாடுகளைக் கட்டு மீறுதல், அல்லது முரணாக மீறுதல் என்பன குற்றமாவதுடன் அந்த குற்றம் சம்பந்தமாக குறித்த அதிகாரம் கொண்டுள்ள நீதிமன்றத்தின் ஊடாக அக்குற்றத்திற்கு குற்றவாளியாக காணப்படும் போது பணிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டனை மற்றும் அதனை கட்டுமீறுதல் அல்லது முரணாக தொடர்ந்து மேலும் செயற்படும் போது அது தொடர்பாக குற்றவாளியாக கொள்ளப்படவில்லை அல்லது அத்தகைய முரணான செயல்பாட்டில் கவனம் செலுத்தப்பட்டு தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்றுள்ள வேறு உத்தியோகத்தரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒப்படைக்கப்பட்ட பின்னர் கட்டு மீறுதல் அல்லது முரணாக மேலும் தொடர்ந்து செய்து வரும் அனைத்து ஒவ்வொரு நாளுக்குமாக பணிக்கப்பட்டுள்ள மேலதிக தண்டனைகள் ஆகக்கூடியது முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவில் பணிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டனை ஆகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(2) 16. (1) துணைவிதிக்கமைய குறித்த நீதிமன்றத்தினால் குற்றவாளியாக குற்றம் சாட்டப்படும் சந்தர்ப்பத்தில் நிறைவேற்றப்படும் தண்டனைக்கு மேலதிகமாக சபையினால் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்ய முடியுமாகும்.

17. வசனங்கள் சம்பந்தமாக பொருள் கோடல் தேவைப்பட்டால் மாத்திரமேயன்றி இத்துணைவிதியில் –

"சபை" என்பது, நகர சபை என்றும் ;

"தலைவர்" என்பது, நகர சபையின் தலைவராகும் ;

"தலைவரினால் தனது பணிகளுக்காக அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டு அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தர்" என்பது, தலைவரினால் அதிகாரம் பணிக்கப்பட்டுள்ள நகர சபையின் எவராவது உத்தியோகத்தர் என்றும் ;

"அதிகாரப் பிரதேசம்" என்பது, நகர சபையை கூட்டிணைக்கும் அதிகாரம் பிரதேசம் என்றும் ;

"முச்சக்கரவண்டி" என்பது, வாடகைப் பிரயாணமொன்றை எதிர்பார்த்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முச்சக்கர வண்டியென்றும் "

"வாடகைச் சாரதி" என்பது முச்சக்கரவண்டியை செலுத்தும் உரிமையாளர் அல்லது அந்த வண்டியை செலுத்துவதற்காக உரிமையாளரினால் ஈடுபடுத்தப்பட்டவர் என்றும் ;

"தரிப்பிடம்" என்பது, நகர சபையினால் எடுக்கப்பட்ட ஆலோசனையின் உடன்பாட்டின் ஊடாக நிச்சயிக்கப்பட்டுள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம் என்றும்

"குறிப்பிட்ட தரிப்பிடம்" என்பது, நகர சபையின் தலைவரினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள எந்த ஒரு குறிப்பிட்ட தரிப்பிடம் என்றும் ;

"மாதாந்தம்" என்பது, ஒவ்வொரு மாத ஆரம்பித்திலும் முதலாம் திகதியிலிருந்து அந்தந்த மாத்திற்குரிய 28 நாட்கள் அல்லது 30 நாட்கள் அல்லது 31 நாட்களைக் கொண்டுள்ள மாதத்தையும் என்றும் ;

"காலாண்டு" என்பது, மாதாந்தம் என்ற பொருள் கோடல் மூலம் கொடுக்கப்பட்டுள்ள நாட்கணக்கிலுள்ள சனவரி 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு அண்மித்த 03 மாதங்கள் வீதம் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையும் என்றும் ;

"வருடாந்தம்" என்பது, வருடத்தின் சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் கலண்டர் வருடமொன்றையும் ;

"பொலிஸ் அதிகாரி" என்பது, 53 என்ற அதிகாரபீடத்தின் 1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 104 ஆவது பிரிவின் ஊடாக வழங்கப்பட்டுள்ள பொருள் கோடலாகும் என்றும் ;

"வேறு வாகனங்கள்" என்பது, மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் ஊடாக அதற்கு வழங்கப்பட்டுள்ள பொருள் கோடலாகும் என்றும் ;

"பதிவு செய்யப்பட்டுள்ள உரிமையாளர்" என்பது, மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள பொருள் கோடலாகும் என்றும் ;

"துன்புறுத்தும் செயற்பாடுகள்" என்பது தீங்கு விளைவிக்கும் செயற்பாடு கட்டளைச் சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள பொருள் கோடலாகும் என்றும் ;
பொருள்படும்.

**முதலாவது உப அட்டவணை**

நியமிக்கப்படும் போக்குவரத்து வாகனக் குழு பின்வரும் அங்கத்தவர்களைக் கொண்டதாக அமைய வேண்டும்.

1. குழுவின் தலைவர் நகர சபையின் தலைவராக இருப்பதோடு, செயலாளர் சபையின் வருமானப் பரிசோதகராய் இருத்தல் வேண்டும் .

2. நகர சபையின் செயலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ;

3. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர் ;

4. மாகாணத்திற்கான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர்.

5. வீதிப் பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர் ;

6. இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர்.

7. சபை அதிகாரப் பிரதேசத்திற்கு பொலிஸ் நிலையத்தின் மோட்டார் வாகன போக்குவரத்து பொலிஸ் அதிகாரி அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர்.

8. சபையின் அதிகார பிரதேசத்தினுள் உள்ள முச்சக்கர வண்டி சங்கங்களின் ஒரு பிரதிநிதி வீதம் அமைந்திருத்தல் வேண்டும்.

## இரண்டாவது அட்டவணை

முச்சக்கர வண்டி தரிப்பிட அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்வது தொடர்பான விண்ணப்பப்படிவம்.

1. விண்ணப்பம் :

(i) விண்ணப்பதாரியின் பெயர் :........................................................................................................................

(ii) விண்ணப்பத்தாரியின் நிரந்தர முகவரி :..........................................................................................................

(iii) வரி மதிப்பீட்டு இலக்கம் :...........................................................................................................................

(iv) நிரந்தர வசிப்பிடத்துக்குரிய உள்ளூராட்சி மன்றம் :................................ ............................ ................. .........

(v) தேசிய அடையாள அட்டை இலக்கம் :........................................ .................................................................

2. (i) முச்சக்கர வண்டியின் பதிவு இலக்கம் :.........................................................................................................

(ii) ஓட்டுநர் உரிமையாளராக இல்லாவிட்டால் கூலிச் சாரதியா என்பது :.....................................................................

1. உரிமையாளராயின் செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :....................................................

2. கூலிச் சாரதியாயின் பெயர் :.........................................................................................................................

நிரந்தர வதிவிட முகவரி :.........................................................................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் :..........................................................................................................

செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :...................................................................................

3. அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பம் செய்யும் முச்சக்கரவண்டி தரிப்பிடம் :.........................................................

4. அனுமதிப்பத்திரம் கோரும் காலம் : மாதத்துக்கு/மூன்று மாதத்துக்கு/வருடத்துக்கு; இங்கு என்னால் மேற்கூறப்பட்டுள்ள தகவல்கள் பிழையற்றவை எனவும் எக்காரணம் கொண்டும் அந்த தகவல்கள் பொய்யானது என்று கண்டுபிடிக்கப்பட்டால் என்னுடைய முச்சக்கர வண்டி தரிப்பிடம் அனுமதிப்பத்திரம் முன்னறிவித்தல் இன்றி இரத்துச் செய்யப்படுவதற்கு உட்படுவதோடு பிரதேச சபை மூலம் விதிக்கப்பட்டுள்ள முச்சக்கரவண்டி நிறுத்தல் தொடர்பாக துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கடைப்பிடிக்க உடன்படுகின்றேன்.

..................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-

திரு./திருமதி .................................................. அவர்களுக்கு ................................................ இலக்கத்தைக் கொண்ட முச்சக்கர வண்டியை ................................................. தரிப்பிடத்தில் நிறுத்துவது தொடர்பாக அனுமதிப்பத்திரம் .............................. காலத்திற்கு வழங்க அனுமதிக்கிறேன்.

..................................
தலைவர்
நகர சபை.

திகதி :-

**சேவைகளுக்கான கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணைவிதி**

1. இத்துணைவிதி நகர சபையினால் வழங்கப்படும் சேவைகளை ஒழுங்குபடுத்தல், அச்சேவைகளுக்கான கட்டணம் அறவிடுதல் என்பவற்றை நிறைவேற்றப்படுவதாகுக.

2. இத்துணைவிதி நகர சபையின் சேவைகளுக்கான கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணைவிதியென்று எடுத்துக்காட்டப்படலாம்.

3. இத்துணை விதிக்கு உரிய சேவையென்பது கீழே குறிப்பிடப்பட்டவைகள் அதில் அடங்கும்.

(1) விண்ணப்பப்படிவங்களை வழங்குதல் அதற்கு கீழே குறிப்பிடப்பட்டவைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(i) வீதிக் கோட்டுச் சான்றிதழ் ;

(ii) கையேற்றுக் கொள்ளப்படாமைக்குரிய சான்றிதழ் ;

(iii) வரிப்பணம் அட்டவணையுடன் இணைவான உரிந்து தொடர்பான சான்றிதழ் ;

(iv) வரிப்பணம் அட்டவணையின் பிரித்து எடுக்கப்பட்ட உறுதிப்படுத்துதல் சான்றிதழ் ;

(v) வழங்கப்பட்டுள்ள மதிப்பீட்டு அறிவித்தலை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

(2) சான்றிதழ்களை வழங்குதல் அதற்கு கீழே குறிப்பிடப்பட்டவைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(i) சபையினால் கொண்டு நடாத்தப்படும் முன்பள்ளி பாடசாலைகளுக்கான அனுமதி விண்ணப்பப்படிவம்;

(ii) சபையினால் கொண்டு நடாத்தப்படும் வாசிகசாலை அங்கத்தவர்களுக்கான விண்ணப்பப்படிவம் ;

(iii) வரிப்பணம் அட்டவணையின் பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளின் பத்திரங்களை பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் ;

(iv) விநியோகிப்பவர்களை பதிவு செய்யும் விண்ணப்பப்படிவம் ;

(v) வீதிக்கோட்டுச் சான்றிதழைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் ;

(vi) கையேற்றுக் கொள்ளப்படாமைக்குரிய சான்றிதழை பெறுவதற்கான விண்ணப்பப்படிவம்.

4. இத்துணை விதியில் மேலுள்ள 3 ஆவது பிரிவின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சேவை சம்பந்தமாக அறவிடப்படும் கட்டணம் காலத்திற்குக் காலம் சபையின் உடன்பாட்டுடன் தீர்மானிக்கப்படும்.

5. (1) மேலுள்ள 3 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்படும் அனைத்து விண்ணப்பப்படிவத்தின் கீழ் அல்லது அத்துடன் விண்ணப்பப்படிவத்தை சரியான முறையில் பூர்த்தி செய்வதற்காக ஆலோசனை அறிவுறுத்தல்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) அவ்வாறு வழங்கப்படும் சகல விண்ணப்பப்படிவங்களுக்காகவும் இத்துணைவிதியின் 4 ஆவது பிரிவின் கீழ் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள படி வரும் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் மட்டுமேயன்றி, அவ்வாறு இல்லாவிட்டால் எத்தகைய விண்ணப்பப்படிவங்களும் வழங்கப்படமாட்டாது.

6. (1) இத்துணைவிதியின் 3 ஆவது பிரிவினில் (2) ஆவது உட்பிரிவின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள சகல தரப்பினரும் அதற்குரிய விண்ணப்பத்தின் கீழ் தீர்க்கமானதாக குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்து தலைவர் அல்லது தலைவரினால் தீர்க்கமானதாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரி ஒருவரிடம் உரிய விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத அல்லது விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள தேவையை பூர்த்தி செய்யாது காணப்படும் சகல விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், ஏற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் மேலுள்ள 3 ஆவது பிரிவினில் (2) ஆவது உட்பிரிவுக்கு உரிய சேவைகளுக்குப் பதிலாக வரும் போது, ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியின் மூன்று நாட்களுக்குள் உரிய சேவையை நிலை நாட்டுவது தலைவரினால் அல்லது தலைவரினால் அதற்காக தீர்க்கமான அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரியின் பணியாகவுள்ளது.

7. பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பமொன்று தலைவரினால் அல்லது அதற்காக தீர்க்கமானதாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரியினால் பொறுப்பேற்றதென்றால், அதற்காக இத்துணைவிதியின் 4 ஆவது பிரிவின் கீழ் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள கட்டணத்தை அறவிடுவதுடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் சகல விண்ணப்பங்களையும் அட்டவணைப்படுத்தல் வேண்டும்.

8. இத்துணைவிதியை எவராவது அல்லது ஏற்பாடுகளை கட்டுமீறுதல் அல்லது முரணாக மீறுதல் என்பன குற்றமாவதுடன் அக்குற்றம் சம்பந்தமாக குறித்த அதிகாரம் கொண்டுள்ள நீதிமன்றத்தின் ஊடாக அக்குற்றத்திற்கு குற்றவாளியாக காணப்படும் போது பணிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டனை மற்றும் அதனைக் கட்டுமீறுதல் அல்லது முரணாக தொடர்ந்து மேலும் செயற்படும் போது அது தொடர்பாக குற்றவாளியாக கொள்ளப்படவில்லை அல்லது அத்தகைய முரணான செயல்பாட்டில் கவனம் செலுத்தப்பட்டு தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்றுள்ள வேறு உத்தியோகத்தரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒப்படைக்கப்பட்ட பின்னர், கட்டுமீறுதல் அல்லது முரணாக மேலும் தொடர்ந்து செய்து வரும் அனைத்து ஒவ்வொரு நாளுக்குமாக பணிக்கப்பட்டுள்ள மேலதிக தண்டனையின் ஆகக்கூடியது முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க நகர சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவில் பணிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டனை ஆகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

9. வசனங்கள் சம்பந்தமாக பொருள்கோடல் தேவைப்பட்டால் மாத்திரமன்றி இத்துணைவிதியில் -

"சபை" என்பது, நகர சபை என்று பொருளாகும் ;

"தலைவர்" என்பது நகர சபையின் தலைவராகும் ;

"செயலாளர்" என்பது நகர சபையின் செயலாளர் பதவியை வகிக்கும் நியமனம் பெற்ற ஒருவர் என்று பொருளாகும் ;

"அதிகாரம் பெற்றுள்ள அதிகாரி" என்பது, இத்துணை விதியின் பணிகளுக்காக சபையின் தீர்க்கமான கடமைகளுக்காக பணிக்கப்பட்டுள்ள கடமைகளை நிலை நிறுத்தும் ஒருவராக உட்படுத்தப்படலாம்.

**விளையாட்டு மைதானம் தொடர்பான துணைவிதி**

1. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானங்களை ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், மேற்பார்வை செய்தல் என்பவற்றிற்காக நிறைவேற்றப்படுவதாகும்.

2. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானங்கள் தொடர்பான துணைவிதியாக எடுத்துக்காட்டப்படலாம்.

3. (1) நகர சபைக்குரிய ஏதாவது விளையாட்டு மைதானமொன்றை கையாளுதலுக்காக உத்தரவுப் பத்திரமொன்றை பெறுவதற்கு கருதும் எவராவது ஒருவருக்கு அத்துணைவிதியின் முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கு அமைவானதாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விண்ணப்பத்தை தயாரித்து அதற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(2) விண்ணப்பத்திற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணத்தை சபை, சபை உடன்பாட்டின் ஊடாக காலத்திற்குக் காலம் செய்யப்படும் தீர்மானத்திற்கு அமைய கட்டணம் அறவிடப்படும்.

4. 3 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் எவராவது ஒருவரிடம் நகர சபைக்கு உரித்தான ஏதாவது விளையாட்டு மைதானத்தை கையாளுவதற்கு உத்தரவுப்பத்திரமொன்றை வழங்கும் போது இங்கு கீழே காட்டப்பட்டு நிபந்தனைகளை பூர்த்தி செய்யப்பட்டால் மாத்திரமேயன்றி, இல்லையேல் சபைத் தலைவரினால் உத்தரவுப் பத்திரமொன்று வழங்கப்படமாட்டாது.

(1) விளையாட்டு மைதானமொன்றை உபயோகிப்பதற்காக உத்தரவுப் பத்திரமொன்றை வேண்டி விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பப்படிவங்களும் நகர சபையின் அலுவலகத்திற்கு கிடைத்த தொடர் எண்களுக்கு அமைய ஆராயப்படும். அப்படி இருந்தும் விளையாட்டு மைதானத்தை கையாள்வதற்காக கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பம் பற்றி தங்களுக்கிடையில் ஏதாவது விளையாட்டுக்காக அல்லது விளையாட்டுடன் சம்பந்தப்பட்டுள்ள ஏதாவது தொடர்பானதாக வரும் விண்ணப்பப்பத்திரத்திற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

(2) நகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானம் எடுக்கப்பட்டு வெளியிடப்படும் முறைக்கு அமைய விளையாட்டு மைதானம் ஒதுக்கப்படுவதற்கான கட்டணம் மற்றும் வைப்புத் தொகை கொடுப்பனவுகள் செய்யப்படுவதுடன், அத்துடன் மட்டுமே உத்தரவுப்பத்திரம் வழங்கப்படுதல் வேண்டும்.

5. கையாளுவதற்காக விளையாட்டு மைதானமொன்றை ஒதுக்கப்படுவதற்கு விண்ணப்பமொன்றை சமர்ப்பித்தல் அவ்வாறு ஒதுக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதிக்கு குறைந்த அளவு மூன்று நாட்களுக்கு முன்பு செய்யப்படல் வேண்டும். எவராவது அல்லது ஒருவரினால் செய்யப்படும் வேண்டுகோள், விளையாட்டு மைதானத்தை ஒதுக்கப்படுவதற்கு தேவையான திகதிக்கு மூன்று நாட்களுக்கு முன்பு அலுவலக நேரத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. இத்துணைவிதியின் ஏற்பாடுகளின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ஏதாவது விளையாட்டு மைதானமொன்று, அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ளதை இரத்துச் செய்வதற்கு எவராவது விண்ணப்பதாரிக்கு தேவைப்பட்டால் அச்சந்தர்ப்பத்தில் கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய இடமளிப்பதற்கு தலைவரினால் மேற்கொள்ள முடியும்.

(1) ஒதுக்கப்பட்டுள்ளதை இரத்துச் செய்வதற்காக வேண்டுகோள் விடுப்பது, விளையாட்டு மைதானம் ஒதுக்கப்பட்டுள்ள திகதிக்கு –:

(i) மூன்று மாதங்களுக்கு முன்பாயின் கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டணத்தில் நூற்றுக்கு ஐந்து வீதம் ;

(ii) இரண்டு மாதங்களுக்கு முன்பாயின் கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டணத்தில் நூற்றுக்கு பத்து வீதம் ;

(iii) ஒரு மாதத்திற்கு முன்பாயின் கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டணத்தில் நூற்றுக்கு பதினைந்து வீதம் ;

(iv) பதினைந்து நாட்களுக்கு முன்பாயின் கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டணத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து வீதம் ;

(v) ஏழு நாட்களுக்கு முன்பாயின் கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டணத்தில் நூற்றுக்கு ஐம்பது வீதம் ;

(vi) மூன்று நாட்களுக்கு முன்பாயின் கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டணத்தின் நூற்றுக்கு எழுபத்து ஐந்து வீதம்;

நகர சபை நிதியில் தடுத்து வைப்பதற்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

(2) ஒதுக்கப்பட்டுள்ளதை இரத்துச் செய்வதற்காக வேண்டுகோள் விடுப்பது, விளையாட்டு மைதானம் ஒதுக்கப்பட்டுள்ள திகதிக்கு மூன்று நாட்களுக்குக் குறையாத காலமாயின் செலுத்தப்பட்ட கட்டணம் மீண்டும் செலுத்தப்படமாட்டாது.

(3) ஏதாவது ஒதுக்கப்படுதல் இரத்துச் செய்யப்படும் போது அங்கு ஒதுக்கப்படுவதற்காக செலுத்தப்பட்ட வைப்புத் தொகை முழுமையாக திரும்ப பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பத்தாரிக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

7. எவராவது ஒருவரினால் ஒதுக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானம் ஒதுக்கப்பட்ட பணிகளைத் தவிர வேறு எவராவது அல்லது பணிகளுக்காக பாவிப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.

8. மைதானமொன்று ஒதுக்கப்படுவதற்காக வழங்கப்பட்டுள்ள உத்தரவுப் பத்திரம் எவராவது அல்லது காரணங்களின் அடிப்படையில் வேறு ஒருவருக்கு வழங்கப்படலாகாது.

9. எவராவது அல்லது ஒருவரினால் விளையாட்டு மைதானம் ஒதுக்கப்படுவதற்காக செய்யப்படும் வேண்டுகோளுக்கு இடமளிக்கப்படாத சந்தர்ப்பத்தில், அவ்வாறு இடமளிக்காமைக்குரிய காரணங்களை குறிப்பிட்டு அதுபற்றி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட அந்நாளிலேயே அவ்விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலம் அறிவிப்பது தலைவரின் பணியாகும்.

10. ஏதாவது பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானமொன்று, அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள திகதியில் மாற்றம் செய்வதற்கு தேவையாயின் விண்ணப்பதாரியினால் அது தொடர்பாக எழுத்துமூலம் சபைத் தலைவருக்கு வேண்டுகோள் விடுக்க முடியும். அத்தகைய வேண்டுகோளுக்கு அமைய ஒதுக்கப்பட்டுள்ள திகதி திருத்தம் செய்யப்படுவது 4 ஆவது மற்றும் 5 ஆவது துணை விதியின் பணிப்புகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

11. இத்துணைவிதியில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய விளையாட்டு மைதானம் ஏதாவது பணிகளுக்காக ஒதுக்கப்படாத ஏதாவது சந்தர்ப்பமொன்றில் அவ்விளையாட்டு மைதானம் விளையாடுவதற்கு அல்லது விளையாட்டு, பயிற்சி அலுவல்களுக்கு அல்லது அதற்காக உபயோகிப்பதற்கு இடமளிப்பது சபைத் தலைவரின் பணியாகும்.

12. ஏதாவது பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானம் உரிய பணிகளுக்காக பாவிக்கப்படுவதுடன் நகர சபையில் வைப்புச் செய்யப்பட்டுள்ள வைப்புத் தொகையில் –

(1) விளையாட்டு மைதானம் அல்லது அதில் ஒரு பகுதிக்கு அல்லது ஏற்பட்டுள்ள ஏதாவது நட்டமொன்றுக்கு அந்நட்டத்தின் பெறுமதி ;

(2) விளையாட்டு மைதானம் ஒதுக்கப்பட்டுள்ள காலவரையறைக்கு கூடுதலான மேலதிக காலத்திற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் குறைக்கப்படுவதுடன் அத்துடன் எஞ்சியிருக்கும் ஏதாவது தொகை மட்டும் விண்ணப்பதாரிக்கு மீள செலுத்தப்படல் வேண்டும்.

13. எவராவது அல்லது ஒருவரினால் நகர சபைக்குரிய ஏதாவது விளையாட்டு மைதானம் ஒன்றிற்கு பாதிப்பு ஏற்படுத்தல் அல்லது பாதிப்பு ஏற்படுத்துவதற்கு திட்டமிடாமல் இருப்பதுடன், விளையாட்டு மைதானத்தினுள் மாடுகள், பன்றிகள், குதிரைகள் அல்லது நாய்கள் என்பவற்றை நுழைவதற்கு இடமளிக்காதிருத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு மேலும் சபைத் தலைவரிடமிருந்து பெறப்பட்ட உத்தரவு இன்றி எத்தகைய வாகனங்களும் அல்லது எவராவது விளையாட்டு மைதானத்திற்குள் உட்பிரவேசிக்கப்படலாகாது.

14. இத்துணைவிதியின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ஏதாவது விளையாட்டு மைதானத்தில் அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள தினத்தில் நகர சபை ஏதாவது அத்தியாவசிய பணிகளுக்காக தேவைப்படும் போது, அவ் ஒதுக்கப்பட்ட கட்டளையை இரத்துச் செய்வதற்கு சபைத் தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருப்பினும் அத்தகைய இரத்துச் செய்தலை நடைமுறைப்படுத்துவதாயின், அங்கு இரத்துச் செய்யப்பட்ட விளையாட்டு மைதானம் ஒதுக்கப்பட்டுள்ள திகதிக்கு மூன்று நாட்களுக்கு முன்பு விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலமும் அறிவித்தல் கொடுக்கப்பட்டு அவரினால் செலுத்தப்பட்ட கட்டணம் மற்றும் வைப்புத் தொகை என்பவற்றை முழுமையாக அவருக்கு மீள செலுத்தப்பட வேண்டும். மேலும் அவ்வாறு அத்தகைய இரத்துச் செய்தலை ஒதுக்கப்பட்டுள்ள தினத்திற்கு முன்பு மூன்று நாட்களுக்குக் குறையாத காலத்தினுள் செய்யப்படலாகாது.

15. இத்துணைவிதியை எவராவது அல்லது ஏற்பாடுகளை கட்டுமீறுதல் அல்லது முரணான வகையில் செயல்படுத்தல் என்பன குற்றமாவதுடன், குற்றம் சம்பந்தமாக குறித்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத்தின் ஊடாக அக்குற்றத்திற்கு குற்றவாளியாக குற்றம் சுமத்தப்படும் போது பணிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய தண்டனை மற்றும் அத்தகைய கட்டு மீறுதல் அல்லது முரணாக செயல்படுதல் என்பவற்றைத் தொடர்ந்து மேலும் செய்யும் போது அது தொடர்பாக குற்றவாளியாக ஆக்கப்பட்ட பின்பு அல்லது அத்தகைய முரணான செயல்பாட்டின் மீது கவனம் செலுத்தப்பட்டு தலைவரினால் அல்லது அதிகாரம் வழங்கப்பட்டுள்ள வேறு உத்தியோகத்தரினால் எழுத்துமூலமான அறிவித்தல் ஒப்படைக்கப்பட்ட பின்னர் கட்டுமீறுதல் அல்லது முரணாக செயல்படுதல் என்பவற்றை மேலும் தொடர்ந்து செய்யும் ஒவ்வொரு நாளுக்குமாக பணிக்கப்படக்கூடிய மேலதிக தண்டனையின் ஆகக்கூடியது முறையே 1987 ஆம் ஆண்டின் பணிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டப் பணம் மற்றும் மேலதிக தண்டப்பணத்திற்கும் ஆளாகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

16. வசனங்கள் சம்பந்தமாக பொருள் கோடல் தேவைப்பட்டால் மாத்திரமன்றி–

"சபை" என்பது, நகர சபை என கருதப்படும் ;

"தலைவர்" நகர சபையின் தலைவர் என கருதப்படும் ;

"நகர சபை பிரதேசம்" என்பது நகர சபையை உள்ளடக்கும் பிரதேசம் என கருதப்படும் ;

"விளையாட்டு மைதானம்" என்பது, விளையாடுவதற்காக நகர சபையினால் ஒதுக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ள ஏதாவது விளையாட்டு மைதானம் என கருதப்படுவதுடன் விளையாட்டு மைதானத்தைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள மதில் அல்லது வேலி அல்லது அதனுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏதாவது கட்டிடமொன்றில் அல்லது அது ஏதாவது நிர்மாணத்தின் பகுதி அல்லது ஏதாவது பொறுத்தப்பட்டிருக்கும் அல்லது உபகரணங்களும் அதில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

"விளையாட்டு" என்பது 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் அதற்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணமாகக் கருதப்படும்.

**முதலாவது அட்டவணை**

.............................................. நகர சபை.................................. விளையாட்டு மைதானத்தை கையாள்வதற்கான அனுமதி பெற்றுள்ள விண்ணப்பப்படிவம்.

1. விண்ணபத்தாரியின்முழுப்பெயர் :.......................................................................................................................
முகவரி :.......................................................................................................................................
தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :.......................................................................................

2. விளையாட்டு மைதானத்தை வேண்டுகோள் விடுக்கும் காரணம் :..................................................................................

3. தேவைப்படும் திகதி மற்றும் காலம் :.....................................................................

| திகதி தொடக்கம் | திகதி வரை | நேரம் |
|---|---|---|
| ............................ | .................... | ............ |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மை என உறுதிப்படுத்துகின்றேன். இவ்வேண்டுகோளுக்கு அமைய உரிய விளையாட்டு மைதானத்தை ஒதுக்கப்பட்டுத் தந்தால் ஏதாவது பாதிப்புகள் ஏற்பட்டால் அந்நட்டத்தை வைப்புச் செய்யப்பட்டுள்ள தொகையில் நகர சபையினால் அறவிடுவதற்கு இணங்குவதுடன், அந்த வைப்புத் தொகை அறவிடுவதற்கு போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில் மேலும் தேவையான நிதித்தொகையை நகர சபைக்கு செலுத்துவதற்கு இணங்குகின்றேன். அவ்வாறு விளையாட்டு மைதானத்தை ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பான துணைவிதியின் ஏற்பாடுகளை பின்பற்றி ஏற்று நடப்பதற்கு இணங்குகின்றேன்.

............................................................
விண்ணப்பத்தாரியின் கையொப்பம்.

திகதி :

**இரண்டாவது அட்டவணை**

விளையாட்டு மைதானத்தை கையாளுவதற்கு அறவிடப்படும் கட்டண விபரம் .

| விளையாட்டு மைதானத்தின் பெயர் | கட்டணம் ரூபா சதம் | வைப்புத் தொகை ரூபா சதம் | மேலதிக ஒரு மணித்தியாலயத்திற்கு ரூபா சதம் |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4.<br>5. | | | |

**இறைச்சி விற்பனை நிலையங்கள் தொடர்பான துணைவிதி**

1. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்தினுள்ள இறைச்சி விற்பனை நிலையங்களை ஒழுங்குபடுத்தல் மேற்பார்வை செய்தல், மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பாகவும், அதற்கான கட்டணங்களை அறவிடுதல் என்பதற்காக நிறைவேற்றப்படுவதாகுக.

2. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்தினுள் இறைச்சி விற்பனை செய்தல் தொடர்பான துணைவிதியென்று எடுத்துக்காட்டப்படலாம்.

3. நகர சபை அதிகார பிரதேசத்தினுள் எவராவது அல்லது ஒருவரினால் நகர சபை தலைவரினால் இத்துணைவிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் உத்தரவுப் பத்திரமின்றி இறைச்சி விற்பனை செய்தல் பணிகளுக்காக எந்த ஒரு இடத்தையும் பாவிக்கப்படலாகாது.

4. இத்துணைவிதியின் கீழ் உத்தரவுப் பத்திரமொன்றை பெறுவதற்காக விண்ணப்பிக்கும் வியாபார நிலையம் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக இருந்தால் மட்டுமேயன்றி தலைவரினால் எவராவது அல்லது ஒருவருக்கு இறைச்சி விற்பனை வியாபார நிலையமொன்றை கொண்டு நடாத்துவதற்குரிய உத்தரவுப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

(1) இறைச்சி விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படும் பகுதி தரை ஓடுகள் பதிக்கப்பட்டு பூச்சு வேலைகள் சீமெந்துக் கலவை அல்லது துருப்பிடிக்காத உலோகத் தகடுகள் அல்லது பயன்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) இறைச்சி விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படும் நிலையத்தின் நிலம் மற்றும் களஞ்சியப்படுத்தப்படும் நிலையத்தின் நிலம் என்பன சீமெந்து கலவையினால் மட்டப்படுத்தப்பட்டு அல்லது தரை ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) கழிவுநீர் வடிந்து செல்லும் வசதிக்காக தேவையான சரிவான தன்மைகளுடன் சீமெந்துக் கலவையினால் பூச்சு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு தரை ஓடுகள் பதிக்கப்பட்ட வடிகால்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வடிகால்களில் வடிந்து செல்லும் கழிவு நீர் மார்க்கங்களுக்குள் வடிந்து செல்வதை தவிர்த்துக் கொள்வதற்கு உறிஞ்சிக் கொள்வதற்கு ஏற்றவகையில் குழிகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) கழிவுநீர் வடிந்து செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள உறிஞ்சக்கூடிய குழி காற்றுடன் துர்நாற்றம் கலக்கப்படாத வகையில் நன்றாக மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) இறைச்சி விற்பனை நிலையத்தில் அகற்றப்படும் உக்கல் கழிவுகளை மூடிவைப்பதற்கான போதுமான அளவில் தொட்டிகள் அமைக்கப்பட்டிருப்பதுடன் நாளாந்த வியாபார நடவடிக்கைகளின் இறுதியில் அங்குள்ள கழிவுப் பொருட்களை நிலமட்டத்திலிருந்து குறைந்த அளவு 0.5 மீற்றர் ஆழத்தில் குழியொன்றை அமைத்து அதில் இடுதல் அல்லது நகர சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படும் செயற்பாட்டு முறைகளுக்கு அமைய அவை அகற்றப்படல் வேண்டும்.

(7) நிலையத்தில் சேவையாற்றும் பணியாளர்களின் பாவனைக்காக போதுமான மலசலகூட வசதிகள் இருப்பதுடன் மலசலகூடங்களின் பாவனைக்கு மேலதிகமாக பாவிக்கப்படுவதற்கு பொறுத்தமான சுகாதார பராமரிப்பு முறைகள் மற்றும் அதற்கான பொருட்கள் என்பனவும் இருத்தல் வேண்டும்.

5. பசுவதைச் சட்டத்தின் பணிப்புகளின் கீழ் ஒழுங்கு முறையிலான உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள அல்லது கொல்லப்படும் இடத்தில் மரணிக்கப்பட்ட ஏதாவது விலங்குகளின் இறைச்சிக்காக இருந்தால் மட்டுமேயன்றி, எவராவது அல்லது இறைச்சி விற்பனை நிலையத்தில் விற்பனைக்காக அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தல் அல்லது எவராவது ஒருவரினால் மேற்கொள்ளப்படலாகாது.

6. உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள எவராவது அல்லது இறைச்சி வியாபார நிலையத்தின் நாளாந்த கருமங்களின் இறுதியில் அந்நிலையத்தின் நிலப்பகுதி, சுவர்கள் என்பனவற்றில் தரை ஓடுகள் பதிக்கப்பட்டு அல்லது சீமெந்துப் பூச்சு வேலைகள் செய்யப்பட்ட பகுதிகள் மற்றும் இறைச்சி வெட்டுவதற்காக எடுக்கப்படும் பகுதிகள், உபகரணங்கள் இறைச்சி விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படும் இடங்கள் என்பனவற்றை கிருமிநாசினிகளைக் கொண்டு கழுவப்பட்டு சுத்தமாக வைத்திருப்பதற்கான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

7. உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள எவராவது அல்லது இறைச்சி விற்பனை நிலையத்தின் மற்றும் அதனைச் சூழவுள்ள வடிகால்களையும் இறைச்சி களஞ்சியப்படுத்தப்படும் பகுதிகள் அல்லது விற்பனை மற்றும் சம்பந்தமாக உபயோகிக்கப்படும் சகல பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் சிறந்த புதுப்பித்தலுடன் மற்றும் துர்நாற்றம் இன்றி பேணப்படுதவற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

8. உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தின் நாளாந்த அலுவல்கள் முடிவுற்றவுடன் விற்பனை செய்யப்படாத எஞ்சிய இறைச்சிகளை அதிகூடிய சக்தி வாய்ந்த குளிரூட்டிகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதுடன், மற்றும் அவை களஞ்சியப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களிலிருந்து அடுத்த நாள் இறைச்சி விற்பனை நிலையம் திறக்கப்படும் வரை அக்குளிரூட்டி உரிய முறையில் இயங்கி வந்துள்ளது என காணப்பட்டால் மாத்திரமேயன்றி இல்லையேல் எஞ்சிய ஏதாவது அல்லது இறைச்சியை அடுத்த நாளில் விற்பனைக்காக காட்சிப்படுத்துவது அல்லது அதி சக்திவாய்ந்த அக்குளிரூட்டியை அல்லது உத்தரவு பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் வைத்திருப்பது அல்லது தவிக்கப்படல் வேண்டும்.

9. எவராவது அல்லது பசுவதை செய்யப்படும் இடத்தினுள் ஏதாவது ஒரு தினத்தில் அல்லது காலக்கட்டத்தினுள் இறைச்சிக்காக விலங்குகள் கொள்ளப்படுவதை தடை செய்யப்பட்டு அல்லது பசுவதை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அதிகாரத்தினால் பணிப்புரை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் எவராவது அல்லது இறைச்சிக் கடையொன்றில் வியாபாரத்தின் பொருட்டு இறைச்சியை வைத்திருத்தல் அல்லது விற்பனைக்காக இறைச்சியை காட்சிப்படுத்தல் அல்லது களஞ்சியப்படுத்தல் என்பன மேற்கொள்ளப்படலாகாது.

10. உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள எவராவது அல்லது இறைச்சி வியாபார நிலையத்தில் நாய், பூனை, எலி, கிருமிகள் அல்லது ஏனைய அல்லது விலங்குகளின் நடமாற்றம் இன்றி பேணப்படல் வேண்டும்.

11. உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் இறைச்சிகளை போட்டு வைப்பதற்கு அல்லது தயாரிப்பதற்கு அல்லது விற்பனை செய்வற்கு பாவிக்கப்படும் உபகரணங்கள் அல்லது பாத்திரங்கள் தவிர்ந்த ஏனைய பொருட்கள் அல்லது உடைகள் அல்லது நித்திரை கொள்வதற்காக பயன்படுத்தப்படும் பாய்கள் அல்லது வேறு ஏதாவது பொருட்கள் வைத்திருக்கலாகாது.

12. உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் பணியாற்றும் பணியாளர்களின் பாவனைக்காக குடிப்பதற்கு பொறுத்தமான நீர் போதிய அளவில் வைத்திருத்தல் வேண்டும்.

13. (1) ஏதாவது தொற்று நோய், தொடுநோய் அல்லது சர்ம நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது மிக அண்மையில் அத்தகைய நோய்களினால் பீடிக்கப்பட்டிருக்கும் எவராவது அல்லது ஒருவர் அல்லது அத்தகைய ஏதாவது நோயினால் பிடிக்கப்பட்டிருக்கும் ஒருவருக்கு அண்மையில் பரிகாரம் செய்யப்பட்டு வரும் ஒருவருக்கு அந்நோயின் கிருமிகள் அழிவடையும் கால எல்லைக்குள் உட்பட்டிருந்தால் மட்டுமேயன்றி எவராவது உத்தரவுப் பத்திரம் பெறப்பட்டுள்ள நிலையத்தில் பணிகளில் ஈடுபட்டுள்ள எவராவது ஒருவருக்கு அல்லது அவரின் உதவியாளருக்கு அல்லது பணியில் ஈடுபடுத்துவதற்கு அல்லது ஈடுபடச் செய்தல் அல்லது ஏதாவது பணிகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்படலாகாது.

(2) நன்றாக துவைக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ள உடைகளை அணிந்துள்ளவர்களைத் தவிர ஏவராவது ஒருவரினால் உத்தரவுப் பத்திரம் பெறப்பட்ட நிலையத்தில் ஏதாவது முறைகளில் பணிகளில் ஈடுபடுத்தல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் அல்லது மேற்கொள்ளப்படலாகாது.

(3) உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல பணியாட்களையும் வருடத்திற்கு ஒரு முறையாவது வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துவது உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

14. இறைச்சி வியாபார நிலையத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள சகல பணியாட்களுக்கும் பாதுகாப்பான முகக் கவசங்கள் கையுறைகள் மற்றும் தேவையான ஏனைய பாதுகாப்பான அணிகள் வழங்கப்படுவதுடன், அச்சேவையாளர்கள் இறைச்சி வியாபார நிலையத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள சகல சந்தர்ப்பங்களிலும் அத்தகைய பாதுகாப்பான உடைகளை அணிந்துள்ளார்களா? என்பதை உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள பயனாளி கவனித்து வருவது அவரது பணியாகும்.

15. உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் சேவையாற்றும் சகலருக்கும் அவர்களது பிரயோகத்திற்காக சோப் மற்றும் சோப் கலவை நீர் என்பன வைத்திருப்பது உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

16. தலைவரினால் அல்லது அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரினால் ஏதாவது இறைச்சி விற்பனை நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள அல்லது உள்ளே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஏதாவது இறைச்சி வகைகளின் மாதிரியை அங்கு கொள்வனவு செய்வது சட்டரீதியானதாகும். எனினும் அதைத்தவிர எவராவது அல்லது உத்தரவுபத்திரம் பெற்றுள்ள பயனாளியினால் அவ்வாறு கொள்வனவு செய்வதை மறுப்பது அல்லது தடை ஏற்படுத்துவது என்பன மேற்கொள்ளப்படலாகாது.

17. (1) உத்தரவுப்பத்திரம் பெறப்பட்டுள்ள நிலையத்தினுள் உருவாகும் சகல கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்பட்டால் மாத்திரமேயன்றி ஏனைய கழிவுப் பொருட்கள் :-

(i) உக்கல்கள் கழிவுப் பொருட்கள் ;

(ii) கண்ணாடி ;

(iii) கடதாசி அல்லது கடதாசியிலான பொருட்கள் ;

(iv) பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் மற்றும் பிளாஸ்டிக்கில் ஆன பொருட்கள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகங்கள் மற்றும் இரும்பு மற்றும் ஏனைய உலோகங்களின் பகுதிகள் ;

(vi) உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் ஏனைய மூலப்பொருட்களின் எஞ்சிய பகுதிகள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கும் மற்றும் துணை உற்பத்திப் பொருட்களின் பகுதிகள் ;

(vii) தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள்.

போன்ற வகைகளின் கீழ் வகைப்படுத்துவதற்கு திட்டமிடப்படுவதுடன் ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களையும் சேர்த்து வைப்பதற்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள வெவ்வேறான பாத்திரங்கள் அல்லது தொட்டிகளில் போடுவதற்கும் திட்டமிடப்படுவது உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

(2) மேலுள்ள (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முறையில் வகைப்படுத்தப்பட்டு பாத்திரங்கள் அல்லது தொட்டிகளில் போடப்பட்டுள்ள கழிவுப் பொருட்கள் நகர சபை கழிவு பொருட்களின் முகாமைத்துவத்தின் வேலை ஒழுங்குகளின் கீழ் அகற்றப்பட்டால் மாத்திரமேயன்றி இல்லையேல் தலைவரினால் அதற்காக பணிக்கப்பட்டுள்ள முறையின் கீழ் இறுதி அகற்றுதல் மேற்கொள்ளப்படும்.

18. இத்துணைவிதியின் பணிப்புரைகளை பரிசீலனை செய்வதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் பரிசீலனை செய்வதற்கு அதிகாரம் கிடைத்துள்ள உரிய காலம் என்பது இறைச்சி வியாபார நிலையத்தில் இறைச்சி வியாபாரம் செய்யப்படும் எந்த சந்தர்ப்பமாகவும் அது கருதப்படும்.

19. இத்துணைவிதியின் கீழ் உத்தரவுப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதாவது இறைச்சி விற்பனை நிலையத்தினை கொண்டு நடாத்தப்படும் நிலையம் 4 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள யாராவது அல்லது பணிப்புரைகளுக்கு அமைவாக நடாத்தப்பட்டு அவை முடிவுற்றால், அல்லது இத்துணைவிதியின் வேறு ஏதாவது துணைவிதியின் பணிப்புரைகளுக்கு முரணாக செயல்படும் சந்தர்ப்பத்தில் நிலையாக குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்பு அந்நிலையம் அப்பணிப்புரைகளுக்கு இசைவான நிலையில் கொண்டு வரப்பட்டு தேவையான சகலதையும் நிலை நாட்டுமாறு உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ளவருக்கு பணிக்கப்படும் அறிவித்தல் ஒன்று தலைவரினால் அந்த உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு ஒப்படைப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

20. 19 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கமைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எவராவது அல்லது உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ளவரினால் அவ் அறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ள முறைக்கு அமைவாக செயல்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் விடயங்கள் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சில சந்தர்ப்பங்களில் அவ் அறிவித்தலில் நிலையாக குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கு சபைத்தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். அப்படி இருந்தும் அம்முடிவுக்கு அமைவாக நீடிக்கப்படவேண்டிய காலம் பதினான்கு நாட்களுக்கு மேற்படலாகாது.

21. 20 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எவராவது அல்லது உத்தரவு பத்திரம் பெற்றுள்ளவரினால் அவ் அறிவித்தலில் நிலையாக பணிக்கப்பட்டுள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன்பு அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ள முறைக்கு அமைவாக செயற்படுவதை தட்டிக் கழிக்கும் சந்தர்ப்பத்தில் அவ் நிலையத்திற்காக வழங்கப்பட்டுள்ள உத்தரவுப்பத்திரத்தை சபைத்தலைவரினால் இரத்துச் செய்யப்படுவது சட்டரீதியானதாகும். ஒதுக்கப்பட்டுள்ள ஓய்வு அறை அல்லது உணவு உண்ணப்படும் அறை என்பன இதற்கு உட்படுத்தலாகாது.

22. இத்துணைவிதியை எவராவது அல்லது ஏற்பாடுகளைக் கட்டு மீறுதல் அல்லது முரணாக மீறுதல் என்பன குற்றமாவதுடன் அந்த குற்றம் சம்பந்தமாக குறித்த அதிகாரம் கொண்டுள்ள நீதிமன்றத்தின் ஊடாக அக்குற்றத்திற்கு குற்றவாளியாக காணப்படும் போது பணிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டனை மற்றும் அதனை கட்டு மீறுதல் அல்லது முரணாக தொடர்ந்து மேலும் செயற்படும் போது அது தொடர்பாக குற்றவாளியாக கொள்ளப்படவில்லை அல்லது அத்தகைய முரணான செயல்பாட்டில் கவனம் செலுத்தப்பட்டு தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்றுள்ள வேறு உத்தியோகத்தரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒப்படைக்கப்பட்ட பின்னர் கட்டுமீறுதல் அல்லது முரணாக மேலும் தொடர்ந்து செய்து வரும் அனைத்து ஒவ்வொரு நாளுக்குமாக பணிக்கப்பட்டுள்ள மேலதிக தண்டனைகள் ஆகக்கூடியது முறையே நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (2) ஆவது உப்பிரிவில் பணிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டனை ஆகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

23. வசனங்கள் தொடர்பாக பொருள்கோடல் தேவைப்பட்டால் மாத்திரமே இத்துணை விதியில் –

"சபை" என்பது, நகர சபை என கருதப்படும் ;

"தலைவர்" நகர சபையின் தலைவர் என கருதப்படும் ;

"நகரசபை பிரதேசம்" என்பது, நகர சபை அமைக்கப்பட்டுள்ள அதிகார பிரதேசத்திற்கு உட்பட்ட பிரதேசம் என கருதப்படும்.

**ஈமச்சடங்கு சேவைகளை வழங்கும் நிலையம் தொடர்பான துணைவிதி**

1. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்தினுள்ள ஈமச்சடங்கு சேவைகளை வழங்கும் நிலையங்களை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்றவற்றை நிறைவேற்றப்படுவதாகுக.

2. இத்துணைவிதி நகர சபை அதிகார பிரதேசத்தினுள் ஈமச் சடங்கு சேவைகளை வழங்கும் நிலையம் தொடர்பான துணைவிதியென எடுத்துக்காட்டப்படலாம்.

3. எவராவது ஒருவரினால் இத்துணைவிதியின் கீழ் நகர சபை தலைவரினால் பெறப்பட்டுள்ள உத்தரவுப்பத்திரத்தின் கீழ் மட்டுமேயன்றி தவிர ஈமச் சடங்கு சேவைகளை வழங்கும் நிலையத்தை கொண்டு நடாத்தலாகாது.

4. மூன்றாவது துணைவிதியின் கீழ் வழங்கப்படும் சகல உத்தரவுப் பத்திரங்களும் தலைவரினால் முன்னர் இரத்துச் செய்யப்பட்டால் மாத்திரமே மட்டுமன்றி அது வழங்கப்பட்டுள்ள ஏதாவது வருடம் ஒன்றிற்காக அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று முடிவடைதல் வேண்டும்.

5. இத்துணை விதியின் கீழ் குறிப்பிடப்படும் பணிப்புகள் அம்முறையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் மட்டுமேயன்றி, நகர சபைத் தலைவரினால் ஈமச்சடங்கு சேவைகளை வழங்கும் நிலையமொன்றுக்கு உத்தரவுப்பத்திரம் வழங்கப்படலாகாது.

(1) ஈமச்சடங்கு சேவைகளை வழங்கும் நிலையமொன்றை கொண்டு நடாத்தப்படும் கட்டிடமொன்றின் உட்பகுதியில் பூதவுடல்களை தயார்படுத்தும் பணிக்காக தனியாக அறையொன்று அமைக்கப்பட்டிருப்பதுடன், அவ் அறையில் ஒருவரது பூதவுடல் தயார் செய்யப்படுவதற்காக குறைந்த அளவு சதுர மீற்றர் ஒன்பதுக்கும் குறையாத இடப்பரப்பு இருத்தல் வேண்டும். அது போன்று அப்பணிகளை நிறைவேற்றுவதற்கு போதுமான கொன்கிறீட் மேடை ஒன்றும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) பூதவுடல்களை தயார்படுத்தும் அறைகள் எப்போதும் ஈமச்சடங்கு சேவைகளை வழங்கும் நிலையத்தில் காட்சிப்படுத்தப்படும் மண்டபத்திலிருந்து தனியாக அமைக்கப்பட்டிருப்பதுடன், வெளிநபர்கள் எவரும் உத்தரவு இன்றி உட்பிரவேசிப்பதற்கு முடியாத வகையில் தடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) பூதவுடலை தயார்படுத்தும் அறைகளில் உட்பகுதிக்கு சுத்தமான காற்று கிடைக்கும் வகையில் அறையின் மொத்த சதுர அடியில் ஏழில் ஒன்றுக்கு குறையாத அளவு ஜன்னல் கதவுகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) பூதவுடல் தயார்படுத்தப்படும் போது அகற்றப்படும் பூதவுடலின் பகுதிகள் தற்காலிகமாக போடப்பட்டு மூடிவைப்பதற்கு ஏற்ற பாத்திரங்கள் அல்லது தொட்டிகள் வைத்திருப்பதுடன், அப்பணிகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் பூதவுடலிலிருந்து வெளியே செல்லும் இரத்தம் அல்லது ஏனைய ஏதாவது ஊனங்கள் அல்லது பூதவுடலை கழுவ வேண்டுமாயின் அதன் அசுத்த நீரை சேகரிப்பதற்கு வெளிப்படையாக தெரியாத மற்றும் ஈ, எலி அல்லது விலங்கினங்களுக்கு உட்பிரவேசிக்க முடியாத வகையில் நன்றாக மூடி வைக்கக்கூடிய வகையிலான தொட்டிகள் அல்லது பாத்திரங்களை வைத்திருப்பதுடன் அக்கழிவுப் பொருட்களை எந்தக் காரணம் கொண்டும் பொதுக் கால்வாய்கள் பொது நீரோட்டங்கள் வடிகால்கள் அல்லது திறந்த வெளி நிலங்களுக்குள் வடிந்து செல்வதற்கு இடமளிக்கப்படலாகாது.

(5) உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக பூதவுடல் வைத்திருப்பதற்கேற்ற இடவசதிகள் ஏற்படுத்தப்படும் போது ஏதாவது ஒருவருடைய பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு வருகை தரும் அனைவருக்கும் வசதிகளை ஏற்படுத்தும் வகையில் போதுமான அளவு இருக்கைகளின் எண்ணிக்கைகள் அதிகரிக்கப்படுவதுடன் வருகை தருவோரின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு ஏற்ற வாகன தரிப்பிடங்களின் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் பூதவுடலை தாங்கி நிற்கும் பிரேதப் பெட்டி, மலர் வலையம் போன்றவற்றை காட்சிப்படுத்தப்படும் மண்டபம் அல்லது அறைகள் கருப்பு நிற கண்ணாடிகளை பயன்படுத்தி வெளியில் தெரியாதபடி அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. ஈமச் சடங்கு சேவைகளை வழங்கும் நிலையங்களுக்காக உத்தரவுப்பத்திரமொன்றை பெறுவதற்கு தேவைப்படும் சகலரும் அவர்களினால் இப்பகுதியின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய பூர்த்தி செய்யப்பட்டு நகர சபை தலைவரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. பூதவுடல் ஒன்றை தயார்படுத்தப்படும் போது அகற்றப்படும் அல்லது அகற்றப்படும் பூதவுடலின் பகுதிகள் நீதிபதி ஒருவரினால் அல்லது திடீர் மரண விசாரணை அதிகாரி அல்லது அவரினால் அது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள கட்டளைகள் ஏதும் இல்லையேல் அப்பகுதியை அப்பணிகள் முடிவடைந்து ஆறு மணித்தியாலயங்கள் முடிவடைந்த பின்னர் நிலத்தின் மேற்பகுதியிலிருந்து 1. 2 மீற்றர் ஆழத்தில் தோண்டப்பட்டுள்ள குழி ஒன்றில் போடப்பட்டு புதைக்கப்படல் வேண்டும்.

8. பூதவுடல் ஒன்றை தயார்ப்படுத்தும் போது அகற்றப்படும் பூதவுடலின் பகுதிகள் தொடர்பாக நீதிபதி ஒருவரினா அல்லது திடீர் மரண விசாரணை அதிகாரியினால் அல்லது அவர்களினால் கட்டளை பிறப்பிக்கப்படும் போது அக்கட்டளைக்கு அமைய செயல்படுவது உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

9. 7 ஆவது துணைவிதியின் பணிகளுக்காக போதுமான அளவு இடவசதி ஈமச் சடங்கு சேவைகளை வழங்கும் நிலையத்தில் இல்லாத சந்தர்ப்பத்தில் சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானம் எடுக்கப்படும் கட்டணம் ஒன்றை செலுத்திய பின்னர் அப்பணியை நகர சபையின் பொது மயானத்தினுள் இத்துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ளபடி ஆழமான குழி ஒன்றில் போடப்பட்டு புதைக்கப்படல் வேண்டும்.

10. பூதவுடல் தயார்படுத்தப்படும் அறையை அடிக்கடி கிருமிநாசினிகளை அழிக்கும் மருந்து வகைகளைக் கொண்டு கழுவி சுத்தப்படுத்தல் வேண்டும்.

11. பூதவுடல்களை தயார்ப்படுத்தும் அறைகளில் சேவையாற்றும் சகல சேவையாளர்களுக்கும் நகர சபை தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்டுள்ள முறையில் பாதுகாப்பான உடைகள், முகக் கவசங்கள் மற்றும் கையுறைகள் வழங்கப்படுவதுடன் மற்றும் பூதவுடல்களை தயார்படுத்தும் சந்தர்ப்பங்களில் அங்கு கடமையாற்றும் பணியாளர்கள் உரிய உடைகளை அணிந்து கடமையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை கவனிக்கும் பொறுப்பு உத்தரவுப்பத்திரம் ஒன்றைப் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

12. உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள நிலையத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள சகல பணியாளர்களும் குறைந்தது வருடத்தில் ஒரு முறையாவது வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவது உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள பயனாளியின் பணியாகும்.

13. பூதவுடலை கொண்டு செல்லும் வாகனம் அல்லது அவ்வாகனத்தின் உட்பகுதி குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு முறை வீதம் சலவை சோடா மூலம் சுத்தப்படுத்தப்படுவதுடன், கிருமி நாசினிகளையும் பயன்படுத்தல் வேண்டும்.

14. அதி கூடுதலான காயங்கள் காரணமாக அல்லது வேறு ஏதாவது காரணங்களினால் தயார்படுத்த முடியாத வகையில் காணப்படும் பூதவுடல்கள் தவிர்ந்த ஏனைய பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் பிரேத பெட்டியின் உட்பகுதி அல்லது பூதவுடல் பூரணமாகவும் அல்லது அவற்றின் ஒரு பகுதி அல்லது அணவல்படுத்தப்படும் பொருட்டு பொலிதீன் அல்லது சிதைவடையாத வேறு பொருட்கள் பாவிக்கப்படலாகாது.

15. நகர சபை தலைவரினால் பணிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய அவரினால் அதற்குப் பதிலாக உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள பயனாளிக்கு வழங்கப்படும் எழுத்துமூலமான உத்தரவு இருந்தால் மட்டுமேயன்றி கொலோரா, பெரிய அம்மை, வைசூரி, மஞ்சள் காய்ச்சல் அல்லது எயிட்ஸ் போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டு இறந்துள்ளார் என கருதப்படும் எவராவது ஒருவரினால் பூதவுடல் ஒன்று உத்தரவுப்பத்திரம் இல்லாமல் கொண்டு செல்வதற்கு அல்லது கொண்டு செல்வதற்கு இடமளிப்பது எவராவது அல்லது ஒருவரினால் மேற்கொள்ளப்படலாகாது.

16. ஏதாவது பூதவுடல் ஒன்றை தயார்படுத்துவதற்கும் மற்றும் ஈமச்சடங்கு நடவடிக்கை ஏற்பாட்டிற்கு பொறுப்பேற்கப்படுவதற்கு முன்னர் அம்மரணம் தொடர்பாக மரணத்தை பதிவு செய்யும் உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டுள்ள ஒழுங்கு முறையான மரணச் சான்றிதழ் தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமேயன்றி, இல்லையேல் அப்பணிகளுக்காக பூதவுடல் ஒன்றை கையேற்பது உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள பயனாளியினால் மேற்கொள்ளப்படலாகாது.

17. ஏதாவது பூதவுடலுக்குரிய மரணம் திடீர் மரணம் என கருதப்படும் போது அல்லது அம்மரணம் சந்தேகத்திற்கு இடமான மரணம் என கொள்ளப்படும் போது நீதிமன்ற நீதிபதி ஒருவரினால் செய்யப்பட்ட திடீர் மரண விசாரணையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அறிக்கையின் மூலம் அப்பூதவுடலின் இறுதிக் கிரியைகள் சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள ஏதாவது கட்டளை ஒன்றாயின் உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள பயனாளி அக்கட்டளையின் ஏற்பாடுகளுக்கு அமைய அதனைப் பின்பற்றல் வேண்டும்.

18. நீதிபதி ஒருவரினால் அல்லது திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அறிக்கையின் ஊடாக அப் பூதவுடலின் இறுதி நடவடிக்கைகள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள ஏதாவது கட்டளையின் உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள பயனாளியினால் அக்கட்டளையின் ஏற்பாடுகளை பின்பற்றல் வேண்டும்.

19. பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் நிலையம் சுத்தமாகவும் மற்றும் சுகாதார பாதுகாப்புகளுடனான வசதிகளுடனும் அமைந்திருக்கக்கூடிய வகையில் அமைந்திருப்பதற்கு உத்தரவு பத்திரம் பெற்றுள்ள பயனாளியினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

20. ஈமச் சடங்கு சேவைகளை வழங்கும் நிலையத்தின் அண்மையில் வதியும் வதிவிடவாளர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வகையிலும் அல்லது அழுத்தங்களை ஏற்படுத்தும் அல்லது ஏதாவது பணிகள் ஈமச் சடங்கு சேவை வழங்கும் நிலையத்தின் சுற்றாடலினுள் மேற்கொள்வது அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளிப்பது அல்லது யாராவது ஒருவரினால் மேற்கொள்ளப்படலாகாது.

21. இத்துணை விதியில் யாராவத அல்லது ஏற்பாடுகளை கட்டுமீறுதல் அல்லது முரணாக செயற்படுதல் என்பன குற்றமாவதுடன், குற்றம் சம்பந்தமாக குறித்து அதிகாரம் பெற்றுள்ள நீதிமன்றத்தின் ஊடாக அக்குற்றத்திற்கு குற்றவாளியாக ஆக்கப்படும் சந்தர்ப்பத்தில் விதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய தண்டம் மற்றும் அந்த கட்டுமீறுதல் அல்லது முரணாக செயற்படுதல் என்பவற்றை தொடர்ச்சியாக மேலும் செய்யப்படும் போது அது தொடர்பாக குற்றவாளியாக ஆக்கப்பட்ட பின்னர் அல்லது அக்கட்டு மீறுதல் பற்றி கவனம் செலுத்தப்பட்டு தலைவரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்று ஒப்படைக்கப்பட்ட பின்னர் கட்டுமீறுதல் அல்லது முரணாக செயற்படுதல் என்பவற்றை மேலும் தொடர்ச்சியாக செய்யப்படும் அனைத்து ஒவ்வொரு நாட்களுக்கும் விதிக்கப்பட முடியுமான மேலதிக தண்டனையின் ஆகக்கூடியது முறையே நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவில் (2) ஆவது உட்பிரிவில் குறித்தொதுக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டப்பணம் ஆகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

22. வசனங்கள் தொடர்பாக பொருள் கோடல் தேவைப்பட்டால் மாத்திரமன்றி :-

''சபை' என்பது, நகர சபை என கருதப்படும் ;

''தலைவர்''நகர சபையின் தலைவர் என கருதப்படும் ;

''அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்'' எனப்படுவது நகர சபைத் தலைவரினால் அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ;

''ஈமச் சடங்கு சேவைகளை வழங்கும் நிலையம்'' என்பது, ஏதாவது பூதவுடல் ஒன்றை சில காலம் வைத்திருப்பதற்கு முடியுமான வகையில் தயார்படுத்தப்பட்டுள்ள அல்லது பூதவுடல் ஒன்றின் இறுதி கிரிகைகளுக்காக தயார்படுத்தப்படும் அல்லது இறுதி கருமங்களுக்காக மயான பூமி வரை கொண்டு செல்லப்படும் வரை ஏதாவது நிதித்தொகையை அறவிட்டு பொதுமக்களின் அஞ்சலிக்காக வைத்திருக்கும் நிலையம் எனப்படும் ;

"பூதவுடல்களை தயார்படுத்தல்" என்பது, இறந்து போன ஒருவரின் பூதவுடலை இறுதி அஞ்சலிக்காக சில நாட்கள் வைத்திருப்பதற்கு முடியுமான வகையில் ஒழுங்குபடுத்தல் அப்பூதவுடலுக்கு ஆடைகளை அணிவித்தல், பூதவுடலை ஏதாவது பிணப்பெட்டியொன்றில் வைத்திருத்தல், அப்பணிகளுக்காக தேவையான ஏனைய எல்லா பணிகளையும் மேற்கொள்ளுதல் என கருதப்படும் ;

"பூதவுடலின் பகுதி ஒன்று" என்பது, மரணித்துள்ள நபரின் பூதவுடலிருந்து அகற்றப்பட்ட ஏதாவது உடலின் அவயவங்கள் அல்லது அதன் ஒரு பகுதி அல்லது உடலின் உள் உறுப்புகள் அல்லது பூதவுடலிலிருந்து அகற்றப்படும் இரத்தம் அல்லது ஏனைய ஊனங்கள் அல்லது இறந்தவர்கள் அச்சந்தர்ப்பத்தில் அணிந்திருந்த உடைகள் அல்லது உடை அல்லது அதன் பகுதி அல்லது இறந்தவரின் உடலில் ஏற்பட்டிருந்த ஏதாவது காயங்கள் அல்லது வேறு காரணங்களினால் அவரது உடலின் உட்பகுதியில் இருந்துள்ள ஏதாவது காயங்கள் அல்லது வேறு காரணங்களினால் அவரது உடலின் உட்பகுதியில் அல்லது காய்ந்த பட்டிகள் அல்லது பஞ்சு போன்ற ஏனைய பொருட்கள் என கருதப்படும் "

## "அ" அட்டவணை

ஈமச் சடங்கு சேவைகளை வழங்கும் நிலையத்திற்காக உத்தரவுப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் பெயர் :........................................................................................................................ ..... .....

2. விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி :........................................................................................................................

3. விண்ணப்பதாரியின் தற்காலிக முகவரி :........................................................................................................................

4. விண்ணப்பதாரியின் தே. அ. அ. இலக்கம் :........................................................................................................................

5. .விண்ணப்பிக்கும் அதிகாரப் பிரதேசம் :........................................................................................................................

6. விண்ணப்பதாரி வதியும் பிரதேசம் ........................................................................................................................

7. உத்தரவுப்பத்திரம் தேவைப்படும் காலம் :........................................................................................................................

8. சேவைகளை வழங்கும் வாகனத்தின் பதிவு இலக்கம் :........................................................................................................................

நகர சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கி ஈமச்சடங்கு சேவைகளை வழங்கும் நிலையத்தை கொண்டு நடாத்துவதற்காக இணங்குவதுடன், அது தொடர்பான துணைவிதி அல்லது அதன் ஏதாவது பிரிவுகளுக்கு முரணாக செயல்படுவது தண்டனைக்குரிய குற்றமென நான் நன்கு அறிவேன்.

திகதி :...........................

..................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

11- 940

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.